விலை: 30
பக்கங்கள்: 28

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 | கதிர் 358 | கார்த்திகை 03ஆம் நாள் | திங்கட்கிழமை | 19 நவம்பர் 2018 | வள்ளுவர் ஆண்டு 2049

## மூடிய அறைக்குள் 3 தலைவர்களும் இரகசியப் பேச்சு?

கொழும்பு, நவ.19
அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் முடிவடைந்த பின்னர் அரச தலைவர் » 25



### வடமாகாண மர நடுகை மாதம்
*கார்த்திகை - 2018*

"மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வறட்சி, நோய்கள், பனிச் சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப்பெருக்குகளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை."

- ஜோன் மூர் -
(அமெரிக்க இயற்கையியலாளர்)

# இரண்டு தரப்புகளும் விடாப்பிடி: இணக்கமின்றி முடிந்தது கூட்டம்

கொழும்பு, நவ.19
சமகால அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் வகையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று நடத்தப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டம் எந்த இணக்கப்பாடுமின்றி முடிந்தது.
மைத்திரி மகிந்த ரணில் தரப்புகளிடையே கடும் வாக்குவாதங்கள் நடைபெற்றன. இறுதியில் இணக்கப்பாடு ஏதுமின்றி ஐக்கிய தேசியக் கட்சி கூட்டத்தில் இருந்து வெளியேறியது.
அரச தலைவர் செயலகத்தில் மாலை 5 மணி முதல் 7 மணி வரை கூட்டம் நடைபெற்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜாதிக ஹெல உறுமய, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி போன்ற கட்சிகள் கூட்டத்தில் கலந்து கொண்டன.
சபாநாயகர் கரு ஜயசூரிய கூட்டத்தைப் » 23

## ஒரே பார்வையில்!

- பொருத்தமான தலைமை அமைச்சரைத் தெரிவு செய்யுங்கள். நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளின்படி ஒரு முடிவைக் காண்போம் என்று ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் கூறினார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.
- நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்தி வைக்க மாட்டேன். நெருக்கடியைத் தீர்க்க ஐ.தே.கவுக்கு பல யோசனைகள் கூறினேன். ஒன்றையேனும் அவர்கள் நிறைவேற்றவில்லை. நான் கூறியபடி நாடாளுமன்றத்தில் நடக்கவில்லை. புதிய தலைமை அமைச்சர் ஒருவரைத் தெரிவு செய்து நாடாளுமன்ற ஒழுங்கின்படி செயற்படுங்கள் என்று மைத்திரிபால கூறினார்.
- நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிக்க நாளை மீண்டும் நடவடிக்கை எடுப்போம் என்றார் ரணில் விக்கிரமசிங்க.
- எனக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றி சபை ஒழுங்குப் பத்திரத்தில் கூட இல்லை. இவர்கள் எப்படி சபை நியமங்களின்படி நடந்தார்கள் என்று நம்புவது என்று கேள்வி கேட்டார் மகிந்த ராஜபக்ச.
- 113 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பட்டியலை அந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகிதம் அரச தலைவர் செயலகத்துக்கு வந்து தர முடியும் என்றனர் ஐ.தே.கவினர். அதை மைத்திரிபால சிறிசேன ஏற்கவில்லை.
- முடிந்தால் 113 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களை சமர்ப்பியுங்கள் என்று சவால் விட்டார் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச.
- கூட்டம் முடிந்தவுடன் மகிந்த ராஜபக்சவுடன் அளவளாவிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் "விஷ் யூ ஹப்பி பேர்த் டே" என்று அவருக்கு வாழ்த்துத் தெரிவித்தார்.

# பிரச்சினைக்கு தீர்வின்றி கூடுகிறது நாடாளுமன்று

கொழும்பு, நவம்பர் 19
நாடாளுமன்றம் இன்று பி.ப. 1 மணிக்கு கூடவுள்ளது. இன்றைய அமர்விலும் குழப்பங்கள் வரலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. அரச தலைவர் மைத்திரிபால தலைமையில் நேற்று இடம்பெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எந்தவொரு இணக்கப்பாடும் எட்டப்படாத நிலையில், நாடாளுமன்றத்தின் இன்றைய அமர்வு இடம்பெறு » 22

## காலை மைத்திரி; இரவு ரணில் பரபரப்பில் இராஜதந்திரிகள்!

கொழும்பு, நவ. 19
நாட்டில் எழுந்துள்ள மிக மோசமான அரசியல் நெருக்கடி தொடர்பாக வெளிநாட்டு இராஜதந்திரிகள் அரச தலைவர் » 23



அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நேற்று அரச தலைவர் செயலகத்தில் நடைபெற்றது. கூட்டம் முடிந்ததும் மகிந்த ராஜபக்ச தனது 73ஆவது பிறந்தநாளைக் கேக் வெட்டிக் கொண்டாடினார். அருகில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நின்று வாழ்த்தினார்.

## மைத்திரி நடத்திய கூட்டத்தை தவிர்த்த சபாநாயகர், ஜே.வி.பி.

கொழும்பு, நவ. 19
நாட்டில் எழுந்துள்ள அரசியல் சிக்கலுக்கு தீர்வு காண்பதற்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கான கூட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தார். இந்தக் கூட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோர் பங்கேற்கவில்லை.
சபாநாயகர் கரு ஜயசூரியா இந்தக் கூட்டத்தில் பங்கேற்கப் போவதில்லை » 25

## சரியானவற்றை செய்யுங்கள் பதவியிலிருந்து விலகுவோம்
### சுதந்திரக் கட்சி கூறுகின்றது

கொழும்பு, நவ.19
நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளின்படி மகிந்த ராஜபக்ச அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறை » 24

**அரசியல் நெருக்கடி**

## நாடாளுமன்ற உறுப்பினர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம்
### *எச்சரிக்கிறார் மகிந்த*

கொழும்பு, நவ. 19
நாட்டில் தற்போது காணப்படும் அரசியல் நெருக்கடி காரணமாக அடுத்த சில நாள்களில் ஓரிரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உயிராபத்து ஏற்படலாம் என்று ஐக்கிய » 22

## பெரும்பான்மையைக் காட்டுவோம்: மைத்திரியிடம் ஐ.தே.க. சவால்

கொழும்பு, நவ.19
ரணில் விக்கிரமசிங்கவைத் தலைமை அமைச்சராக நியமிக்க வேண்டும் என்று கோரி 113 பேரின் கையொப்பத்துடன் அரச » 24

## பேரவைக் கூட்டத்துக்கு சென்ற புளொட்டுக்கு அனுமதி மறுப்பு!

யாழ்ப்பாணம், நவ.19
தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்தில் கலந்துகொண்ட புளொட் அமைப்பின் பிரதிநிதிகள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவரான மருத்துவர் லக்ஸ்மன் அவர்களை வெளியேற்றினார் என்று தெரிவிக்கப்பட்டது.
தமிழ் மக்கள் பேரவையின் கலந்துரையாடல் யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் உள்ள பேரவையின் அலுவலகத்தில் » 25

## நிதியுதவிகளை நிறுத்தியது பன்னாட்டு நாணய நிதியம்

கொழும்பு, நவ.19
இலங்கையில் அரசியல் நெருக்கடி நீடிப்பதால் இலங்கைக்கு வழங்கும் நிதியை நிறுத்தி வைக்க தீர்மானிக்கப்பட்டுள் » 23

## முக்கிய விசாரணைகளை முடக்க மைத்திரி திட்டம்?
### *நிசாந்த டி சில்வாவை பதவி நீக்க உத்தரவு!*

கொழும்பு, நவ.19
கொழும்பில் 11 தமிழர்கள் கடற்படையால் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம், ஊடகவியலாளர் லசந்த » 23

## பேரவையில் இணைந்த கட்சிகள் சுயநலன் பார்ப்பதால் முரண்பாடு
### *சி.வி.விக்னேஸ்வரன் கூறுகிறார்*

யாழ்ப்பாணம், நவ.19
தமிழ் மக்கள் பேரவையுடன் ஒருமித்த கொள்கைகள் கொண்ட கட்சிகள் சில தமக்குள் முரண்பட்டுள்ள நிலமை » 25

## ஈ.பி.ஆர்.எல்.எவ்வை வெளியேற்ற முன்னணி பெரும் பிரயத்தனம்

யாழ்ப்பாணம், நவ.19
நேற்று நடைபெற்ற தமிழ் மக்கள் பேரவைக் கூட்டத்தில் சுரேஸ் பிரேமச்சந்திரன் தொடர்பாக நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது.
வவுனியாவில் சுரேஸ் பிரேமச் சந்திரனின் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு தென்னிலங்கைக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்தது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் » 23

# எட்டுக் கோடி ரூபாவை கரியாக்கிய எம்.பிக்கள்

## பவ்ரல் அமைப்பு குற்றச்சாட்டு

**கொழும்பு, நவ. 19**

**நாடாளுமன்றத்தில்கடந்தமூன்றுநாள்களாகநாடாளுமன்ற உறுப்பினர்கள் செய்த அட்டகாசம் காரணமாக 8 கோடி ரூபாநிதி, மக்கள்வரிப்பணம்வீணடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டி யாராச்சி தெரிவித்தார்.**



அவர்மேலும்தெரிவித்ததாவது,

நாடாளுமன்றத்தில் ஒரு நாளைக்கு ஏற்படும் செலவு 2 கோடியே 53 லட்சம். கடந்த ஆண்டில்95சபை அமர்வுகள்நடாத்தப்பட்டுள்ளன.

இதற்காக 245 கோடி ரூபாவுக்கும் அதிகமான நிதி செலவு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் பணம் செலவு செய்து கூட்டப்படும் நாடாளுமன்றக் கூட்டங்களில் அறிவார்ந்தவிவாதங்கள்நடத்தப்படாதது கவலைக்குரிய விடயம்.

செலவு செய்யப்படும் நிதியைப்பார்க்கும் போது கடந்த மூன்று நாடாளுமன்ற அமர்வுகளுக்கும் சுமார் எட்டுக் கோடிரூபாபொதுமக்களின்பணத்தை செலவு செய்துள்ளனர்.

மக்கள்பிரதிநிதிகள் எனக்கூறிக்கொள்பவர்களினால்மக்களின்பணம்வீண்விரயம் செய்யப்படுகின்றது.

அடித்துக் கொள்வதற்கு நாடாளுமன்றத்துக்கு வருகை தரத் தேவையில்லை.

வெளியில் வேண்டியளவு அடித்துக் கொள்ளலாம். சட்ட ஒழுங்குகளுக்கு ஏற்ப மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய பிரதிநிதிகளை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க மக்கள் கடமைப்பட்டுள்ளனர். - என்றார். (5)

# மகிந்த அரசு செல்லுபடியற்றது கூறுகிறார் எரான் விக்ரமரத்ன

கொழும்பு, நவ. 19

அரசமைப்புக்கு முரணாக சட்டரீதியற்ற முறையில் நியமிக்கப்பட்டுள்ள தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் 122 வாக்குகளால் இரு தடவைகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. மகிந்த அரசு தற்போதுசெல்லுபடியற்றதாகும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எரான்விக்ரமரத்னதெரிவித்துள்ளார்.

நாரஹேன்பிட்டவில் அமைந்துள்ள அவரது இல்லத்தில்நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டபோதே மேற்கண்டவாறு கூறினார். அவர்மேலும்தெரிவித்ததாவது,

அரசமைப்பின் கீழ் இயங்கும் நாடாளுமன்றத்தினுள் அராஜகவாதிகள் போல் செயற்பட்டு நாடாளுமன்றச் சொத்துக்களை சேதப்படுத்தியும், சபாநாயகர் மற்றும் அவரது பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள், ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது தாக்குதல்நடத்தியவர்கள்உடனடியாகக்கைதுசெய்யப்பட்டு அவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். - என்றார். (5)

# இலங்கையும் சிரியாவாக மாறும் காலம் வெகு தொலைவில் இல்லை

## ஜி.ரி.லிங்கநாதன் தெரிவிப்பு

வவுனியா, நவ. 19

இலங்கையும் சிரியாவாக மாறுகின்ற காலம் வெகு தொலைவில் இல்லை என்றுமுன்னாள்மாகாண சபைஉறுப்பினர்ஜி.ரி.லிங்கநாதன்தெரிவித்தார்.

வவனியா் சிதம்பரபுரத்தில் சனசமூகநிலையத்துக்கான புதியகட்டடம்திறந்துவைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம்நடைபெற்றது. இந்த நிகழ்வில்உரையாற்றுகையிலேயேமேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது,

தற்போது நாடாளுமன்றத்தில் நடக்கின்ற விடயங்களைப்பார்க்கும்போதுஒரே ஒருதடவைமாத்திரம்தான் மாகாணசபையில்உறுப்பினர் சிவாஜிலிங்கம் செங்கோலைக்கைப்பற்றுவதற்காகமுயற்சிசெய்திருந்தார். மற்றும்படிஒருநாளும்மிளகாய்ப்பொடியோ, கத்தியோ மாகாணசபைக்கு யாரும் கொண்டு வரவில்லை. நாடாளுமன்றத்தில் நடக்கின்றகேவலமானவிடயம் ஒன்றும் மாகாண சபையில்நடக்கவில்லை.

இன்று மூன்று தனி நபர்கள், மூன்று தலைவர்கள் தங்களுடைய விருப்பு, வெறுப்புகளுக்காக இந்த நாட்டை குட்டிச் சுவராக்கி கொண்டிருக்கின்றார்கள். இந்தவிடயங்கள்தொடர்ந்து நடக்குமாக இருந்தால் சிரியாவில்ஏற்பட்டநிலைதான் இலங்கைக்கும்ஏற்படும்.

சிரியாவின் பிரச்சினைகள் உங்களுக்குத் தெரியும். அங்கே இருக்கின்ற அரச தலைவரை அகற்றுவதற்கானஒருமுயற்சியும்அதை தடுப்பதற்காக அவர் எடுக்கின்ற, எடுத்துக் கொண்ட முயற்சிதான் இன்றைக்கு பல லட்சம் மக்கள் சிரியாவில் கொல்லப்பட்டிருக்கவும், கொல்லப்பட்டுக் கொண்டிருக்கவும் காரணமாகின்றது.

இப்போதும் அரசதலைவர் மைத்திரியும், ஏற்கனவே இருக்கின்ற இரண்டு தலைமை அமைச்சர்களும் கட்சி பேதங்களை மறந்து உடனடியாக இந்த நாட்டில் ஏற்படக்கூடிய இடரைத் தடுக்க வேண்டு மாக இருந்தால்அவர்கள்மூன்று பேரும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்தே ஆகவேண்டும். இல்லை என்றால் இலங்கையும் ஒரு சிரியாவாக மாறுகின்ற காலம் வெகு தூரத்தில் இல்லை - என்றார். (5,110)

# ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் யார் என்பதை நாங்கள்தான் தீர்மானிப்போம்

## அஜித் பி பெரேரா

கொழும்பு, நவ. 19



நாட்டின் தலைமை அமைச்சர் யார் என்பதை ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியே தீர்மானிக்கும். அதேபோன்று, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் யார் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை எவருக்கும் இல்லை. இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

அலரிமாளிகையில்நேற்று இடம்பெற்றஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது,

ஐக்கிய தேசிய முன்னியின் சார்பில் தலைமைம் அமைச்சர் பதவிக்கு யாரை தெரிவு செய்வதென்பதையும் முன்னனியின் உறுப்பினர்களே தீர்மானிப்பார்கள். அடிமைப்படாமல் சுயாதீனமாக இயங்கும் கட்சி என்ற வகையில் கட்சி நடவடிக்கைகளை ஐக்கிய முன்னனியின் உறுப்பினர்களைத் தவிர வேறு எவருக்கும் பகிர்ந்தளிக்க விரும்பவில்லை - என்றார். (5)

# அரசமைப்பை மீறும் மைத்திரிக்கு எதிராக குற்றவியல் தீர்மானம்

## விரைந்து கொண்டுவரப்பட வேண்டும் என்கிறார் பேராசிரியர் சந்திரகுப்த

கொழும்பு, நவ. 19

அரசமைப்புக்கு விரோதமாகச் செயற்பட்டு வரும் அரச தலைவருக்கு எதிராக குற்றவியல் தீர்மானத்தைக் கொண்டு வர வேண்டும் என்றுஜனநாயகத்துக்கான பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசதலைவர்மைத்திரிக்கு வாக்களித்த 62 லட்சம் மக்களை மட்டுமல்ல, அரச தலைவரின் செயற்பாடுகள் தொடர்பாக வெறுப்படைந்துள்ள சகல மக்களுக்கும் இதற்காக அழைப்பு விடுப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

ஜனநாயகத்துக்கான பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் ராஜகிரியாவில் உள்ள நீதியான சமூகத்துக்காக தேசிய அமைப்பின் அலுவலகத்தில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்புநடத்தினர்.

பேராசிரியா சந்திரகுப்த தெனுவர இந்தச் சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர், தலைமை அமைச்சர் பதவியில் இருந்துரணில்விக்கிரமசிங்கவைநீக்கியதுடன்நாடாளுமன்றத்திலும்அதற்குவெளியிலும் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தனதுவிருப்பத்துக்குரணில் விக்கிரமசிங்கவை நியமித்தது போல், மகிந்த ராஜபக்சவை நியமித்ததாக அரச தலைவர் கூறினார். அப்போது அரச தலைவர், 18 ஆவதுஅரசமைப்புதிருத்தச் சட்டத்துக்குஅமையரணில் விக்கிரமசிங்கவை தலைமைஅமைச்சராகநியமித்தார்.

18ஆவது அரசமைப்புத் திருத்தச்சட்டம்மாற்றப்பட்டு, 19ஆவது திருத்தச் சட்டம் பெப்ரவரிமாதம்நிறைவேற்றப்பட்டது. அது அரச தலைவர் மைத்திரிபாலவுக்கு நினைவில் இல்லையா என்று நாங்கள் கேட்கிறோம்.

2015 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அதிக ஆசனங்களைக்கைப்பற்றியரணில் விக்கிரமசிங்க தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டார். இது இரண்டாம் வகுப்பில்படிக்கும்பிள்ளைக்கும் புரியும். இவ்வாறான நிலையிலேயே ஒக்ரோபர் 26ஆம் திகதி வெள்ளிக் கிழமையில் இருந்து தொடர்ந்தும் சட்டத்துக்கு விரோதமாகச் செயற்பட்டு வருகின்றார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் உள்ள முதல் பந்தியை நீக்கி விட்டு அதனை நிறைவேற்றும் தேவை அரச தலைவருக்கு ஏற்பட்டுள்ளது. அரசதலைவருக்கு எதிராக முன்வைக்கப்படும் அரசியல் குற்றப் பிரேரணைக்கு இது காரணமாக அமைந்து விடும் என்ற காரணத்தினால், அதனைநீக்குமாறு கூறுகிறார் - என்றார். (5)

# சபாநாயகருக்கு எதிராக மகிந்த அணி போராட்டம்

கொழும்பு, நவ. 19

நாடாளுமன்றத்தில்சபாநாயகர்கருஜயசூரியவின் நடவுடிக்கைகளுக்கு எதிராகவும், நாடாளுமன்றத்தைக் கலைத்து உடனடியாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்தும்படியும், மக்களின்வாக்குஉரிமையைஉறுதி செய்யுமாறு வலியுறுத்தியும் மாத்தளை நகரத்தில்நேற்றுக்கவனவீர்ப்புஇடம்பெற்றது.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் மாத்தளை பிரதேச சபைத் தலைவர் கபில பண்டார கேன்தெனிய, உறுப்பினர்கள், பிரதேச மக்கள் என்று பலரும் கலந்து கொண்டனர். (5)



# அரச தலைவரின் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப தலைமை அமைச்சரை நியமிக்க முடியாது

### கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவிப்பு

கொழும்பு, நவ. 19

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு உள்ள தரப்பில் இருந்துதான் அரச தலைவர், தலைமை அமைச்சரைத் தெரிவு செய்ய வேண்டும். அரச தலைவரின் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப, அவரைக் கொண்டு வாருங்கள், இவரைக் கொண்டு வாருங்கள் என்று அவர் கூற முடியாது. இவ்வாறு அரச தலைவர் சட்டத்தரணியும், நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு சிங்கள ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணிக்கு மீண்டும் அரசை அமைக்க சந்தர்ப்பம் கிடைத்தாலும், ரணில் விக்கிரமசிங்கவையோ, கரு ஜயசூரியவையோ தலைமை அமைச்சர் பதவிக்கு இடமளிப்பதில்லையென்ற நிலைப்பாட்டில் அரச தலைவர் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றதே? என்று அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர், தலைமை அமைச்சர் யார் என்பதை அரச தலைவர் தீர்மானிக்க முடியாது. பெரும்பான்மைப்பலம் உள்ள தரப்பினாலேயே தலைமை அமைச்சர் யார் என்பதை தீர்மானம் செய்ய வேண்டும். அரச தலைவர் தன்னுடைய கட்சியில் அரசு அமைப்பதாக இருந்தால் மாத்திரமே அவருக்கு வேண்டியவரைத் தீர்மானிக்க முடியும்.

இந்தக் காரணங்களினால் தான் நாம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறைமையை நீக்க வேண்டும் என்று தெரிவித்து வருகின்றோம். நிறைவேற்று அரச தலைவருக்கு அடுத்த கட்சிகள் அழுத்தம் கொடுக்கும் வாய்ப்புக்கள் உள்ளன. இருப்பினும், அவர் அரசமைப்பின் ஊடாக செயற்பட வேண்டியுள்ளார். பெரும்பான்மை பலம் உள்ள கட்சித் ர்மானிக்கும் ஒருவரை அரச தலைவர் தலைமை அமைச்சராக நியமிக்க வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் யாருக்கு பெரும்பான்மை இருக்கின்றது என்பது தெளிவாகவுள்ளது. இது இவ்வாறிருக்கையில் அரச தலைவருக்கு வேண்டிய பிரகாரம் செயற்பட்டால், அது பெரிய சிக்கலை ஏற்படுத்தும்.

இந்த நாட்டின் எல்லா அரச தலைவர்களும் தனது விருப்பு வெறுப்புக்களுக்கேற்பவே செயற்பட்டனர். நாம் கொண்டுவந்த அரச தலைவரும் அவ்வாறு செயற்படுவதானது கவலையளிக்கின்றது - என்றார். (5)

## நாடாளுமன்றத் தேர்தலே பிரச்சினைக்குத் தீர்வு

### பசில் ராஜபக்சவும் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 19

சபாநாயகர் கரு பக்கச் சார்பாகச் செயற்படுகின்றார். அவராலேயே அரசியல் நிலமை மேலும் நெருக்கடிக்குள்ளாகிறது.

இந்த நெருக்கடிக்கு நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்துவதே ஒரே வழி. இவ்வாறு மகிந்த ராஜபக்சவின் சகோதரரும் முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலே் ஒரே வழி என்று மகிந்த, கோத்தா உள்ளிட்ட தரப்பினர் வலியுறுத்தி வரும் நிலையில், பசில் ராஜபக்சவும் அதனையே வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக இரண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானங்களும் தவறான முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. முதலாவதாக நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம், அரச தலைவரின் தீர்மானத்துக்குச் சவால்விடும் வகையில் அமைந்திருந்தது. இது சபாநாயகருக்குத் தெரியும். அவ்வாறான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு அரசமைப்பில் இடமில்லை என்பதும் சபாநாயகருக்குத் தெரியும்.

இரண்டாவது தடவை அரச தலைவர் மைத்திரிபால கூறிய விடயங்களை உள்வாங்கி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். ஆனால், அதனை நாடாளுமன்றச் சம்பிரதாயங்களுக்கு உட்பட்டு முன்னெடுக்கவில்லை. தற்போது எழுந்துள்ள அரசியல் நெருக்கடிக்கு, நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்துவதே ஒரே வழியாக இருக்கும் - என்றார். (5)

## நாடாளுமன்றக் களேபரங்கள்; 6 பேரிடம் வாக்குமூலம் பதிவு

கொழும்பு, நவ. 19

நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட மோதல் தொடர்பில் இதுவரை 6 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த விசாரணைகளுக்காகச் சிறப்புக் குழுவொன்று நிய மிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட மோதலின்போது காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் மருத்துவ அறிக்கைகளையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். இதுவரை பொலிஸ் உத்தியோகத்தர்கள் 5 பேரின் மருத்துவ அறிக்கைகள் கிடைத்துள்ளன.

இதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட மோதலில் 12 பொலிஸார் காயமடைந்தனர்.

காயமடைந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் மருத்துவ அறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கும் விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் சபாநாயகரின் அனுமதியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்றத்துக்குள் கூரிய ஆயுதத்தைக் கொண்டுசென்றமை தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் பொருத்தப்பட்டுள்ள கமராக்களில் பதிவான காட்சிகளை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (5)

## கொண்டாட்டம்



மகிந்த ராஜபக்ச தனது 73ஆவது பிறந்த நாளை நேற்றுக் காலை கொண்டாடினார். அவரது குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் பங்கேற்றிருந்தனர். நாட்டில் அரசியல் நெருக்கடி உச்சம் பெற்றுள்ள நிலையிலும், இந்தக் கொண்டாட்டம் நடைபெற்றுள்ளது.

## ஐ.தே.கவிடமிருந்து மகிந்தவுக்கு வித்தியாசமான வாழ்த்துச் செய்தி

கொழும்பு, நவ. 19

மகிந்த ராஜபக்ச தனது பிறந்த நாளை நேற்றுக் கொண்டாடினார். அவருக்கு அரசியல் தரப்பினர் பலரும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பீ பெரேரா வித்தியாசமான வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

“எங்களுக்கு மிளகாய் பொடி அடித்த மகிந்த ராஜபக்ச அவர்களே! உங்களுக்கு 73 ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்” என்று குறிப்பிட்டுள்ளார். (5)



## மைத்திரி எம்மை ஏமாற்றிவிட்டார்

### கர்தினால் கொதிப்பு

கொழும்பு, நவ. 19

ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு தானும், இத்தபனே தம்மாலங் கார தேரரும் தயாராக இருப்பதாக அரச தலைவரிடம் கூறியதாகவும், அதற்கு இணங்கியிருந்த அவர், திடீரென நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டார். இது எம்மை ஏமாற்றிய நடவடிக்கை. இவ்வாறு கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அரசிதழ் கடந்த 9ஆம் திகதி வரையப்பட்ட போது, அரச தலைவரின் செயலகத்தில், கர்தினால் மல்கம் ரஞ்சித், முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என் சில்வா, ஆகியோர் இருந்தனர் என்றும், தேர்தல் நாள் பற்றிக் கணக்கிடுவதற்காக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவும் அழைக்கப்பட்டிருந்தார் என்றும் சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டிருந்தது.

நாடாளுமன்றக் கலைப்பு சதிக்குப் பின்னால் இந்த மூவரும் இருந்தனர் என்ற குற்றச்சாட்டு வெளியானதை அடுத்து, பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் நேற்றுமுன்தினம் இரவு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த நவம்பர் 9ஆம் திகதி இரவு நான் அரச தலைவர் செயலகத்துக்கு சென்றது உண்மை. அங்கு மகிந்த தேசப்பிரிய இருந்ததைக் கண்டேன். எனினும், சரத் என் சில்வா அங்கு இருக்கவில்லை.

அரச தலைவர் மைத்திரிபாலவை அன்று சந்தித்த போதும், நாடாளுமன்றக் கலைப்பு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. ர்ணில் விக்கிரமசிங்கவுடன் ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு நானும், இத்தபனே தம்மாலங்கார தேரரும் தயாராக இருப்பதாக மைத்திரியிடம் கூறினோம்.

அதற்கு இணங்கியிருந்த அவர், திடீரென நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டார். இது எம்மை ஏமாற்றிய நடவடிக்கை - என்றுள்ளது. (5)

## மைத்திரிபாலவிடமிருந்து வந்தவர்களே மகிந்தவை நெருக்கடிக்குள் தள்ளினார்கள்

### சாடுகிறார் குமார வெல்கம

கொழும்பு, நவ. 19

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகி வந்து மகிந்த ராஜபக்சவுடன் இணைந்து கொண்டவர்களே அவரை அரசியல் நெருக்கடிக்குள் தள்ளியவர்கள் என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

‘இன்றைய அரசியல் நிலமையை அவதானிக்கும் போது மகிந்த ராஜபக்ச யாரோ ஒருவருடைய கயிற்றை விழுங்கியுள்ளதாக நினைக்கிறீர்களா?’ என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர், இந்த நாட்டில் இருந்த மிகவும் பிரபல்யமான அரசியல்வாதி மகிந்த ராஜபக்ச. மைத்திரிக்கோ, ரணிலுக்கோ அவருடைய பிரபல்யத்துடன் நெருங்கவும் முடியவில்லை. உண்மையில் அவரைத் தவிர தேசிய தலைமைத்துவத்துக்கு ஒருவரைத் தேடிக்கூடப் பார்க்க முடியாது.

இதனால், அவரின் பிரபல்யத்தை இல்லாமல் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட சதி நடவடிக்கைதான் அவரை இந்த அரசியல் நெருக்கடிக்குள் விழச் செய்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகி வந்து மகிந்த ராஜபக்சவுடன் இணைந்து கொண்டவர்களும், மகிந்தவுடன் இருந்த சிலரும் இணைந்து இந்த அரசியல் நெருக்கடிக்குள் தள்ளிவிட்டுள்ளார்கள் - என்றார். (5)

# நிலையியற் கட்டளை, சட்டத்துக்கு உட்பட்டே மகிந்தவுக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றம்

## ஐக்கிய தேசியக் கட்சி விளக்குகிறது

கொழும்பு, நவ. 19

**நா**டாளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கும், சட்டத்துக்கும் உட்பட்டே மகிந்த ராஜபக்ச அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாடாளுமன்றில் சபாநாயகர் கருஜயசூரிய நடந்துகொண்ட விதம் நூற்றுக்கு நூறு வீதம் சரியானதே. நாடாளுமன்றில் சட்டங்கள் கொண்டுவருவதற்கு இரண்டு முறைகள் உள்ளன. முதலாவது, பிரேரணையொன்று கொண்டுவந்து ஐந்து நாள்கள் கால அவகாசம் கொடுத்தல். பின்னர் அது விவாதிக்கப்படும்.

இரண்டாவது முறை நிலையியற் கட்டளைகளைத் தளர்த்தி பிரேரணையைக் கொண்டுவருதல். உதாரணமாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட விடயத்தைப் பார்த்தால், உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியப் பின்னர் மீண்டும் நாடாளுமன்றம் கூட்டப்பட்டது. சிறப்புத்தன்மை வாய்ந்த சந்தர்ப்பத்தில் சட்டத்துக்கு உட்பட்டு நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

அதனைத்தான் செய்தோம். நிலையியற் கட்டளைகளைத் தளர்த்தி எந்தவொரு பிரேரணையும் கொண்டுவர முடியும். அதற்கு 20 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையெழுத்து மாத்திரமே அவசியம். நிலையியற் கட்டளைகளின் பிரகாரமே அனைத்தும் நடந்தன.

இதேவேளை, அரசதரப்பு உறுப்பினர்களுக்கு சபை நடவடிக்கைகளுக்கு மதிப்பளித்து நடந்துகொள்ள தாம் பணிப்பதாக அரச தலைவர் உறுதியளித்திருந்தார். தீர்மானம் குரல்பதிவிலாவது நிறைவேற்றிக் கொடுத்தால் நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்திருந்தார் - என்றார். (4,10)

# பெரும்பான்மையை நிரூபிக்குமாறு மகிந்தவிடம் முன்னணி கோரும்

கொழும்பு, நவ. 19

நாடாளுமன்றம் இன்று பிற்பகல் கூடும்போது, பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்குமாறு சர்ச்சைக்குரிய தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவிடம், ஐக்கிய தேசிய முன்னணி கோரவுள்ளது.

நாடாளுமன்றத்தில் மகிந்த ராஜபக்ச அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத்தீர்மானங்கள் குரல் வாக்கெடுப்பு மூலம், பெரும்பான்மை உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்டபோதும் அதனை அரச தலைவர் ஏற்க மறுத்து வருகிறார்.

இன்று மகிந்த ராஜபக்ச அரசு தமது பெரும்பான்மையை எந்த வழியிலாவது நிரூபிக்குமாறு ஐக்கிய தேசிய முன்னணி கோரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள ஐ.தே.கட்சித் தலைவர்களில் ஒருவரான லக்ஸ்மன் கிரியெல்ல, "மகிந்த ராஜபக்ச நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளை இடைநிறுத்தி, அதற்கான தீர்மானத்தை உடனடியாக எடுத்துக் கொள்ள முடியும். அதற்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டோம். குரல் வாக்கெடுப்பு நடத்துவதற்குக்கூட எந்தக் குழப்பத்தையும் ஏற்படுத்தாமல் அனுமதிப்போம். இலத்திரனியல் வாக்கெடுப்பு என்றாலும், சரி, பெயர் அழைத்து வாக்களிப்பது என்றாலும் சரி, அரசுஎதைவிரும்பினாலும் அதற்கு நாங்கள் தயார்.

மைத்திரிபால சிறிசேன, தான் நியமித்த தலைமை அமைச்சரிடம் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்குமாறு கோரவேண்டும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

# சபாநாயகரின் செயற்பாடுகள் தாக்கங்களை ஏற்படுத்திவிட்டது

## யாப்பா அபேவர்த்தன எம்.பி. கூறுகிறார்

சபாநாயகரின் தன்னிச்சையான முடிவுகள் மற்றும் செயற்பாடுகளின் மூலமாக ஜப்பான், வெனிசுவெலா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகள் பெரும் நெருக்கடிகளையும் அதனூடாக சிறந்த படிப்பினைகளையும் கற்றுக் கொண்டுள்ளன. எனினும் எமது நாட்டு சபாநாயகரின் செயற்பாடுகள் அவற்றை விடவும் பெரும் தாக்கங்களை இலங்கை அரசியலில் ஏற்படுத்தியுள்ளன.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பொதுமக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினரொருவரை நீக்கும்போது மாத்திரமே பொலிஸார் நாடாளுமன்றத்துக்குள் வரமுடியும். அந்தச் சந்தர்ப்பத்தில் சபாநாயகர் சபையிலிருந்து வெளியேறிவிடுவார். இதுவே நாடாளுமன்ற சம்பிரதாயம். தற்போது சபாநாயகர் பொலிஸாருடன் நாடாளுமன்றத்துக்குள் சமுகமளிக்கின்றார். அவர் தொடர்ச்சியாக நாடாளுமன்ற விதிமுறைகளையும் சம்பிரதாயங்களையும் மீறிவருகிறார்.

கடந்த காலங்களில் நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் பலவற்றை முன்வைத்துள்ளோம். அவற்றில் முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முன்வைக்கப்பட்ட தீர்மானவரைவு 2016, ஜூன் மாதம் விவாதத்துக்கு எடுத்துகொள்ளப்பட்டது. முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராக 2017, ஒகஸ்ட் மாதம் முன்வைக்கப்பட்ட தீர்மானவரைவு இது வரையில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக 2017, மார்ச்சில் முன்வைக்கப்பட்ட தீர்மான வரைவு 2017, ஏப்ரலில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஆனால் மக்கள் விடுதலை முன்னணி மகிந்தராஜபக்சவுக்கு எதிராக கடந்த 14 ஆம் திகதி நம்பிக்கையில்லாத் தீர்மான வரைவு சமர்ப்பிக்கப்பட்டு அடுத்த பத்து நிமிடங்களில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இது எந்த வகையில் நியாயமானது என்பதைச் சபாநாயகரே தெளிவுபடுத்த வேண்டும்.

ரணில் விகிரமசிங்கவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு அரசில் அங்கம் வகித்துக்கொண்டு நாம் எதிராக வாக்களித்தோம். அந்தச் சந்தர்ப்பத்தில்கூட இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படவில்லை. அதனை நாம் முறையாக முன்வைத்தோம்.

எதிர்க் கட்சிக்குரிய வாயிலூடாகச் செங்கோல் எடுத்துவரப்பட்டு, அது உரிய இடத்தில் வைக்கப்படாததோடு, பெயர் மூல வாக்கெடுப்பு நடத்துவதாகக் கூறி, மீண்டும் குரல் மூலமான வாக்கெடுப்பே நடத்தப்பட்டது. எனவேதான் நேற்றுமுன்தினம் ஆளும் கட்சிக் கூட்டத்தில் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன, தான் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்றும் ரணில் விக்ரமசிங்கவை மீண்டும் தலைமை அமைச்சராக நியமிக்க மாட்டேன் என்றும் தெரிவித்துள்ளார் - என்றார். (4,31)



சபாநாயகரின்

# பக்கச்சார்பான செயற்பாடு பற்றி விரைவில் தீர்மானம் எடுப்போம்

## மகிந்த அணியின் 'தினேஷ் கூறுகிறார்

கொழும்பு, நவ. 19

சபாநாயகர் பக்கச்சார்பாகச் செயற்பட்டு வருகின்றார் என்று நாம் சான்றுகளுடன் வெளிப்படுத்தியுள்ளோம். அதுகுறித்து விரைவில் தீர்மானம் எடுக்கவுள்ளோம் என்று ஆளும் கட்சியின் கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் நேற்றுத் தெரிவித்ததாவது:

நாட்டின் தலைமை அமைச்சருக்கு எதிராக அத்தகைய பிரேரணையொன்றைக் கொண்டு வருவதற்கு முறைமைகள் இருக்கின்றன. நாடாளுமன்று இன்று கூடுகின்றபோது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர முடியாது. மகிந்த ராஜபக்சவை, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நியமித்த நாளிலிருந்து சபாநாயகரின் செயற்பாடுகளை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வெளிப்படுத்தியே வந்திருக்கின்றோம். கடந்த மூன்று நாள்களாக நாடாளுமன்றம் கூட்டப்பட்டபோது அமைதியற்ற நிலமையே நீடித்தது. இதற்கான முழுப்பொறுப்பையும் சாபாநாயகரே ஏற்றுக் கொள்ளத் தலைப்பட்டிருக்கின்றார்.

நாடாளுமன்றம் கூடிய அன்றே நிலையியற் கட்டளைகளுக்கும், அரசமைப்புக்கும் முரணாக தலைமை அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருந்தார். குரல்பதிவு மூலமாக வாக்கெடுப்புச்செய்து அது நிறைவேற்றப்பட்டதாகவும் அறிவித்தார். அதேபோன்றுதான் கடந்த வியாழக்கிழமையும், வெள்ளிக்கிழமையும் செயற்பட்டார்.

நாடாளுமன்ற சம்பிரதாயங்களின் பிரகாரம் நிலையியற் கட்டளைகளையும், அரசமைப்பையும் மீறாத வகையில் செயற்படுமாறு அரசலைவர் கூறியிருந்தபோதும் சபாநாயகர் பொருட்படுத்தியதாக இல்லை. மீண்டும் தவறான வழிமுறைகளைப் பின்பற்றி அதிகாரங்களைப் பறித்துவிட வேண்டும் என்ற சிந்தனைக்கு வலுவூட்டும் வகையில் செயற்படுகின்றார். கடந்த வெள்ளியன்று சபையில் இடம்பெற்ற அனைத்துச் செயற்பாடுகளும் பொலிஸ் அதிகாரத்தைப் பயன்படுத்தியே மேற்கொள்ளப்பட்டுள்ளது. அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம் உள்ளிட்ட எதனையும் ஏற்றுக்கொள்ள முடியாது. அரசதலைவரும் தலைமை அமைச்சரும் இந்த நிலைப்பாட்டிலேயே உள்ளனர். ஆளும் தரப்பினராகிய நாமும் அதேநிலைப்பாட்டில் தான் உள்ளோம். நாம் பெரும்பான்மையை நிரூபிப்பதென்றாலும் அதுகுறித்த யோசனையை நாடாளுமன்றுக்குக் கொண்டு வர வேண்டும். அதற்கும் சம்பிரதாயங்களின் அடிப்படையிலும் சட்டங்களின் அடிப்படையிலும் முறையான விடயங்களைப் பின்பற்றிச் செயற்பட வேண்டியுள்ளது. எடுத்த எடுப்பிலேயே அவ்வாறான யோசனையைக் கொண்டு வந்துவிடமுடியாது.

நாட்டின் தலைமை அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதற்கு முறைமைகள் உள்ளன. அவற்றை பின்பற்றப்பட வேண்டியது அவசியம். நாடாளுமன்ற நிலையியற்கட்டளைகள், அரசமைப்பில் குறிப்பிட்ட விடயங்களைப் பொருட்படுத்தாது மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயற்பாடுகளையும் நாம் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. பக்கச் சார்பாகச் செயற்பட்டு வரும் சபாநாயகர் தாமாகப் பதவிவிலக வேண்டும். அவ்வாறில்லாதுவிடின் அவர் குறித்து எவ்வாறான நடவடிக்கைகளை எடுப்பது என்று விரைவில் ஒன்று கூடித் தீர்மானம் எடுக்கவுள்ளோம் என்றார். (4,31)

# மகிந்த பதவிக்கு வந்ததால் அரசமைப்புத் தோற்கடிக்கப்பட்டது!

## கோத்தபாய ராஜபக்ச சந்தோசப்படுகிறார்

கொழும்பு, நவ. 19

மகிந்த ராஜபக்ச தலைமையிலான புதிய அரசு அமைந்ததால் எமது நாடு மிகப் பெரிய இலாபம் அடைந்துள்ளது. கடந்த அரசின் காலத்தில் முன்னெடுக்கப்பட்டுவந்த பிரிவினைவாத கூட்டாட்சி அரசமைப்பு தோற்கடிக்கப்பட்டமையே அது என்று பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளரும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் சகோதரருமான கோட்டாபய ராஜபக்ச தெரிவித்தார்.

விசாவளையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த ராஜபக்ச இன்னமும் ஒன்றரை வருடம் இருந்திருந்தால் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியமைக்க முடிந்திருக்கும் என்று சிலர் கூறுகின்றனர். மகிந்த ராஜபக்ச அதனைச் செய்திருக்க முடியும். ஆனால், நாட்டில் இன்னமும் ஒன்றரை வருடம் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி நிலவினால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்.

ரணில் விக்கிரமசிங்கவின் அரசை நிறுவியது மேற்குல நாடுகளே. அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் உறுதிப்படுத்தப்பட்டிருந்த தருணத்தில் அதனைத் தடுக்க மேற்குலக நாடுகளின் இராஜதந்திரிகள் பெரு முயற்சிகளை எடுத்திருந்தனர். இவர்கள் தீர்மானம் கொண்டுவருவதற்குத் தயாரான புதிய அரசமைப்பால் ஒற்றையாட்சி இல்லாதுபோய் கூட்டாட்சியே உருவாகும். அவர்களின் அரசை வீழ்த்தியதன் மூலம் எமது நாடு அடைந்த மிகப் பெரிய இலாபம்தான் அந்த பிரிவினைவாத அரசமைப்பு தோற்கடிக்கப்பட்டமையே - என்றார். (4)

# மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் ஜனநாயக ஒழுங்கில் செயற்படவும்

## பெண்கள், சிவில் அமைப்புக்கள் கூட்டாகக் கோரிக்கை

**கொழும்பு, நவ.19**

**நாடாளுமன்றச் சம்பிரதாயத்தைக் காப்பாற்றி மக்கள் பிரதிநிதிகள் ஜனநாயக ஒழுங்கில் செயற்பட வேண்டும் என்று பெண்கள் மற்றும் சிவில் அமைப்புக்களைச் சேர்ந்த 43 தரப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.**

சூழ்ச்சிகள் நிரம்பிய சூழலைப் புரிந்து கொண்டு, தகுந்த தீர்மானங்கள் இயற்றிச் செயற்பட்ட சிறுபான்மை அரசியல்கட்சிகளின் நிலைப்பாட்டுக்குத் தாம் பாராட்டைத் தெரிவிப்பதாகவும் அவ்வமைப்புக்கள் குறிப்பிட்டுள்ளன.

மக்கள் பிரதிநிதிகளுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவத்துள்ளனர்.

கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்களாக,

நாடாளுமன்றத்திலே தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச பெரும்பான்மை ஆதரவைக் கொண்டிருக்காத ஒரு சூழலிலே அவரை ஆட்சியமைக்கும்படி அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன அழைத்த காரணத்தினால், ஏற்பட்டிருக்கும் அண்மைக் கால அரசியல் குழப்பங்கள் குறித்து நாம் ஏமாற்றமும், அச்சமும் அடைந்திருக்கிறோம்.

2015 ஆம் ஆண்டு கூட்டரசு மற்றும் அரசியல் மாற்றம் ஆகியவற்றை வலியுறுத்தி நாட்டு மக்களில் பெரும்பான்மைனானோர் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்திருந்தனர். பொதுத் தேர்தலிலே முன்னாள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கூட்டணிக்கும் பெரும்பான்மையான மக்கள் வாக்களித்தனர். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அரசு மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

பிளவுகளை உருவாக்கும் வகையிலான அரசியல் விசுவாசத்தை வெளிப்படுத்தும் முயற்சிகளும் சுயநல நோக்கிலான சந்தர்ப்பவாதமும் கடந்த மூன்று ஆண்டுகளாக நாட்டிலே, மேலோங்கியது.

தற்போது உருவாகியுள்ள அரசியல் நெருக்கடிகளுக்கு இந்தப் போக்குகளும் ஒரு காரணமாகும். மக்கள் செயற்பாட்டுக்கான வழிகளும் கருத்துச் சுதந்திரத்துக்கான வெளிகளும் விரிவு பெற்றமை, தகவல் அறியும் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டமை, இராணுவத்தின் பிடியிலிருந்து சில நிலங்கள் திருப்பியளிக்கப்பட்டமை போன்ற சில சாதகமான மாற்றங்கள் இடம்பெற்றிருந்தாலும், முன்னைய அரசின் பிரச்சினைக்குரிய திட்டங்களை மேலும் முன்னோக்கி கொண்டு செல்லும் வகையில் 'நல்லாட்சி' அரசால் முன்னெடுக்கப்பட்ட நவதாராளவாதக் கொள்கைகள் மற்றும் நிறைவேற்றப்படவிருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்,போன்றவை மக்களுக்கு எந்த மீட்சியையும் வழங்கப்போவதில்லை.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற மனித உரிமைகளுக்கும், மதிப்பான வாழ்வுக்கு எதிரான வன்முறைகள், மனிதப் படுகொலைகள், வெள்ளை வான் கடத்தல்கள், கருத்துச் சுதந்திரத்துக்கு இருந்த நெருக்கடிகள் அவரை அச்சுறுத்தல் மிக்க தலைவராக அடையாளப்படுத்தி மக்களை விட்டு தூரப்படுத்தியுள்ளன.

இத்தகைய பின்னணிகளின் அடிப்படையில் அரசதலைவர் நாடாளுமன்றத்தினை முடக்கிய செயற்பாடானது, நெருக்கடியான சூழ்நிலையினைப் பயன்படுத்தி அரசியல் குதிரைப் பேரம் இடம்பெறவும், மக்களினது வாக்குரிமையை பேரம்பேசிக் கட்சி தாவுவதற்கும் வழிவகுத்த காரணங்களாகவும், அரசமைப்பையும் நாட்டின் இறைமையையும் கேள்விக்கு பட்படுத்தியதாகவுமே நோக்குகின்றோம். அத்துடன் இதனை முன்கூட்டியே திட்டமிடப்பட்ட ஒரு செயலாகவும் கிட்டத்தட்ட ஒரு சர்வாதிகாரப் போக்குக்குள் ஆட்சியமைக்கும் செயன்முறையாகவுமே நாம் பார்க்கின்றோம்.

மேலும் உயர் நீதிமன்றம், அரச தலைவரின் எதேச்சாதிகாரத்தினால் முடக்கிவைத்திருந்த நாடாளுமன்றத்தை உடனே கூட்டும்படியான நிலையை ஏற்படுத்தியது, இந்த நாட்டின் இறைமையிலும் நீதித் துறையிலும் எமக்கிருக்கும் நம்பிக்கையை உறுதி செய்வதாக அமைந்ததையும் சுட்டிக்காட்டுகின்றோம்- என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (31)

# நிறைவேற்று அதிகாரத்தை கையிலெடுக்க கரு முயற்சி

## பொதுமக்கள் முன்னணி குற்றச்சாட்டு

கொழும்பு,நவ.19



அரச தலைவரிடம் காணப்படும் நிறைவேற்று அதிகாரத்தைச் சபாநாயகர் கருஜயசூரிய கையில் எடுக்க முயற்சித்தமையின் காரணமாக நாட்டில் அரசியல் நெருக்கடி நிலமை ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதாகக் கூறிக்கொண்டிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியினர், தேர்தலுக்கு அஞ்சியே உயர்நீதிமன்றம் சென்றுள்ளனர் எனப் பொதுமக்கள் முன்னணியின் செயற்பாட்டாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரோகித அபேகுணவர்த்தன தெரிவித்தார். பத்தரமுல்ல நெலும்மாவத்தையில் அமைந்துள்ள பொது மக்கள் முன்னணி காரியாலத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சபாநாயகர் கருஜயசூரிய நடுநிலையாகச் செயற்படாது, தனது கட்சிக்குச் சார்பாக நாடாளுமன்றத்தினுள் செயற்பட்டமையால், நாட்டில் பெரும் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போன்று, முதலில் அரச தலைவர் உரை இடம்பெற வேண்டியது நாடாளுமன்ற சம்பிரதாயமாகும்.

எனினும் கடந்த 15 ஆம் திகதி நாடாளுமன்ற அமர்வின் போது அரச தலைவரின் கடிதத்தை வாசிக்கக் கோரிய போது அவர் அதனைச் செய்ய மறுத்துவிட்டார்.

தற்போது இவர்களுடன் மக்கள் விடுதலை முன்னணியினரும் கைகோர்த்துள்ளனர்.

கடந்த மாதமளவில் ரணில் விக்கிரமசிங்கவை வீட்டுக்கு அனுப்புவதாகக் கூறி ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

அவர்கள் கூறியதை நாம் செய்து காட்டினோம். ஆனால் தற்போது அவருக்காக உயர்நீதிமன்றம் செல்கின்றனர். இவர்கள் அனைவரும் ஒரே குழுவினரே. எனினும் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் ஜே.வி.பியில் காணப்படும் 6 உறுப்பினர்களும் காணாமல் போய்விடுவார்கள். நாடாளுமன்றத்தை ஒத்தி வைப்பதாக அரச தலைவர் வெளியிட்டுள்ள அரசிதழுக்கு உயர் நீதிமன்றத்தால் இடைக்காலத் தடையுத்தரவு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது.

அது இறுதித் தீர்ப்பு அல்ல. டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதிக்கு பின்னர் உயர்நீதிமன்றத்தால் அந்த தடையுத்தரவு நீக்கப்பட்டால் இந்த நாடாளுமன்றம் தடைப்படுமா?

நாட்டில் சபாநாயகர் என்பவர் மிகவும் மதிப்புக்குரியவராவார். ஆனால் கருஜயசூரிய போலியான ஆவணங்களை வைத்து அரசதலைவருக்குக் கடிதமொன்றை அனுப்பியுள்ளார். நாடாளுமன்றத்தில் முதன்மைமானவரான சபாநாயகரே இவ்வாறு செயற்படும் போது ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் எவ்வாறு ஒழுக்கத்தை எதிர்பார்க்க முடியும். சபாநாயகரின் இந்தச் செயற்பாட்டுக்கு எதிராக நாம் சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும் தயாராகவே உள்ளோம் - என்றார். (31)

# வெண் சுருட்டுக்களுடன் 4 பேர் கைது

கொழும்பு, நவ.19

வெளிநாட்டு வெண் சுருட்டுக்களை இலங்கைக்குக் கடத்த முற்பட்ட பெண் உட்பட நான்கு பேரை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் வைத்து ஆயப் போதைத் தடுப்பு பிரிவு அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.இதன் பெறுமதி 6.9 மில்லியன் ரூபா ஆகும்.

நாத்தாண்டியச் சேர்ந்த 31,36,40 மற்றும் 49 வயதுகளையுடைய நால்வரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து 690 சிகரெட் பெட்டிகளில் அடங்கிய ஒரு இலட்சத்து 38 ஆயிரம் சிகரெட்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

டுபாயிலிருந்து இலங்கை வந்த வானூர்தியில் சட்டவிரோதமான முறையில் பயணப்பொதியில் மறைத்து வைத்து வெண்சுருட்டுக்களைக் கடத்த முயன்றபோதே ஆயப் போதைத் தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# க.பொ.த சாதாரண தர மாணவர்களின் அடையாள அட்டைப் பணிகள் நிறைவு

கொழும்பு, நவ.19

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளில் 95 வீதமானவர்களின் அடையாள அட்டைகள் தயாரிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

ஆள்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர்நாயகம்வியானி குணதிலக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

"இதுவரை 3 இலட்சத்து 95 ஆயிரம் அடையாள அட்டைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 3 இலட்சத்து 92 ஆயிரம் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டைகளில் ஏதேனும் குறைபாடுகள் காணப்படுமாயின் அது தொடர்பில் திணைக்களத்துக்கு அறிவிக்க முடியும்.

அத்துடன், இதுவரை அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளாத சாதாரண தரப் பரீட்சார்த்திகள் உடனடியாக உரிய ஆவணங்களை ஆள் பதிவுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்க முடியும்.

தேசிய அடையாள அட்டைகளுக்காக விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை கடந்த வருடங்களைவிட அதிகரித்துள்ளது.

தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்கக்கூடிய ஆகக் குறைந்த வயதெல்லை 16 இலிருந்து 15 ஆகக் குறைக்கப்பட்டமையே இதற்கான காரணம்" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஐ.தே.வுக்கு விசுவாசம் காட்டினால் விளைவுகளைச் சந்திக்கநேரிடும்

## சபாநாயகரை எச்சரித்த சேமசிங்க

கொழும்பு, நவ.19

நாடாளுமன்றத்தின் நிலையியல் கட்டளைகளையும், பாரம்பரிய கோட்பாடுகளையும் பின்பற்றாமல் சபாநாயகர் கரு ஜயசூரிய ஐக்கிய தேசிய கட்சிக்கான தனிப்பட்ட விசுவாசத்தை இன்றும் நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்துவராயின் பெரும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செகான் சேமசிங்க எச்சரித்துள்ளார்.

தலைமை அமைச்சர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்துரைக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அத்துடன் நாடாளுமன்றத்தில் ஏற்படும் கொலைக் கலவரத்துக்குத் துணைபோன சபாநாயகர் மீது விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

தேர்தல்களில் போட்டியிட்டால் தாம் தோல்வியடைவோம் என்ற காரணத்தினாலேயே மக்கள் விடுதலை முன்னணியினரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்து, இடைக்கால அரச செல்வாக்குகளை தக்கவைத்துக் கொள்ள முயற்சிக்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

# நாடாளுமன்றைச் சபாநாயகர் பன்னாட்டின் முன் அவமதித்துவிட்டார்

## பந்துல குணவர்த்தன குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.19

இலங்கை அரசியல் வரலாற்றில் நாடாளுமன்றத்தை பன்னாட்டுச் சமூகத்தின் மத்தியில் சபநாயகர் கரு ஜயசூரியவே கேலிப் பொருளாக மாற்றியமைத்து விட்டார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தனகுற்றம்சாட்டியுள்ளார்.

தலைமை அமைச்சர் அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் அரச தரப்பினரால் கலகம் ஏற்பட்டாலும் அதற்கு மூல காரணம் சபாநாயகரே எனவும் அவர் தெரிவித்துள்ளார். இன்று காலை தலைமை அமைச்சர் தலைமையில் இடம்பெறவுள்ள சந்திப்பின் பின்னரே நாடாளுமன்றத்துக்கு செல்வதா அல்லது புறக்கணிப்பதா என்பது தீர்மானிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

# ஆளுக்கொரு மரம் நட ஆனோல்ட் அழைப்பு

யாழ்ப்பாணம், நவ. 19

ஒவ்வொரு குடிமகனும் ஒரு மரத்தையாவது நட்டுப் பராமரித்து எமது நிலத்தைப் பசுமையான நிலமாக மாற்ற பங்களிப்புத் தரவேண்டும் என்று தெரிவித்தார் யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இம்மனுவல் ஆனோல்ட்.

வடமாகாண ஆளுநர் செயலகத்தின் ஏற்பாட்டில் மரநடுகை நிகழ்வு செம்மணியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மரநடுகை மாதத்தில் நாம் அனைவரும் குறைந்த பட்சம் ஆளுக்கொரு மரத்தையாவது நடவேண்டும். எமது மண்ணைப் பசுமையான பூமியாக்கவே நாம் இதனைச் செய்கின்றோம். நாம் வெறுமனே மரங்களை நடுவதுடன்நின்றுவிடாது அவற்றைத் தொடர்ந்து பேண வேண்டும். எமது எதிர்கால சந்ததிக்காகவும் கடந்தகால சந்ததியினரை நினைத்தும் மரங்களை நடவேண்டும்.

நவம்பர் மாதம் இறந்த ஆத்துமாக்களுக்கான மாதமாகக் கருதப்படுகிறது. இதனால் தமது முன்னோர்களின் நினைவாக சிலர் மரங்களை நடுவார்கள். இதுவொருநல்லகலாசாரம் - என்றார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தை பசுமையான நகரமாக மாற்ற வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். அதற்காகவே நாம் ஒன்றுகூடியுள்ளோம். நாம் மரங்களை நடுவதுடன் நின்றுவிடாது உரிய பராமரிப்பையும் மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் வடக்குமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் தியாகமூர்த்தி, ஆளுநரின் செயலர் எல். இளங்கோவன், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலர்கள், வடக்குமாகாணதிணைக்களங்களின் தலைவர்கள், யாழ்ப்பாண மாநகரபிரதிமுதல்வர், யாழ்ப்பாணமாநகரசபை உறுப்பினர்கள், யாழ்ப்பாண மாநகர ஆணையாளர், யாழ்ப்பாண மாநகரபிரதி ஆணையாளர் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ம-8)





## சிறுவர் பூங்கா திறப்பும் மரநடுகையும்

யாழ்ப்பாணம், நவ. 19

நல்லூர் லயன்ஸ் கழகத்தினர் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு அ.த.க. பாடசாலை வளாகத்தில் அமைத்த சிறுவர் பூங்காவை அண்மையில் திறந்து வைத்தனர். திறப்பு விழாவின் போது பூங்கா வளாகத்தினுள் மரக்கன்றுகளும் நடப்பட்டன. பாடசாலை அதிபரின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்நல்லூர்லயன்ஸ்கழகத்தலைவர்லயன்க. ஜெயரட்ணம் தலைமையிலான குழுவினர் வருகைதந்து பூங்காவாளகத்தினைத் திறந்து வைத்தனர். நிகழ்வில் கலந்து கொண்டோருக்கு மரக்கன்றுகளும் அன்பளிப்புச் செய்யப்பட்டன. (ம)



*யாழ்ப்பாணம்உடுத்துறைமகாவித்தியாலயத்தில் கடந்த 12ஆம் திகதி திங்கட்கிழமை மரநடுகை நிகழ்வுகள் பாடசாலை அதிபரின் தலைமையில் இடம்பெற்றன. (ம-70)*

## கோயிற்குடியிருப்பில் 440 இடங்களில் கடந்த வாரம் டெங்குச் சோதனைகள்

சாவகச்சேரி, நவ. 19

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தால்சாவகச்சேரி கோயிற்குடியிருப்புப் பகுதியில் 440 இடங்களில் கடந்த 15ஆம், 16ஆம் திகதிகளில் டெங்குச் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

டெங்கு ஏற்படக்கூடிய ஏது நிலைகளைக் கொண்டிருந்த 62 காணிகள் அடையாளம் காணப்பட்டன. 4 காணிகளின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

கொழும்புசுகாதார அமைச்சின் டெங்குக் கட்டுப்பாட்டு அலகால்தேசியரீதியிலான டெங்குப்பரிசோதனைகளைக் கடந்த 15ஆம், 16ஆம் திகதிகளில் முன்னெடுக்கு மாறு அறிவிக்கப்பட்டது. இதையடுத்து சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தால் கோயிற்குடியிருப்புப் பகுதியில்440இடங்களில்டெங்குப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

டெங்குநுளம்புஉற்பத்தியாகக்கூடிய ஏதுநிலைகளில் காணிகளை வைத்திருந்தவர்கள்என்று 62பேர்அடையாளம் காணப்பட்டனர். அவர்களில் 58 பேருக்கு தத்தம்காணிகளைத்துப்புரவு செய்வதற்கு இரண்டுவாரங்கள் அவகாசம் கொடுக்கப்பட்டது. நால்வருக்குஎதிராக வழக்குத்தொடரப்பட்டது.

கடந்தமுதலாம்இரண்டாம் திகதிகளில் தேசிய ரீதியிலான டெங்குப் பரிசோதனைகள் மேற்கொள்ள கொழும்புசுகாதார அமைச்சால் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பம் காரணமாக இந்தத் திட்டம் இடைநிறுத்தப்பட்டது. அந்தத் திட்டமே கடந்த15ஆம், 16ஆம் திகதிகளில் முன்னெடுக்கப்பட்டது. (ம-9,159)

## கால்வாய்கள் துப்புரவு

யாழ்ப்பாணம், நவ. 19

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்தால் நாவாந்துறைப் பகுதியில் உள்ள கால்வாய்களைத் துப்புரவு செய்யும் பணிகள் அண்மையில் முன்னெடுக்கப்பட்டன.

தாழ்ந்தபகுதியில்குடியிருக்கும்மக்களின்குடிமனைகளுக்குள் வெள்ளம் புகுந்ததை அடுத்தே இந்தக் கால்வாய்கள் துப்புரவாக்கப்பட்டன. கால்வாய்களில்கழிவுகள்தேங்கிநின்றதால்தான்வெள்ளம்வழிந்தோடமுடியாது குடியிருப்புக்குள் புகுந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-17)



## சமுர்த்திப் பயனாளிகளுக்கு இலவசமாக மரக் கன்றுகள்

தென்மராட்சி, நவ. 19

தென்மராட்சி பிரதேச சமுர்த்தித் திணைக்களத்தினர் மரநடுகை மாதத்தையொட்டி தென்மராட்சிப் பிரதேச சமுர்த்திப் பயனாளிகளுக்கு பயன்தரு மரக்கன்றுகளை வழங்கி வருகின்றனர். சுமார்5லட்சம்ரூபாபெறுமதியான 3 ஆயிரத்து 888 மரக்கன்றுகள் வழங்கப்படத்திட்டமிடப்பட்டுள்ளன.

சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி, வரணி ஆகிய பகுதிகளில் வசிக்கும் பயனாளிகளுக்கே மரக்கன்றுகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. இதற்காக750தென்னம்பிள்ளைகள், 850 பலாக் கன்றுகள், 850 மாங்கன்றுகள், 850மகோற்கனி, 588தேக்குக் கன்றுகள்கொள்வனவுசெய்யப்பட்டுள்ளன. (ம-9,159)

## மரநடுகை

யாழ்ப்பாணம், நவ. 19

கைதடி அரசமுதியோர்இல்லத்தில் தீபாவளிதினத்தன்றுபழமரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன.

இந்தப் பழமரக் கன்றுகள் லயன்ஸ் கழகத்தின் உதவியுடன் நடுகை செய்யப்பட்டன என்று இல்லத்தின் அத்தியட்சகர் த. கிருபாகரன் தெரிவித்தார். கொய்யா, மாதுளை, மா, பலா போன்ற பழ மரக்கன்றுகளே நடுகை செய்யப்பட்டன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-17)

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், நவ. 19

நீதிமன்றங்களில் கடமையாற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளில் உள்ளவர்களுக்கான 2019ஆம் ஆண்டுக்குரிய இடமாற்றல் பட்டியல் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவால் நீதிமன்றங்களுக்குஅனுப்பிவைக்கப்பட்டுள்ளது.


நீதிமன்ற எழுதுநர்கள், சுருக்கெழுத்தாளர்கள் மற்றும் புத்தகம் கட்டுநர் ஆகிய பதவிகளில் உள்ளவர்களுக்குஅடுத்தவருடம்ஏப்ரல்மாதம் முதலாம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (ம-9,159)

# கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்த யாழ்ப்பாண மாநகர சபை திட்டம்

## டிசெம்பர் முதல் பணிகள் நடைமுறைக்கு

**யாழ்ப்பாணம், நவ. 19**

**யாழ்ப்பாணம், மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக் காலிகளாகத் திரியும் நாய்கள், மாடுகளைக் கட்டுப்படுத்த யாழ்ப்பாண மாநகர சபையால் புதிய பொறிமுறையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வருகிறது.**



யாழ்ப்பாணம் மாநகர சபையின் அமர்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இந்த அமர்விலேயே கட்டாக் காலிகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விடயங்கள் பேசப்பட்டன.

இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாண மாநகர முதல்வர் ஆனோல்ட் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக் காலிகளாகத் திரியும் நாய்கள், மாடுகளால் மக்கள் அல்லல் படுகின்றனர். இது தொடர்பில் உறுப்பினர்களும் முறைப்பாடுகளைத் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்கு பொறிமுறையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. டிசெம்பர் மாதம் முதலாம் திகதியில் இருந்து கட்டாக்காலி மாடுகள், நாய்களை யாழ்ப்பாணம் மாநகர சபை பிடிக்கும். எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்துதான் இந்தச் சட்டம் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படும்.

மாடுகள், நாய்களை வளர்ப்போர் அவற்றை உரிய முறையில் பராமரித்துக் கொள்ள வேண்டும் - என்றார். (ம-21)

## இடமாற்றம்

அச்சுவேலி, நவ. 19

வலிகாமம் கிழக்குப் பிரதேச நிர்வாகப் பிரிவில் கடமையில் உள்ள 25 கிராம அலுவலர்களுக்கு பிரதேச செயலக பிரிவின் உள்ளே, உள்ளக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாகக் குறிப்பிட்ட காலம் கடமையாற்றியவர்கள் என்ற வகையில் அவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இடமாற்றம் தொடர்பில் ஆட்சேபனை இருப்பின் மேன்முறையீடு செய்யவும் அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. (ம-11)

## மாணவர்கள் மதிப்பளித்தல்

**சாவ. மகளிர் கல்லூரி**

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு இன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இன்று காலை 9 மணிக்கு அதிபர் திருமதி ல.முகுந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகனும் சிறப்பு விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் அ.கெங்காதரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

**திருநாவுக்கரசு ஆரம்ப வித்தி**

கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப வித்தியாலயத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை மதிப்புறுத்தும் நிகழ்வு பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் இன்று நண்பகல் 11.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) த.கிருபாகரனும் சிறப்பு விருந்தினராக ஆரம்பப்பிரிவு சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-9.159)



*மாகாண சபை உறுப்பினர்களுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் இருந்து வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபனால் 23 பாடசாலை மாணவர்களுக்கு நேற்று துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன. கைதடி சமூக சேவைகள் திணைக்களத்தில் திணைக்களப் பணிப்பாளர் திருமதி வனஜா தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. (ம-9,159)*



*யாழ்ப்பாணம் மானிப்பாய் லியோ கழகத்தின் வருடாந்தக் குருதிக்கொடை முகாம் பிரதேச சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பெருமளவானோர் இந்த குருதிக்கொடை முகாமில் கலந்துகொண்டனர். (ம)*

யாழ். மாநகர சபைப் பகுதியில்

## நாயை அடித்து கொலைசெய்துவிட்டு வீதியில்வீசியகாட்டுமிராண்டித்தனம்

யாழ்ப்பாணம், நவ. 19

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட திருநெல்வேலிப் பகுதிக்குள் வசிக்கும் ஒருவர், நாயை அடித்துக் கொலை செய்துவிட்டு வீதியில் உள்ள குப்பைகளுடன் போட்டஇழிசெயல்நேற்று முன்தினம்இடம்பெற்றது.

இதை அவதானித்த சுகாதார மேற்பார்வையாளர்கள் நாயை உரியவாறு அப்புறப்படுத்துமாறுபணித்தனர்.

வீட்டுவளவுக்குள்தெருநாய் பிரவேசித்ததை அடுத்தே அந்தநாய்அடித்துக்கொல்லப்பட்டது. நாயின் சடலத்தைஒருபையில்பொதி செய்து மாநகர சபையால் கழிவு சேகரிக்கும் இடத்தில் வீசிவிட்டுச் சென்றுள்ளார்.

இரண்டுதினங்களின்பின்னர்கழிவுஅகற்றச்சென்ற மாநகர சபை ஊழியர்கள் அதனை அவதானித்து அந்தப் பகுதியில் பொருத்தப்பட்ட கண்காணிப்புக் கமராக்களைப் பார்வையிட்டபோதுநாயைக்கொன்றவர் சிக்கியுள்ளார்.

இதனையடுத்து சுகாதார மேற்பார்வையாளர் ஒருவர் குறித்த வீட்டின் உரிமையாளரை அணுகி அதனைஉரியமுறையில் அகற்றுமாறு கோரிய போது அந்தச் செயலை தான் மேற்கொள்ளவில்லை என வீட்டு உரிமையாளர்மறுத்துள்ளார். கண்காணிப்புக் கமராவின் காணொளியைக் காண்பித்த போது அவர் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டார். இதையடுத்து நாயைக் கொன்றவரால் அவரின்வளவுக்குள்ளேயே அந்த நாயின் சடலம் புதைக்கப்பட்டது. (ம-105)



*வலிகாமம் கிழக்கு வாதரவத்தைப் பகுதியில் 'கஜா' புயலால் பாதிக்கப்பட்ட 10 குடும்பங்களுக்கு வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பரஞ்சோதியால் நேற்று வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. (ம-8)*

## மழலைகள் மகிழ்களம்

யாழ்ப்பாணம், நவ. 19

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஆரம்பப்பிள்ளைப்பருவ அலகால் யாழ்ப்பாண மாவட்ட மழலைகள் கள நிகழ்வு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு முன்னெடுக்கப்பட வுள்ளது.

மாகாண கல்வி அமைச்சின் ஆரம்பப் பிள்ளைப் பருவ அலகின் பணிப்பாளர் ஜெயா தம்பையா தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-9)

## தமிழ்த்தின விழா

கொடிகாமம், நவ. 19

தென்மராட்சிக் கல்வி வலயம் நடத்தத் திட்டமிட்ட தமிழ்த் தினவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் முதன்மை மண்டபத்தில் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத் தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-9)



## மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு வினாடி வினாப்போட்டி

வவுனியா, நவ.19

வவுனியா மாவட்ட சமூகசேவை அலுவலகம், சீட், ஒகான், வரோட், சேவ் அக்ற், ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து பன்னாட்டு மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு வினாடி வினாப்போட்டியை நடத்தியுள்ளது.

பாடசாலை ஆசிரியர்கள், உயர் கல்வி மாணவர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கிடையில், பொது அறிவு வினாடி வினாப்போட்டியை 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடத்தியது.

வவுனியா மாவட்டச் செயலகம், நகர பிரதேச செயலகம், வடக்குப்பிர தேசசெயலகம், செட்டிக்குளப் பிரதேச செயலகம், வவுனியா பொது மருத்துவமனை, இளம் சிறகுகள் அமைப்பு, பூவரசங்குளம் மகாவித்தியாலயம், முஸ்லிம் மகாவித்தியாலயம், சென்றயூடிற் தாதியர் கல்லூரி, வவுனியா தேசியக் கல்வியியற்கல்லூரி, ஒன்னூர் அமைப்பு, நைற்றா நிறுவனம், தேசிய தொழில் பயிற்சி அதிகார சபை ஆகியன போட்டியிட்டன.

8 அணிகள் காலிறுதி ஆட்டத்துக்குத் தெரிவாகியுள்ளன. போட்டிகளை மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.சிறி நிவாசன் நெறிப்படுத்தினார். இறுதிப் போட்டி டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (222)

# செம்மலையில் இடைநிறுத்தப்பட்டது புத்தர் சிலை அமைக்கும் நடவடிக்கை

முல்லைத்தீவு, நவ.19

**முல்லைத்தீவு மாவட்டத்தின் செம்மலைப் பிரதேசத்தில் இருந்த இந்து ஆலயம் அழிக்கப்பட்டு புத்தர் சிலை அமைக்கும் நடவடிக்கை நேற்று இடைநிறுத்தப்பட்டது.**

இனக் குரோதத்தைத் தூண்டும் வகையில் பிக்கு செயற்படுவதாக முள்ளியவளைப் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், புத்தர் சிலை திறப்பு நிகழ்வு நேற்று இடைநிறுத்தப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு இறுதிப் போரின் பின்னர் இந்து ஆலயம் இருந்த பிரதேசத்தை உள்ளடக்கி இராணுவ முகாம் இயங்கியது.

இராணுவ முகாமில் தங்கியிருந்த பிக்கு, இந்து ஆலயம் இருந்த பகுதியில், அரசமரம் நட்டுப் புத்தர் சிலையை வைத்து, வழிபாட்டில் ஈடுபட்டார். அந்தச் சிலையைத் திறந்து வைப்பதற்கு நேற்று மேற்கொண்ட முயற்சிகள், மக்கள் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டை அடுத்து இடைநிறுத்தப்பட்டுள்ளது. (105)



## சேவைநலன் பாராட்டு நிகழ்வு

கிளிநொச்சி,நவ.19

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் சேவையாற்றி மாற்றலாகிச் சென்ற ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா அலுவலர்கள் இருபத்தைந்து பேருக்கான சேவை நலன் பாராட்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. (222)

## பெண் தலைமைத்துவ குடும்பத்துக்கு உதவி

புதுக்குடியிருப்பு, நவ.19

கனடா வன்னிச் சங்கத்தால் கைம்பெண்களுக்கான வாழ்வாதாரச் சுய தொழில் ஊக்குவிப்பு, விசுவமடு தொட்டியப் பகுதியில் இரண்டு பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

21 வருட தொடர்ச்சியான செயற்திட்டங்களில் ஒன்றான கைம்பெண்களுக்கான வாழ்வாதாரச் சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் விசுவமடு தொட்டியடியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளையுடைய திருமதி ம.சுபாஜினி, தொழிலை விருத்தி செய்து வருமானத்தைப் பெருக்கும் நோக்குடன், முதற்கட்ட மாக 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

பிள்ளைகளைத் தொடர்ந்து கற்பிக்க இயலாத நிலமையைத் தெரிவித்திருந்ததைத் தொடர்ந்து மகனுக்குப் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ், கனடாவில் தனது கற்கை நெறியைப் பூர்த்தி செய்து, வேலை செய்ய ஆரம்பித்த பாரதி நிதியுதவி வழங்கி வருகின்றார்.

இவருக்கான உதவி அந்தப்பகுதியைச் சேர்ந்த பிரதேச சபை உறுப்பினர் திருமதி கேதினியினால் கையளிக்கப்பட்டது. (222)

## மருத்துவமனை வளாகத் துப்புரவில் முச்சக்கர வண்டி உரிமையாளர்கள்

முல்லைத்தீவு,நவ.19

முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனை வளாகம் நேற்றைய தினம் முள்ளியவளை பிரதேச முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தினரால் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் த.அமலன், முச்சக்கரவண்டி உரிமையாளர்களுடன் இணைந்து துப்புரவுப் பணியில் ஈடுபட்டுள்ளார். (ரி3)



## சூரிய சக்தியில் நீர் இறைக்கும் இயந்திரப் பாவனை அறிமுகம்

கிளிநொச்சி, நவ.19

திருவையாறு விவசாயப் போதனாசிரியர் பிரிவில் திருவையாறு 2 ஆம் பகுதியில் சூரிய சக்தியில் இயங்கும் நீர் இறைக்கும் பம்பியின் பாவனை தொடர்பானஅறிமுக நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

இந்த வயல்விழாவில் குழுமியிருந்தோருக்கு சூரிய சக்தியில் இயங்கும் நீர் இறைக்கும் பம்பியின் பாவனை தொடர்பாக பயனாளி விளக்கமளித்திருந்தார். மாதாந்தம் 11ஆயிரம் ரூபா மின்சாரக்கட்டணமாக செலுத்திவந்ததாகவும், தற்போது சூரிய சக்தியில் இயங்கும் நீர் இறைக்கும் இயந்திர பாவனையின்பின்னர் ஆயிரம்ரூபா மட்டுமே செலுத்துவதாகவும் தெரிவித்திருந்தார்.

பயனாளி மாற்றுத்திறனாளியாகவிருந்தும், ஆர்வத்துடன் விவசாயத்தில் ஈடுபடுவதனால், மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் 50 வீதம் மானியத்தில் சூரிய சக்தியில் இயங்கும் நீர் இறைக்கும் நீர்ப்பம்பி வழங்கப்பட்டது.



குழுமியிருந்த விவசாயிகளுக்கு இயந்திரங்களின் பாவனைமற்றும்தொழில்நுட்பத் தகவல்களையும், வழிகாட்டல்களையும் பாடவிடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர் வழங்கினார்.

இந்த வயல் விழாவில், கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், பாடவிடய உத்தியோகத்தர்கள், பிரதேச விவசாயப் போதனாசிரியர், விவசாயிகள், மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆர்வமுள்ள விவசாயிகளும் கலந்துகொண்டனர். சூரிய சக்தியில் இயங்கும் நீர் இறைக்கும் நீர்ப்பம்பியை 50 வீதம் மானிய அடிப்பண்டயில் பெற்றுக் கொள்ள ஆர்வமுள்ள விவசாயிகள் தங்கள் பகுதி விவசாயப் போதனாசிரியரிடமோ அல்லது நேரடியாக கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்திலோ விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளுமாறு பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## அங்காடி வர்த்தக நிலையங்களால் கொறவப்பொத்தான வீதியில் குழப்பம்

வவுனியா, நவ.19

வவுனியா கொறவப்பொத்தான வீதியில் அமைக்கப்பட்டுள்ள அங்காடி வர்த்தகநிலையங்களால் குழப்பமானநிலமை நேற்று முன்தினம் ஏற்பட்டுள்ளது.

கொறவப்பொத்தான வீதியில் பெரியபள்ளிவாசலுடன் இணைந்து அமைக்கபட்டுள்ள அங்காடிக் கடைகளில் கூரைகள்மாற்றிய மைக்கும் பணி நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது அங்கு ஒன்றுகூடிய இளைஞர்கள் வர்த்தக நிலையங்கள் அனுமதியின்றி அமைக் கபட்டுள்ளன. இதனால் போக்குவரத்து நெரிசலான நிலமை காணப்படுகின்றது. எனவே நகரசபையின் அனுமதியின்றி அதில் மாற்றங்கள் எதனையும் செய்யமுடியாது என்று தெரிவித்தனர். இதனால் சற்றுநேரம் குழப்பமான நிலமை நீடித்தது. பின்னர் சம்பவ இடத்திற்கு வருகைதந்த வவுனியா நகர சபையின் உப நகரபிதா சு.குமாரசாமி நிலமைதொடர்பாக ஆராய்ந்ததுடன், குறித்த பணிகளை இடைநிறுத்துமாறு கூறி இன்று திங்கட்கிழமை அங்காடி வர்த்தகர்கள் மற்றும் முரண்பட்ட இளைஞர்களையும் வவுனியா நகரசபைக்கு வருகைதருமாறு தெரிவித்தார். அங்கு நகரசபை தவிசாளருடன் இணைந்து ஒரு முடிவினை பெற்றுகொள்ள முடியும் என்றுதெரிவித்து நிலமையைச் சீராக்கினார். (110)


## கைவேலிப்பகுதியில் தேடப்பட்ட குற்றவாளி கைது

பல குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் கைவேலிப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். புதுக்குடியிருப்பு கைவேலி காட்டுப்பகுதியில் கடந்த 14ஆம் திகதி உழவு இயந்திரம் ஒன்றின் மீது தாக்குதல் மேற்கொண்டு, உழவு இயந்திரத்தின் ரயர்களுக்குக் கம்பியால் குத்திக்காற்று போகவைத்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளி ஒருவரை கடந்த 16 ஆம் திகதி இரவு புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருகையில்:

குற்றவாளியைக் கைதுசெய்வதற்கு மூன்று தடவைகளுக்கு மேல் அவரது வீட்டுக்குச் சென்றும் அவர் வீட்டில் இல்லாது தலைமறைவாகியுள்ளார். கடந்த 16 ஆம் திகதி இரவு 35 அகவையுடைய சந்தேகநபரின் வீட்டுக்குச் சென்ற பொலிஸார் அவரை கைது செய்த வேளை, அவரின் தலை அணைக்கு கீழ் சட்டவிரோதமான முறையில் வாள் ஒன்றும், அரியவகை உயிரினங்களின் பாகமான மான் கொம்பு ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

இவர் மீது மூன்று குற்றங்கள் இனம் காணப்பட்டு குறித்த நபரை கைதுசெய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி3)



## பொருளாதார அபிவிருத்திக்கான சமூக நிறுவனம் ஆரம்பம்

கிளிநொச்சி, நவ.19
வடக்கின் பொருளாதார அபிவிருத்திக்கான சமூக நிறுவனம் கிளிநொச்சி மக்களால் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.
இந்த அமைப்பின் தலைவராக பு.புவிலன், செயலராக வி.இளங்கோவன், பொருளாளராக ஜெயலதா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.
கிராம அலுவலர், மதத்தலைவர்கள், சமூகஆர்வலர்கள் மற்றும்பொதுமக்கள்எனப்பலரும்கலந்துகொண்டுநிறுவனத்தை ஆரம்பித்துவைத்தனர்.
இந்த அமைப்பின்மூலம் வடக்கு மக்களின் குறைகளை இனங்கண்டு தீர்த்துவைப்பதோடு மக்களின் அன்றாட தேவைகளுக்காகவும், இந்த அமைப்பு உதவி புரிய உள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.



## கூரைத் தகரங்கள் வழங்கல்

லண்டன் வீ 3 பவுண்டேசன் ஊடாக வறிய குடும்பம் ஒன்றுக்கு 20 தகரங்கள், வீடுவேய்வதற்கான பொருள்கள் என்பன கையளிக்கப்பட்டுள்ளன. வவுனியா நீலியாமோட்டைக் கிராமத்தில் வசிக்கும் சுப்ரமணியம் புஸ்பராணி குடும்பம், மழை வெள்ளத்துக்குள் சிறிய ஓலைக்குடிசையில் வசித்து வருகின்றார்கள். அவர்களுக்கே நேற்றுமுன்தினம் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (222)



## இலவச மருத்துவ முகாம்

வவுனியா, நவ.19
சிறிசத்யசாயி பாபாவின் 93 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, இலவச மருத்துவ முகாம்கள் வவுனியாப் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பாலமோட்டை, நவ்வி, குஞ்சுக்குளம் ஆகிய கிராமங்களில் இடம்பெற்றுள்ளன.
வவுனியா பகவான் சிறிசத்ய சாயி சேவா நிலையத்தால் நேற்றுமுன்தினம் மக்கள் பயன்பெறும்வகையில் இடம்பெற்ற மருத்துவமுகாமில் பொது மருத்துவ முகாம், நிபுணத்துவ மருத்துவ சேவை, கண்பரிசோதனையும் கண்ணாடி வழங்கலும், காது, மூக்கு, தொண்டை நோய்களுக்கான சிகிச்சை, பற் சிகிச்சை, சித்த வைத்திய முகாம், தொற்றா நோய்களை இனம்காணும் குருதிப்பரிசோதனை, முன்பள்ளி மாணவர்கள் 22 பேருக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கல் ஆகிய சேவைகளைப் பொதுமக்கள் பெற்றுக்கொள்ள கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.
கண் வைத்திய முகாமின் மூலம் 225 பேரும், பற்சிகிச்சை மூலம் 54 பேரும், பொது மருத்துவமுகாமின் மூலம் 270 பேரும், சித்த மருத்துவ முகாம் மூலம் 115 பேருமாக, மொத்தம் 664 பேர் இலவச மருத்துவ முகாம் மூலம் பயன் பெற்றுள்ளனர்.
பிராந்திய சுகாதார சேவைகள் உத்தியோகத்தர்கள், வவுனியா பொது மருத்துவமனை மருத்துவர்கள், தாதியர்கள், ஊழியர்கள், சென்யூரி தாதியர் பயிற்சிக் கல்லூரி மற்றும் விசன்கெயார் நிறுவன உத்தியோகத்தர்கள் எனப் பல நிறுவனத்தினர் கலந்துகொண்டிருந்தனர்.

# மன்னார் மாவட்டத்தை ஏன் கண்டுகொள்வதில்லை

## கேள்வி எழுப்புகிறது மன்னார் குடிமக்கள் குழு

மன்னார், நவ.19

**வடக்கு மாகாணத்தில், மன்னாரைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கு அரசின் தலைவர்கள், இராஜதந்திரிகள் வருகை தந்து குறை களைக் கேட்டறிந்து, நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். ஆனால் மன்னார் மாவட்டத்தை யாரும் கண்டுகொள்கிறார்கள் இல்லை. இவ்வாறு மன்னார் மாவட்டக் குடிமக்கள் குழுவின் காலாண்டுப் பொதுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.**

மன்னார் மாவட்டத்தின் குடிமக்கள் குழுவின் காலாண்டுப் பொதுக்கூட்டம், தலைவர் அருட்பணி அ.ஞானப்பிரகாசம் தலைமையில் மன்னார் கலையருவி கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்றோர் தெரிவித்ததாவது:
அரசின் தலைவர்கள், வெளிநாட்டவர்கள் வடக்கு மாகாணத்துக்கு அடிக்கடி வருகிறார்கள். வடக்கின் ஏனைய மாவட்டங்களின், பிரச்சினைகளை நோக்குவதுபோன்று, மன்னார் மாவட்டத்துக்கு வருகை தந்து மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கண்டறிவதில் ஈடுபாடு அற்றவர்களாகவே உள்ளார்கள்.
வட மாகாணத்தில் ஓரிரு மாவட்டங்களில், மக்களின் காணிகளை விடுவிக்கப்பட்டது. ஆனால் மன்னார் மாவட்டத்தில் அவ்வாறு நடப்பதில்லை. அக்கறையின்மையே எங்கள் மாவட்டத்தில் காணப்படுகிறது.
மன்னார் முள்ளிக்குளம் மக்கள் தங்கள் கிராமத்துக்குச் சென்றும் அவர்களின் கண்முன்னே பாதுகாப்புப் படையினர் தங்கள் குடும்பங்களுடன் குடியிருக்க வீட்டுச் சொந்தக்காரர்கள் காட்டுக்குள் யானை, மழை, நுளம்பு வெள்ளம் போன்ற பிரச்சினைகளுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.
முள்ளிக்குளம் மக்களின் பிரச்சினைகளை அரசோ அல்லது இங்குள்ள அரசியல்வாதிகளோ தீர்ப்பதற்கு முன்வரவில்லை. புதிய அரசு நியமிக்கப்பட்ட ஓரிரு தினங்களுக்குள் வன்னி மாவட்டத்தில் பாதிப்பு அடைந்தவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டன. இதை நாங்கள் வரவேற்கின்றோம்.
ஆனால், மன்னார் மாவட்ட மக்களுக்கு இவ்வாறான எந்தச் செயற்பாடும் நடக்கவில்லை என்பது கவலைக்குரிய விடயமாக இருக்கின்றது. இங்குள்ள அரசியல்வாதிகளும் அக்கறையில்லாத ஒரு தன்மையிலேயே உள்ளனர்.
மன்னார் நகரில் நீண்ட வருடங்களுக்குப் பின் ஆதனவரிக் கட்டணம் அண்மைக்காலத்தில் அதிகரிக்கப்பட்டது. இதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. மாறாக ஆதனவரிக் கட்டண அதிகரிப்பை நோக்கும்போது பலர் தங்கள் ஆதனங்களை விற்றே செலுத்த வேண்டிய நிலைமையே காணப்படுகின்றது. ஆதனவரி மூலம் மன்னார் மக்களுக்குப் பெரிய சுமையை உள்ளூராட்சி சபை ஏற்படுத்தியிருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாக உள்ளது.
மன்னார் மாவட்டத்தில் பட்டதாரிகள் பலர் காணப்படுகின்றனர். ஆனால் இங்கு அரச நிறுவனமோ அரசு சார்பற்ற நிறுவனமோ வெளி மாவட்டங்களைச் சேர்ந்தோரை வைத்தே பதவி வெற்றிடங்களை நிரப்புகிறன.
இவ்வாறான குறைகளைத் தீர்த்து வைப்பதற்குத் தனித்துவத்துடன் இயங்கும் மன்னார் மாவட்ட குடிமக்கள் குழு சம்பந்தப்பட்டவர்களின் கவனத்துக்கு எடுத்துச் சென்று தொடர்ந்தும் தீவிரமாகச் செயல்பட வேண்டும். இதற்கு ஆளுனர் சபையுடன் சேர்ந்து தாங்களும் ஒத்துழைப்பு வழங்கத் தயார் எனக் கூட்டத்தில் கலந்து கொண்டோர் தெரிவித்தனர். (60)

## கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்டோர் நினைவு தினம்



வவுனியா, நவ.19
வவுனியா தாண்டிக்குளம் விவசாயக் கல்லூரிக்கு அருகில் கிளைமோர் தாக்குதலின்போது இராணுவத்தால் கொல்லப்பட்ட விவசாயக் கல்லூரி மாணவர்களின் 12 ஆவது நினைவு தினம்நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.
2006 ஆம் ஆண்டு இராணுவத்தினரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலின்போது, இராணுவத்தினர் திருப்பித்தாக்கியதில் விவசாய கல்லூரி வளவில் கற்றல் நடவடிக்கை மேற்கொண்டிருந்த ச.கிந்துஜன், சி.கோபிநாத், இரா.அச்சுதன், ஆர். மொகமட், தி.சிந்துஜன் ஆகிய ஐந்து மாணவர்கள் உயிரிழந்தனர்.
இவர்களின் நினைவு தினம் வருடாவருடம் விவசாய கல்லூரியில் இடம்பெற்று வருவதுடன், மாணவர்களின் நினைவாக மரநடுகை, குருதித்தானம், தாகசாந்தி போன்றவற்றைச் சேவைகளை விவசாயக்கல்லூரி மாணவர்கள் நினைவு தினத்தில் மேற்கொண்டு வருகின்றனர்.
நிகழ்வில்தாண்டிக்குளம்விவசாயக்கல்லூரி அதிபர், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், உயிரிழந்த மாணவர்களின் உறவினர்கள், பழைய மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு உயிரிழந்த மாணவர்களின் படத்திற்கு சுடரேற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்கள். (110,222)

## ஆலங்குளம் துயிலுமில்லம் துப்புரவுப் பணி ஆரம்பம்

முல்லைத்தீவு, நவ.19
மல்லாவி, ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்ல துப்புரவுப் பணிகள் நேற்றுத் தொடக்கம் ஆரம்பமாகியுள்ளன. அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் துப்புரவுப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர். (21)







*உதவும் இதயங்கள் நிறுவனத்தின் மூத்த உறுப்பினர், ராஜீகரன் பாமினியின்மகள் அஸ்வினாவின் 10 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று முன்தினம் ஒலுமடு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று வருகின்ற மாணவிக்கு ஈருருளி வழங்கப் பட்டது. (222)*

## மாணவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு

கொடிகாமம், நவ.19
வவுனிக்குளம் அம்பாள்புரம் தமிழ் வித்தியாலயத்தின் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு இன்று காலை 10 மணிக்குப் பாடசாலை அதிபர் சு.பரராசசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாந்தை கிழக்குக் கோட்டக் கல்வி அதிகாரி சு.சத்தியசீலன், சிறப்பு விருந்தினராக அம்பாள்புரம் வீஸ்டம் முன்பள்ளித் திட்டப் பணிப்பாளர் கே.டபிள்யூ. ஆர்.றொபேட்சில்வா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (159)



## வடக்கில் 84 அதிபர்களுக்கு மடிக்கணினிகள் கிடைத்தன

*அவர்களுக்கு இருநாள் செயலமர்வு*

கொடிகாமம், நவ. 19

ஆரம்பப் பாடசாலை அதிபர்களுக்கு மத்திய கல்வி அமைச்சின் ஊடாக மடிக்கணனிகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்துவது தொடர்பான செயலமர்வை மாகாணக்கல்வித் திணைக்களம் நடத்தியது.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் அதிபர்களுக்கு வவுனியாவில் கடந்த 12, 13 ஆம் திகதிகளிலும் யாழ்ப்பாண மாவட்டத்தின் அதிபர்களுக்கு மருதனார்மடத்திலுள்ள வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் கடந்த 15, 16 ஆம் திகதிகளிலும் செயலமர்வு நடத்தப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 48 பாடசாலைகளின் அதிபர்கள் உட்பட வடக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 84 ஆரம்பப்பாடசாலை அதிபர்களுக்கு மடிக்கணனிகள் வழங்கப்பட்டுள்ளன.

இணைய வசதியற்ற பின்தங்கிய பாடசாலைகளின் இணைய வழிப்பயன்பாட்டை விருத்தி செய்யும் நோக்கில் இந்தச் செயற்றிட்ட நிகழ்வு இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

(4,159)

# ஒற்றுமையைக் குலைத்தோமானால் தமிழர் அழிவுக்கே வழிசமைப்போம்!

*அப்படிச் செய்யக்கூடாது என்கிறார் சிவமோகன் எம்.பி*

வவுனியா, நவ. 19

**கூட்டமைப்பிலிருந்து இரண்டுபேர் போய்விட்டனர். தற்போது 14 பேர் ஒன்றாக நிற்கின்றோம். அதனால்தான் எங்களின் பலம் வெளிநாடுகளில் இருந்து அனைவருக்கும் வெளிக்காட்டப்பட்டுள்ளது. ஒற்றுமையைக் குலைத்தோமானால் அது தமிழரின் அழிவை நோக்கித்தள்ளும் விடயமாக அமையும்.**

இவ்வாறு வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் வன்னிக்குறோஸ் நிறுவனத்தின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது,

வன்னிக்குறோஸ் அமைப்பு கிராம மட்டங்களில் மக்களுக்குச் சேவை செய்வதை இலக்காகக் கொண்டுள்ளது. அரசியல் ரீதியான செற்பாட்டைவிட மக்களுக்குப் பொதுவான விடயங்கள் சென்றடைவதை விரும்புகின்றோம்.

அரச தலைவர் நடுச்சாமத்தில் மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராக நியமித்ததன்பின்னர் நிலமைகள் தலைகீழாக மாறியுள்ளன.

ரணில் விக்கிரமசிங்கவை நாங்கள் பற்றுடன் ஆதரிக்கவில்லை. எங்களுக்கு இருந்த நிலைப்பாடு நாங்கள் பெரும் அராஜகத்தின் கீழ் அடக்குமுறையின் கீழ் தள்ளப்பட்டுள்ளோம்.

அதற்கு எதிராக வெளியில் வரவேண்டும் என்பதற்காக எங்களுக்கு எதிராகப் போர்தொடுத்தபடைத்தளபதிசரத்பொன்சேகாவைக்கூட கண்ணை மூடிக் கொண்டு ஆதரித்திருந்தோம். அராஜகத்தை இல்லாமல் செய்யவேண்டும் என்பதற்காகவே அவ்வாறு சென்றோம். அதில் தோற்று மீண்டும் மகிந்தராஜபக்சவே ஆட்சியைக் கைப்பற்றினார்.

2015 ஆம் ஆண்டு மாற்றுப் புரட்சி மூலமாக மகிந்தராஜபக்ச தோற்கடிக்கப்பட்டார். தனித்தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டு புதிய அரசு தோற்றம் பெற்றது.

இந்த அரசு இருக்கும்போது எதுவுமே செய்யவில்லை என்ற கருத்து ஊடகங்களில் வெளிவந்துள்ளன.

ஆனால் யாதார்த்தங்கள் சிலவற்றைப் பார்க்காமல் எழுதும் வசனங்களாகத்தான் அவை காணப்பட்டன. அவை உண்மைகள் அல்ல.

2015 ஆம் ஆண்டுக்குப் முன்னர் தமிழ் மக்களுக்கு அடக்குமுறை இருந்தது. மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆட்சியைப் பொறுப்பேற்ற பின்னர் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

தமிழர்களின் இனப்பிரச்சினை 1948 ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை நீடிக்கின்றது.

நாட்டில் ஜனநாயகரீதியான பிரச்சினை வரும்போது நாங்கள் வித்தியாசமாகச் சிந்திக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம். நாங்கள் சரியான முறையில் சிந்தித்ததால் இன்று பன்னாட்டு அளவில்கூட தமிழர்கள் யார் என்ற விடயம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

சிங்களவர்கள் அதாவது மகிந்தராஜபக்ச குழுவினர் எவ்வளவு அடாவடித்தனமாக நடந்துகொள்கின்றார்கள் என்பதற்குச் சாட்சிகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சும்மா இருக்கின்றது என்று நீங்கள் நினைக்கவேண்டாம். தமிழர்கள் என்று சொன்னால் அவர்களுக்கான மதிப்பு சிங்கள பிரதேசங்களிலும் இருக்கின்றது.

### பிரிந்து போவதா என்பதை மக்களே தீர்மானியுங்கள்

தமிழர்களின் ஒற்றுமைக்காக நாங்கள் ஒற்றுமையாக நிற்கவேண்டிய தேவை இருக்கின்றது. பிரிந்து நான்கு ஐந்து கட்சிகளாக இருந்த முஸ்லிம் கட்சிகள் மக்காவுக்குச் சென்று வந்து ஒரே குரலில் ஒரே செயற்பாட்டில் நிற்கின்றார்கள். அப்படியிருக்க நாங்கள் ஒன்றாய் இருந்துவிட்டு உடைந்து போவதா? என்பதை மக்கள்தான் தீர்மானிக்கவேண்டும்.

சிறுபான்மை கட்சிகளாக 40 வரையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரே எண்ணத்தில் இருக்கின்றோம். இதில் யார்தான் முரண்டு பிடித்தாலும் மைத்திரி, தான் நினைத்தமாதிரி செய்ய வெளிக்கிட்டாலும்கூட அவர்கள் தடம்புரண்டுபோய் இருக்கின்றார்கள்.

### வாத்தும் இல்லை முட்டையும் இல்லை

தானாக முட்டையிட்டு குஞ்சுபொரிச்சு மகிந்தராஜபக்சவுக்கு மைத்திரி ஒரு அரசைக் கொடுக்கும் என்றுதான் நாங்களும் எதிர்பார்த்தோம். அவர் அவசரப்பட்டு வாத்தை வெட்டி அதில் உள்ள முட்டையை எடுத்துக் கடைசியில் வாத்தும் இல்லை முட்டையும் இல்லை என்றாகி விட்டது.

நாடாளுமன்ற சபாநாயகரின் ஆசனத்தைக் கைப்பற்றி வைத்துக்கொண்டு ஜனநாயக ரீதியில் தீருங்கள் என்று சொன்னால் எவ்வாறு தீர்க்கமுடியும்? அவர்களின் வார்தைகள் எல்லாம் நீதிக்குப் புறம்பானதாக இருக்கின்றது. இந்த விடயத்திலே இவ்வளவு இருக்கும் என்றால் தமிழர்களின் எதிர்காலவிடயத்தில் இவர்கள் எப்படி இருக்கப்போறார்கள் என்பது கேள்விக்குறியே?

தமிழர்கள் தமிழர்களாக இருந்து கொண்டு எங்களுக்காக என்ன செய்யப்போகின்றோம் என்ற தீர்மானங்களை எடுத்துக்கொண்டு எங்களின் உரிமைகளைப் போராடிப் பெறவேண்டிய சூழல்.

ஆகவே எதுவும் எந்த நேரமும் எப்படியும் நடக்கலாம் தமிழர்கள் ஒன்றாக நிற்கவேண்டியதேவை இருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றைக்கும் தேர்தலுக்காக ஒருவிடயத்தை எடுப்பது அல்ல. தமிழ் மக்களாக ஒற்றுமையாக ஓரிடத்தில் நின்றால் மட்டும்தான் பலமாக இருக்கும். உடைந்து போனால் எவரும் எங்கள் கதையைத் திரும்பிக் கேட்கமாட்டார்கள். எங்களிலிருந்து இரண்டுபேர் போய்விட்டார்கள். 14 பேர் ஒன்றாக நிற்கின்றோம். அதனால்தான் எங்களின் பலம் வெளிநாடுகளில் இருந்து அனைவருக்கும் வெளிக்காட்டப்பட்டுள்ளது. ஒற்றுமையைக்குலைத்தோமானால் அது தமிழரின் அழிவை நோக்கித் தள்ளும் - என்றார்.

ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் சிவசக்தி ஆனந்தன், புளொட் கட்சியின் வியாழேந்திரன் ஆகியோரே கூட்டமைப்பிலிருந்து விலகப்போவதாக அறிவித்துள்ளனர்.

(4)

## ஆனையிறவு உப்பளம் இனி இயங்க அனுமதிக்கப்படாது

*மாவட்டச் செயலர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், நவ. 19

ஆனையிறவில் ஏ-9 வீதிக்கு கிழக்குத் திசையில் இயங்கும் உப்பளம் இயங்க அனுமதிக்கப்பட மாட்டாது என்று கரைச்சிப் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டு மாவட்டச் செயலருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மாவட்டச்செயலரின் தீர்மானத்தை மீறி அந்தப் பகுதியில் அமைக்கப்பட்ட உப்பளம் உடனடியாக இழுத்து மூடப்படவேண்டும். அல்லது அதற்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை இடம்பெறும் என்று மாவட்டச்செயலர் ஒக்ரோபர் 9ஆம் திகதி தெரிவித்த நிலையில், இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாததால் உப்புத் தொழிற்சாலையை மூட வேண்டும் என்று கரைச்சிப் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலகத்தில் ஒக்ரோபர் 9ஆம் திகதி இடம்பெற்றது. அதன்போது ஆனையிறவுப் பகுதியில் உப்பளம் அமைக்கும் விடயம் சுட்டிக் காட்டப்பட்டது. அது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்டச்செயலர் பதிலளித்திருந்தார்.

இருப்பினும் ஆனையிறவு உமையாள்புரம் பகுதியில் போருக்கு முன்னர் உப்பளம் நடத்தியதாகத் தெரிவித்து சுற்றுச்சூழல் அதிகார சபையின் அனுமதி மட்டுமே பெற்றுக்கொள்ளப்பட்டது. பிரதேசசபையின் அனுமதி பெறப்படவில்லை. கருவாட்டுக்கான உப்பு அரைத்துப் பொதி செய்யப்படுகின்றது.

இந்தப் பகுதியில் உப்பளம் அமைக்கும் விடயம் தொடர்பில் கடந்த ஒக்ரோபரில் விவசாயப் பிரதி அமைச்சர் அங்கயன் இராமநாதன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலுக்குச் சமுகமளித்த சுற்றுச் சூழல் அதிகார சபையினர், அந்த உப்பளத்துக்கு வழங்கிய அனுமதியை இரத்துச் செய்து கடிதம் அனுப்பியுள்ளோம் எனத் தெரிவித்தனர். இருப்பினும் அதே அனுமதிக் கடிதத்தை வைத்து உப்பளம் திறக்கப்பட்டுவிட்டது.

எனவே உடனடியாக இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்டச் செயலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அந்தத் திட்டத்தை நிறுத்த வேண்டும் என்று மாவட்டச் செயலகத்தினர் தீர்மானித்தனர். இந்த நிலையில் திட்டத்தை நிறுத்தியுள்ளோம் என்று சுற்றுச்சூழல் அதிகாரி தெரிவித்திருந்தார்.

சுற்றுச் சூழல் அதிகார சபை மற்றும் பிரதேசசபை இரண்டிலும் எழுத்து மூலப் பதிலைப் பெற்றுச் சமர்ப்பிக்கவும் அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மாவட்டச் செயலாளர் உறுதியளித்திருந்தார்.

தற்போது பிரதேச சபை தீர்மானமாக நிறைவேற்றி மாவட்டச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இரணைமடு விவசாயிகள் சம்மேளணச் செயலாளர் மு.சிவமோகன் தெரிவித்தார்.

(4,105)

## யாழ்.மாநகரசபை நிதியை முதல்வர் கட்சித்தேவைக்குப் பயன்படுத்தினார்

*மீளச் செலுத்துமாறு தற்போதைய முதல்வர் பணிப்பு*

யாழ்ப்பாண மாநகரசபையில் ஈ.பி.டீ.பி ஆட்சியில் இருந்த காலத்தில் முதல்வராக இருந்த காலத்தில் சபை நிதியில் இருந்து பணம் முற்பணமாக எடுத்து கட்சித் தலைவரின் பணிக்கு வழங்கியமை கண்டறியப்பட்டுள்ளது.

ஈ.பீ.டீ.பி.யின் ஆட்சியில் யாழ்ப்பாண மாநகர சபை நிர்வாகம் இருந்த காலத்தில் முதல்வராக இருந்த திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா சபை நிதியிலிருந்து தனது பெயரில் முற்பணமாக பெற்று 56 ஈருருளிகளைக் கொள்வனவு செய்து அதனைக் கட்சியின் தலைவர் ஊடாக விநியோகம் செய்திருந்தார்.

2011ஆம் ஆண்டு 9ஆம் மாதம் இடம்பெற்ற மாதாந்த கலந்துரையாடலில் இது பற்றிப் பேசப்பட்டு 2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முற்பணத்தை அப்போதைய மாநகர முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா 5 லட்சத்து 49 ஆயிரம் ரூபாவைப் பெற்றுள்ளார் என்பது கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முற்பணமாகப் பெறப்பட்ட பணத்தை மீளச் செலுத்துமாறு கடந்த செப்ரெம்பர் 21ஆம் திகதிய கடிதம் மூலமாக முதல்வர் ஆனல்ட் எழுத்து மூலமாகக் கோரியிருந்தார்.

இவ்வாறு முதல்வரால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தையடுத்து முன்னாள் முதல்வரும் தற்போதைய உறுப்பினருமான திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா முழுப் பணத்தையும் இரண்டு மாதகால அவகாசத்தில் ஒக்ரோபர் 10ஆம் திகதி மீளச்செலுத்துவதாக எழுத்தில் வழங்கியுள்ளார்.

குறித்த முற்பணத்தில் 50 ஈருருளிகள் கொள்வனவு செய்யப்பட்டு அரசியல் ரீதியில் விநியோகிக்கப்பட்டதாகவே கூறப்படுகின்றது.

இது தொடர்பாக யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் திருமதி யோகேஸ்வரியைத் தொடர்புகொண்டு கேட்டபோது, நான் சபை நிதியை அரசியல் தேவைக்காகப் பயன்படுத்தவில்லை. தொழிலாளர்களுக்கு ஈருருளிகள் வழங்குவது தொடர்பாக எமது சபையில் ஆராயப்பட்டது. அதன் பின்னர் 50 தொழிலாளர்களுக்குச் சபைநிதியின் ஊடாக வழங்குவது என்று முடிவெடுத்தோம். நான் கூறியதுபோல 50 பேருக்கு ஈருருளிகளுக்கான நிதி இன்னும் செலுத்தப்படவில்லை. அதனைத் திருப்பி கேட்டனர். திருப்பி தருவதாக கூறியுள்ளேன். தொழிலாளர்களின் தரம் உயர வேண்டும் என்றே இந்தச் செயலைச் செய்தேன் - என்றார்.

(4,8,105)

## மன்னார், உயிலங்குளம் நிலையங்களின்

# பொலிஸ் உத்தியோகத்தர்கள் 12 பேருக்கு உடனடி இடமாற்றம்

மன்னார், நவ. 19

மன்னார் மற்றும் உயிலங்குளம் பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த 12 பொலிஸாருக்கு திடீர் இடமாற்றம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

உரிய முறையில் கடமையைச் செய்யவில்லை என்ற காரணத்தால் அவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் முருங்கன் முதன்மை வீதி அடைக்கல மோட்டை வாய்க்கால் பகுதியில் புலவுக்காணியில் அனுமதியின்றி விவசாய நடவடிக்கையில் ஒருவர் ஈடுபடுகிறார் என்று கடந்த 2 ஆம் திகதி கட்டுக்கரை குள முகாமைத்துவக்குழுவினர் உரிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுசென்றனர்.

வாய்க்காலுக்குப் பொறுப்பான பொறியியல் உதவியாளரும் விவசாய அமைப்பின் தலைவரும் நிலைமையை நேரில் பார்வையிடச் சென்றனர்.

புலவுக் காணியில் உழுதுகொண்டிருந்தவரை பிறிதொருவர் ஒளிப்படம் எடுத்துள்ளார். அதனை அழிக்குமாறு உழுதுகொண்டிருந்த விவசாயி தெரிவித்ததோடு, இருவரைக் கைகளாலும் மண்வெட்டியாலும் தாக்கியுள்ளார். காயமடைந்த அவர்கள் மன்னார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

காயமடைந்தவர்கள் சார்பாக உயிலங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டபோதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

கடந்த திங்கட்கிழமை கட்டுக்கரைக் குள திட்ட முகாமைத்துவக் குழு மன்னார் மாவட்டச் செயலர் மற்றும் மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரைச் சந்தித்துக் பிரச்சினை தொடர்பில் தெரியப்படுத்தி, தாக்குதல் மேற்கொண்டவர்களைக் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்தது.

பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரைக்கு அமைவாகக் கடந்த புதன் கிழமை இரவு மன்னார் மற்றும் உயிலங்குளம் பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் 12 பொலிஸார் தாக்குதலை மேற்கொண்ட நபரின் வீட்டுக்குச் சென்று அவரைக் கைதுசெய்ய முற்பட்டனர். ஆனால் வீட்டில் இருந்தவர்களும் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். பொலிஸார் அங்கிருந்து பின்வாங்கிச் சென்றனர். அதன்போது தாம் கொண்டு சென்ற கைத்துப்பாக்கியை தவறவிட்டுச் சென்றுள்ளனர்.

இந்த நிலையில் 12 பொலிஸ் உத்தியோகத்தர்களும் தமது கடமையை உரிய முறையில் செய்யவில்லை என்று திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தாக்குதல் நடத்தியவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளில் மன்னார் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(4.56.26)

## பெரும்பான்மையைக் காட்ட முடியாத மகிந்தராஜபக்ச விலகவே வேண்டும்

*அவரும் மைத்திரியும் அரசமைப்பையே மீறுகிறார்கள்*
*வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் விசனம்*

வவுனியா, நவ. 19

மகிந்த ராஜபக்ச மக்கள்மீது அக்கறைகொண்டவராக இருந்தால், நாட்டில் ஜனநாயகம் ஏற்படுவதை விரும்புபவராக இருந்தால் தனக்குப் பெரும்பான்மையைக் காட்ட முடியாதுள்ளதை உணர்ந்து விலகவேண்டும். அவரும் அரசதலைவரும் சேர்ந்து அரசமைப்பை அப்பட்டமாக மீறுகிறார்கள்.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா சிதம்பரபுரத்தில் நகரில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற நிகழ்வில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பை நம்பாமல் தனிநாட்டுக் கோரிக்கைக்குப் போகமுடியுமா என்ற கேள்வியை எமக்கு முன்பாக இந்த அரசு கொண்டுவந்து விட்டிருக்கிறது.

இன்று ஏற்பட்டுள்ள பிரச்சினை முழுநாட்டையும் ஏதோ ஒரு விதத்தில் பாதித்துள்ளது. அரசதலைவர் தூரநோக்கில்லாமல் அரசமைப்பை மீறி மேற்கொண்ட செயற்பாடுகளால் நாடாளுமன்றில் மிளகாய்த் தூள் வீசும் நிலைமை ஏற்பட்டுள்ளது. சபாநாயகரின் கதிரையைத் தூக்கிக்கொண்டு ஓடுகிறார்கள். மக்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றுக்குச் சென்ற உறுப்பினர்கள் சபாநாயகரின் கதிரைக்கு மேலே தண்ணீரை ஊற்றிவிட்டு, சபாநாயகர் பயத்தில் சிறுநீர்கழித்துவிட்டார் என்று சொல்வோம் என்று கூறுகிறார்கள். இன்னுமொருவர் கத்தியோடு நிற்கிறார். கதிரையால் தூக்கிஅடிக்கிறார்கள். பொலிஸார்கூட காயமடைந்துள்ளனர். தற்போது நாடாளுமன்றின் நிலமை இப்படியிருக்கிறது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அமர்வைப் பார்க்கும்போது அசிங்கமாகவும், வெட்கமாகவும் இருந்தது. யார் இவர்களை நாடாளுமன்றுக்கு அனுப்பினார்கள்! வீதிகளில் நின்று மிளகாய்த்தூள் வீசி நகைகளை அறுத்தவர்களும், கத்தியைக் காட்டிக் கொள்ளையடித்தவர்களும் நாடாளுமன்றம் போனமையால்தான் இவ்வாறான நிகழ்வுகள் நடைபெறுகின்றன. மீண்டும் நாடாளுமன்றைக் கூட்டினால் என்னமாதிரியான தெருக்கூத்தெல்லாம் நடக்குமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

எமக்குக் கிடைக்கவேண்டிய உரிமையை இந்த நாட்டினுடைய அரசமைப்பின் மூலமாகத்தான் பெற்றுகொள்ள முடியும் என்ற நம்பிக்கையில் நாம் இருக்கிறோம். அப்படியிருக்கும்போது ஏற்கனவே நடைமுறையில் உள்ள அரசமைப்பையே அரசதலைவரும் முன்னாள் அரசதலைவரும் சேர்ந்து அப்பட்டமாக மீறும்போது அரசமைப்பினூடாக தமிழர்களுக்குக் கொடுக்கப்படும் உரிமைகள் ஏன் மீறப்பட முடியாதவை? என்ற கேள்வி எழுகிறது.

தமிழர்கள் அரசமைப்பை நம்பாமல் தனிநாட்டுக் கோரிக்கைக்குப் போக வேண்டுமா என்ற கேள்வியை எமக்கு முன்னாலே இந்த அரசு கொண்டுவந்து விட்டிருக்கிறது. இது ஒரு சிவில் போர் ஏற்படுவதற்கான சூழலை உருவாக்கியுள்ளதாகவே உணர வேண்டும் - என்றார்.

(4.110)

## யாழ்.பண்ணையில் 600 கிராம் வெடிபொருள் மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 19


யாழ்ப்பாணம் பண்ணையில் 600 கிராம் வெடிமருந்து நேற்று மீட்கப்பட்டது என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர். மண்டைதீவு கடற்படையின் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த ரகசிய தகவலையடுத்து வெடிமருந்து மீட்கப்பட்டது. பண்ணையில் மீனவர்களின் படகுகள் நிறுத்தி வைக்கப்படும் பகுதியில் இவை மீட்கப்பட்டுள்ளன.

அடுத்த மாதமளவில் மீன் பெருக்கம் அதிகரிக்கும் என்பதால் வெடி வைத்துப் பிடிப்பதற்காகப் பதுக்கி வைத்திருந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

(4.8)

## 3 மாதங்களான குரங்குக் குட்டியை சுமந்து அன்பு பாராட்டிவரும் நாய்!

### வவுனியாவில் இப்படி ஒரு நெகிழ்ச்சி அதைப் பிடிக்க முற்பட்டால் நாய் கடிக்கும்



வவுனியா, நவ. 19

மரத்திலிருந்து வீழ்ந்த மூன்று மாதங்களேயான குரங்குக் குட்டியை தன்முதுகில் சுமந்து திரிகிறது ஒரு நாய்.

இந்த வியப்பான சம்பவத்தை வவுனியா கருவேப்பங்குளம் பகுதியில் அவதானிக்க முடிகிறது.

தனது வீட்டு மாமரத்தில் நின்ற குரங்குகளை உரிமையாளர் துரத்தியபோது அதிலிருந்து சிறியகுரங்குக் குட்டி ஒன்று கீழே வீழ்ந்துள்ளது.

அவர் அதனைப் பராமரித்து வந்துள்ளார். அவரது வீட்டில் கண்ணன் என்று அழைக்கப்படும் வளர்ப்பு நாய் குறித்த குரங்குக் குட்டியுடன் நட்பாக உள்ளது. தனது முதுகில் குரங்குக் குட்டியைச் சுமந்து அன்பு பாராட்டி வருகின்றது. அந்தக் குரங்குக் குட்டிக்கு வீட்டு உரிமையாளர் துளசி என்று பெயரிட்டுள்ளார்.

குரங்குக் குட்டியை முதுகில் சுமந்தவாறு தான் போகும் இடமல்லாம்அதனைச் சுமந்து செல்கின்றது. குரங்குக் குட்டியை யாரும் பிடிக்க வந்தால் நாய் அவர்களுக்குக் கடிக்க முற்படுகிறது. தாம் வெளியில் சென்றாலும் குரங்குக் குட்டியை நாய் பாதுகாப்பாகக் கவனித்து வருகிறது என்று வீட்டின் உரிமையாளர் கூறுகிறார்.

வீட்டின் உரிமையாளர் தனது பிள்ளைகளுக்கு நிகராக வளர்ப்பு நாயையும், குரங்குக் குட்டியையும் பராமரித்து வருகின்றார்.

(4.110)

## 440 ஆசிரிய வெற்றிடங்களுக்கு 357 பேர் மட்டுமே விண்ணப்பம்

*மகாணக் கல்வி அமைச்சின் செயலர் கூறுகின்றார்*

யாழ்ப்பாணம், நவ. 19

வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் கணித, விஞ்ஞான, ஆங்கில பாடங்களுக்கு 440 வெற்றிடங்கள் நிலவுகின்றன. ஆனால் இந்தப் பாடங்களுக்காக 357 விண்ணப்பங்கள் மட்டுமே கிடைத்துள்ளன என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் குறித்த பாடங்களுக்கான ஆசிரியர்களின் வெற்றிடங்களை நிரப்ப கடந்த மாதம் வடக்கு மாகாணப் பட்டதாரிகளிடமிருந்துவிண்ணப்பங்கள் பத்திரிகைகள் ஊடாகக் கோரப்பட்டன. விண்ணப்பிக்க வழங்கப்பட்ட காலம் நிறைவடைந்தபோதும் எமக்குத் தேவையான 450 விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை. 357 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

கிடைக்கப்பெற்ற விண்ணப்பதாரிகளைப் போட்டிப் பரீட்சைக்கு உட்படுத்தாது, விண்ணப்பித்த அனைவரையும் நேர்முகத்தேர்வுக்கு அழைப்பதற்கு ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. நேர்முகத் தேர்வில் ஏதாவது தகுதியீனங்கள் காணப்படும் விண்ணப்பதாரிகள் நிராகரிக்கப்படுவார்கள். ஏனைய விண்ணப்பதாரிகள் அனைவரையும் நியமனத்தில் உள்வாங்கவே தீர்மானிக்கப்பட்டுள்ளது. தகுதியானவர்களாக இனம் காணப்படும் அனைத்துப் பட்டதாரிகளுக்கும் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அல்லது டிசெம்பர் மாத முதல் வாரத்தில் நியமனம் வழங்கப்படும். அவர்களுக்கு 3 வாரங்கள் முழுநாள் பயிற்சியும் வழங்க ஏற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. பயிற்சிகளை நிறைவுசெய்யும் ஆசிரியர்கள் அடுத்த வருடம் பாடசாலைகள் ஆரம்பிக்கும்போது கற்பித்தல் பணியில் அமர்த்தப்படுவார்கள் என்று செயலாளர் மேலும் தெரிவித்தார்.

(4.105)

## உறுப்பினர் அரச ஊழியர் அல்ல; அரசமைப்பின்படியே சம்பளம்

*சட்டத்தரணிகள் இருவேறு கருத்து*

யாழ்ப்பாணம், நவ. 19

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் அரச ஊழியர் அல்ல என்று மணிவண்ணன் தரப்புச் சட்டத்தரணிகள் தெரிவித்த கருத்துக்கு அரசமைப்பின்படி அங்கீகரிக்கப்பட்ட சம்பளம் வழங்கப்படுவதாக ஆணைக்குழு உறுப்பினர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினராகப் போட்டியிட்ட காலத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் வி.மணிவண்ணன் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினரை அச்சுறுத்தினார் என்று தொடரப்பட்ட வழக்கு குற்றவியல் கோவை 486 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டது. அது குற்றவியல்கோவை இலக்கம் 186இன் கீழ் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்ற ஆணைக்குழு உறுப்பினரின் ஆட்சேபனையின் பிரகாரம் மீண்டும் பொலிஸாரிடம் வாக்கு மூலம் வழங்குமாறு ஆணைக்குழு உறுப்பினரை நீதி மன்றம் பணித்திருந்தது.

ஆணைக்குழு உறுப்பினர் பொலிஸாரிடம் வழங்கிய வாக்குமூலத்தின் பிரகாரம் பொலிஸாரால் நீதிமன்றுக்கு மீண்டும் குற்றப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய தற்போது இடம்பெறும் வழக்கு சில நாள்களுக்கு முன்னர் யாழ்ப்பாண நீதிவான் மன்றில் சி.சதீஸ்தரன் முன்னிலையில் விளக்கத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மணிவண்ணன் தரப்பில் முற்பட்ட சட்டத்தரணிகளான மு.ரெமீடியஸ், வி.திருக்குமரன் உள்ளிட்டோர் ஆணைக்குழு உறுப்பினர் அரச ஊழியர் அல்ல எனத் தெரிவித்தார். ஆணைக்குழுவின் உறுப்பினர் சார்பில் முற்பட்ட சர்மினி விக்னேஸ்வரன், ஆணைக்குழுவின் உறுப்பினருக்குச் சேவைக் காலத்தில் அரசமைப்பில் அனுமதிக்கப்பட்ட சம்பளம் வழங்கப்படுகிறது என்று சுட்டிக்காட்டினார். இவற்றை ஆராய்ந்த நீதிமன்று வழக்குத் தொடர்பான விடயங்களை அடுத்த தவணையில் சமர்ப்பணம் செய்யுமாறுகூறி பெப்ரவரி முதலாம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

(4.105)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கேலிக்குள்ளாகும் மக்களாட்சி

இலங்கையின் அரசியல் குழப்பம் தீர்வதற்கான வழிவகைகள் எவையும் தெரியவில்லை. குழப்பத்திற்குத் தீர்வு காணும் வகையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நேற்றுக் கூட்டப்பட்ட கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் பிரச்சினைக்கு முடிவு எட்டப்படக்கூடிய முடிவுகள் எவையும் எடுக்கப்படவில்லை.

அரசதலைவரின் கோரிக்கைக்கு ஏற்ப நாடாளுமன்றத்தில் மீண்டும் நிறைவேற்றப்பட்ட மகிந்தவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஏற்பதற்கு மைத்திரிபால மறுத்துவிட்டார். நாடாளுமன்ற விதிமுறைகளுக்கு அமைவாக அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை என்றே அவர் தொடர்ந்தும் கூறிவருகின்றார்.

கட்சித் தலைவர்களுடனான நேற்றைய கூட்டத்திலும் இந்தக் கருத்தையே அவர் வலியுறுத்தினார். நாடாளுமன்ற வழமைக்கு ஏற்ப போதிய முன்னறிவித்தல் கொடுத்து நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் விவாதம் நடத்தி அதன் பின்னரே வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும், அதனையே தான் ஏற்றுக்கொள்வார் என்று அரசதலைவர் வலியுறுத்தியிருக்கிறார். ஆனால் அதனை ஏற்றுக்கொள்வதற்கு ஐக்கிய தேசிய முன்னணி மறுத்துவிட்டது. உரிய முறையில்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்று அது வாதாடுகின்றது.

இதையடுத்து இணக்கம் ஏதும் இல்லாமல் கூட்டம் முடிந்தது. கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தபோதும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அங்கு ஒரேயொரு வசனம்கூடப் பேசவில்லை என்று கூறப்படுகின்றது. இந்த நிலையில் நாடாளுமன்றம் இன்று மீண்டும் கூடுகின்றது.

இன்றைய அமர்வில், மகிந்த மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட முறைமை ஏற்புடையதில்லை என்று தெரிவித்து அறிக்கை ஒன்றை விடுத்த பின்னர் சுதந்திரக் கட்சி மற்றும் பொது எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளியேறிவிடுவது என்கிற முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.


அத்தகையதொரு நிலமை ஏற்படும்போது சபாநாயகரால் மீண்டும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்புக் கோரப்படக்கூடும். மீண்டும் மகிந்த மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்படலாம். அதனை அரச தலைவருக்குச் சபாநாயகர் மீண்டும் அனுப்பிவைப்பார், அதனை ஏற்க முடியாது என்று அவரும் திருப்பி அனுப்புவார்.

எதிர்வரும் 7ஆம் திகதி வரைக்கும் இந்த நிலமையே மீண்டும் மீண்டும் கோமாளிக்கூத்தாக இடம்பெறக் கூடும் என்று எதிர்வுகூறப்படுகின்றது. அன்றைய தினம் தமக்குச் சாதகமாக நீதிமன்றத் தீர்ப்பு வரக்கூடும் என்று மகிந்த தரப்பினர் எதிர்பார்ப்பதால் அதுவரையில் இந்த சடுகுடு ஆட்டம் தொடர்ந்து கொண்டே இருப்பதற்கான வாய்ப்புகளே அதிகம் இருப்பதாக அரசியல் அவதானிகள் கணிக்கின்றனர்.

அவ்வாறு நடைபெறுமானால் அது மக்களாட்சியை மேலும் கேலிக்கூத்தாக்கிவிடும். மக்களாட்சியைப் பாதுகாத்து, நல்லாட்சியை வழங்குவோம் என்று கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த ஒரு தலைவரால் மக்களாட்சியே கேலிக்குள்ளாக்கப்படும் நிலமை படுமோசமானது. நாடு பொருளாதார அழிவை நோக்கித் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கையில் தலைவர்கள் தமது சுயநலத்திற்காக மக்களாட்சியைக் கேவலமாக்கி விளையாடிக்கொண்டிருப்பதை ஏற்க முடியவில்லை. இத்தகைய மோசமான சிந்தனைப் போக்குக்கொண்ட தலைவர்களால் நாட்டை எப்படி முன்னேற்றகரமாகக் கட்டியெழுப்ப முடியப்போகின்றது? அது வெறும் பகற்கனவு மட்டுமே.

தலைவர்களின் இத்தகைய மோசமான செயலுக்கு எதிராக மக்கள் போர்க்கொடி தூக்காத வரையில் இந்த நாடகம் தொடரவே செய்யும். மக்களும் முட்டாள்களாகிக் கொண்டேதான் இருக்கவேண்டும்.

# கேள்விக்குள்ளாகியிருக்கும் சபாநாயகரின் நடுநிலை



நவரத்தினம் தனுஜா

நாட்டின் குழப்பம் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. அது முற்றுப் பெறுவதற்கான சாத்தியங்கள் தொலைவில் கூடத் தென்படுவதாகத் தெரியவில்லை. மகிந்த - ரணில் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழப்பல், கூச்சல்களால் நாடாளுமன்று அமளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஜனநாயகச் சால்வையைப் போர்த்திக் கொண்டு மன்றுக்குள் நுழைந்த ஐக்கிய தேசியக் கட்சியினரும் மகிந்த அணியினரும் மல்லுக்கட்டிய காட்சிகளை மக்கள் மல்யுத்த சண்டைக் களம் போலவே இரசித்து முடித்திருக்கின்றனர். இந்த நிலையில் சபையில் நடந்த குழப்பங்களில் சபாநாயகரின் பங்கு பற்றி ஆராய்வது சாலப் பொருத்தமாகவே இருக்கும்.

### 14ஆம் திகதியச் சம்பவத்தில் சபாநாயகர்

நாட்டின் குழப்பநிலைக்கு முடிவுகாண்பதற்கு நீதிமன்றத்தின் இடைக்காலத் தடை உத்தரவு நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு வாய்ப்பளித்தது. இதன் நிமித்தம் 14ஆம் திகதியன்று கூடிய நாடாளுமன்றில் அரச தலைவரால் புதிய தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்ட மகிந்த ராஜபக்சவுக்குத் தலைமை அமைச்சருக்குரிய ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது. அன்றைய நாளில் மற்றைய உறுப்பினர்களின் ஆசனங்கள் வழமைக்கு மாறாக இடம் மாற்றப்பட்டிருந்தன ஆதலால் மகிந்தவின் ஆசனம் பற்றிய விவாதம் எழுவதற்கான சாதகத் தன்மை குறைவாகவே காணப்பட்டது.

> நாடாளுமன்றப் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கிடையில் தொங்கு நிலையில் இருக்கின்ற தலைமை அமைச்சருக்கான ஆசனத்தைச் சபையின் தலைவர் என்ற வகையில் சபாநாயகர் விவாதித்தி ருக்கவும், அதுபற்றிய ஒழுங்கை அதற்குரிய சட்ட நடைமுறைகளுக்கு உட்பட்டு முன்னெடுத்துச் சபையைக் கொண்டு நடத்தியிருக்கவும் முடியும். ஆனால், அவ்வாறு நிகழவில்லை.

இருப்பினும் நடாளுமன்றப் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கிடையில் தொங்கு நிலையில் இருக்கின்ற தலைமை அமைச்சருக்கான ஆசனத்தைச் சபையின் தலைவர் என்ற வகையில் சபாநாயகர் விவாதித்திருக்கவும். அதுபற்றிய ஒழுங்கை, அதற்குரிய சட்ட நடைமுறைகளுக்கு உட்பட்டு முன்னெடுத்துச் சபையைக் கொண்டு நடத்தியிருக்கவும் முடியும். ஆனால், அவ்வாறு நிகழவில்லை.

### கூரிய ஆயுதங்களோடு நுழைந்தவர்கள் தண்டிக்கப்படவில்லை

14ஆம் திகதியன்று நாடாளுமன்று கூடியபோது ஐக்கியதேசியக் கட்சியைச் சேர்ந்த ரஞ்சன் ராமநாயக்க, தேவரப்பெரும ஆகியோர் கத்தி சகிதம் காட்சியளித்ததாகச் செய்திகள் வெளிவந்திருந்தன. முதல் நாள் நடந்திருந்த இத்தகைய அடாவடிச் செயல்களுக்குச் சபாநாயகர் என்ற வகையில் குறிப்பிட்ட நபர்கள் சார்ந்து நடவடிக்கை எடுக்கும்படி அவர்களைப் பிரதிபலிக்கும் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவர் அறிவித்தல் வழங்கியிருக்க முடியும். அவ்வாறு நிகழ்ந்திருந்தால் மறுநாள் கூடியிருந்த நாடாளுமன்றில் முன்னைய நாளைவிடக் குழப்பங்கள் அதிகமாகியிருப்பதற்கு வாய்ப்புக்கள் குறைவாக இருந்திருக்கலாம். சபையையும் சபாநாயகர் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்திருந்து பிரச்சினையைச் சுமூகமாகத் தீர்த்து வைத்திருக்கலாம்.

### மகிந்தவுக்கான பெரும்பான்மையை நிரூபிக்கக்கோரியது தவறு

ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவம் செய்பவரானாலும் கருஜெயசூரிய தற்போது நடுநிலையைப் பேண வேண்டிய கடப்பாட்டுக்குரிய சபாநாயகர்க இருக்கிறார். அவருக்கு எவர் பக்கம் சார்ந்து வாக்களிப்பதற்கும் தகுதிப்பாடு இல்லை. அதேபோல பக்கம்சார்ந்து செயற்படுவதற்கும் பல சட்ட வரைமுறைகள் தடையளிக்கின்றன.

ஆனால், அவர் தன்னுடைய சபாநாயகர் பணியிலிருந்து விலகாமலும் அதே சமயம் தன்னுடைய முன்னைநாள் கட்சியில் கரிசனை கொண்டிருப்பதையும் வெளிக்காட்டியிருக்கின்ற விடயத்தை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது 14ஆம் திகதி அன்று நாடாளுமன்ற அமர்வு ஆரம்பிக்கும் வரைக்கும் சபாநாயகராக் கருஜெயசூரிய வெளியிட்டிருந்த பேச்சுக்கள் அவரது நடுநிலமையைக் கேள்விக்குறியாக்குபனவாகவே கருதப்படத்தக்கன. நாடாளுமன்றில் 113 ஆசனங்களைக் காண்பித்து மகிந்த ராஜபக்ச தன்னுடைய பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்று அவர் வெளிப்படையாகவே கூறியிருந்தார். நாடாளுமன்றில் இது பற்றிய தீர்மானத்தை எவராவது முன்வைக்கும் பட்சத்தில் அதுபற்றிய நடவடிக்கைக்குச் சபாநாயகர் தீர்ப்பிட முடியுமே தவிர முற்கூட்டியே தன்னிச்சையாக அவர் இப்படியாகக் கருத்துத் தெரிவிக்க முடியுமா? என்பது கேள்விக்குரியது. இதற்கு முதலில் ரணில் விக்கிரமசிங்க 41ஆசனங்களுடன் தலைமை அமைச்சராகியிருந்தார் என்பதும் கவனத்துக்குரியது.

### கட்சிகளுக்கான கூடலில் அவர் கலந்து கொள்ளவில்லை

சபாநாயகரின் பங்களிப்பானது எப்போதுமே பக்கச் சார்பின்றியதாகவே இருக்க வேண்டும். அரச தலைவரால் அனைத்துக் கட்சிகளும் உள்ளடக்கிய சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், சபாநாயகருக்கு அதற்காகத் தனிப்பட்ட (கட்சி சாராமல், சபாநாயகராக) அழைப்பும் விடுக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சந்திப்பில் அவர் கலந்து கொள்ளவில்லை என்ற தகவல் வெளியாகியிருக்கிறது.

சபாநாயகர் தன்னுடைய சபை முதல்வர் என்கிற பதவியைத் தனித்து உணரவில்லை என்பதே இந்த விடயத்திலும் வெளிப்படுகின்றது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றைக் கலைத்தமை சட்டத்துக்குப்-புறம்பானது என்று வழக்குகள் தொடுக்கப்பட்டிருப்பதைப்போல சபாநாயகரின் நடுநிலை தொடர்பிலும் கேள்வியெழுப்பிப் பல வழக்குகள் தொடுக்கப்பட்டிருப்பதற்கு இதுபோன்ற பலவும் காரணமாகவிருக்கலாம்.

# ரணில் எனும் தில்லாலங்கடி

வில்வரத்தினம் சுகுமார்



1949 ஆம் ஆண்டு பிறந்த ரணில் விக்கிரமசிங்க இதுவரை இலங்கை அரசியலில் கிட்டத்தட்ட 40வருடங்களை நிறைவுச் செய்திருக்கிறார். 1994ஆம் ஆண்டில் காமினி திசாநாயக்கா படுகொலை செய்யப்பட்டதை அடுத்து அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக நியமிக்கப்பட்டார். 1993 மற்றும் 1994ஆம் ஆண்டுகளிலும் 2001 முதல் 2004 வரையிலும். 2015முதல் 2018 வரையிலுமாக இலங்கையின் தலைமை அமைச்சராகப் பதவியில் இருந்துள்ளார். ரணில் விக்கிரமசிங்கவின் இதுவரை காலங்களுக்கான அரசியல் அறுவடை என்ன என வினாவினால் அதற்கான பதிலை அவர் கடந்து வந்த பாதையில் இருந்துதான் கண்டு கொள்ள வேண்டும். அவர் கடந்து வந்த பாதையில் இன்றுவரைக்கும் தீர்வுகிடைக்காமல் நீளுகின்ற விடயம் இனப்பிரச்சினையே. அது இன்னமும் இழுபட்டுக் கொண்டுதான் இருக்கிறது. அடுத்தது நாடு எதிர் நோக்கியுள்ள பொருளாதார நெருக்கீடு. அதுவும் இற்றை வரைத் தொடர்கிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தலைவர்களால் முன்னெடுக்கப்பட்டிருந்த சுய பொருளாதாரக் கொள்ளைக்கும் தற்போது ரணில் வரிந்து கட்டிநிற்கின்ற 'மேலைப் பாணிப்' பொருளாதாரக் கொள்ளைக்கும் ஏணி வைத்தாலும் எட்டுவதாகவில்லை. இப்படியாகப் பல நிலைகளிலும் பலவீனமாக இருக்கின்ற ரணில் விக்கிரமசிங்கவால் எப்படித் தொடர்ந்தும் அரசியலில் தன்னைத் தக்க வைக்க முடிகிறது என்றால் அது ரணிலைச் சுற்றிப் பிணைந்திருக்கின்ற ஏனைய பலவீனமான அரசியல் வாதிகளின் தயவாலேதான் என்பதுதான் வெளிப்படை.

**ஐக்கியதேசியக் கட்சியின் தோல்விகளும் ரணிலுக்கு வந்தமைந்த வாய்ப்புக்களும்**

1994ஆம் ஆண்டு ரணிலின் தலைமைத்துவத்துக்கு வந்திருந்த ஐக்கியதேசியக் கட்சி தொடர்ந்தும் தென்னிலங்கைக் கட்சிகளுள் முதன்மையான எதிர்க்கட்சியாக இருந்து வருகிறது. ஆனால், அது எதிர் கொண்டு வந்த தோல்விகள் எண்ணிலடங்காதவைகளாகவே இருக்கின்றன. 1994ஆம் ஆண்டு இந்தக் கட்சியை ரணில் பொறுப்பேற்றதிலிருந்து அந்தக் கட்சி எதிர்கொண்ட தேர்தல்களில் அது தோல்விக்கு மேல் தோல்விகளையே சந்தித்து வருகிறது.



1977ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில், கொழும்பு பியகம தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவான ரணிலுக்குப் பதில் அயலுறவு அமைச்சுப் பதவியை அளித்தவர் அப்போதைய அரச தலைவரும் ரணிலின் மாமாவும் ஆன ஜே.ஆர். ஜெயவர்த்தனா. பின்னர் மெல்லக் கல்வி, இளைஞர் விவகார மற்றும் தொழில் வாய்ப்புக்கள் அமைச்சராக ரணிலைப் பதவியிலமர்த்தினார் ஜே.ஆர். பின்னர், பிரேமதாசவின் ஆட்சியில் ஐக்கிய தேசியக் கட்சியின் சபை முதல்வராகவும், தொழிற்துறை, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சராகவும் பதவியிலிருந்தார். 1993ஆம் ஆண்டில் பிரேமதாச கொல்லப்பட, ரணில் தலைமை அமைச்சரானார். 1994ஆம் ஆண்டுத் தேர்தலில் சந்திரிகா தலைமை அமைச்சராகியதும் ரணில் எதிர்க் கட்சித் தலைவராகப் பதவியிலமர்ந்தார். பின்னர் 2015ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பொதுத் தேர்தலை எதிர்கொள்ளாமல், நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையைப் பெற்றுத் தலைமை அமைச்சரானார். இவ்வாறாகத் தனக்கு வந்தமைந்த வாய்ப்புக்களைச் சரிவரப் பயன்படுத்தி ரணிலின் கெட்டித்தனம் பாராட்டுக்குரிய ஒன்றாகிற்று.

**ரணில் - புலிகள் நிலைப்பாடு**

சூழ்ச்சி மிக்க ரணிலின் அரசியலில் பிடிப்பில்லாத காரணத்தாலேயே புலிகள் 2005ஆம் ஆண்டின்போதான தேர்தலில் ரணிலுக்கான தமிழ் மக்களின் ஆதரவை நீர்த்துப்போகச் செய்திருந்தனர். பிரதிபலிப்பாக மகிந்த ஆட்சிக்கு வந்தார். புலிகள் அமைப்பிலிருந்து கருணாவை விலைக்கு வாங்கியவராக ரணில் விமர்சிக்கப்படுவதும், துரோகி எனக் கருணா விமர்சிக்கப்படுவதும் தமிழ் மக்கள் மத்தியில் பிரபலம் பெற்றிருப்பதையும் மறந்துவிட முடியாது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் அக்கறையற்ற அரசியல் வாதியான ரணிலின் தந்திரங்கள் தெரிந்தே புலிகள் அப்போதெல்லாம் ரணிலைப் புறமொதுக்கியிருந்தனர். புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தால் "குள்ள நரி" என்று வர்ணிக்கப்படுமளவுக்கு ரணிலின் சகுனித் திட்டங்கள் அமைந்திருந்தன. புலிகள் - இலங்கை அரசு தரப்புகளால் மேற்கொள்ளப்பட்டு வந்த இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்களில் ரணிலின் தலையீடும், செல்வாக்கும் நேர்மறையாகவே இருந்தன. இவை எல்லாம் தமிழ் மக்கள் பலருக்கும் தெரிந்த விடயமே. ஆயினும் புலிகளை நேரடியாக அழித்தது என்ற முழுப் பாத்திரவாளியாகவும் மகிந்த ஆகிக்கொண்டதால் மகிந்தவை எதிர்க்கும் வக்கிரத்துடன் மகிந்தவைவிடக் கொடிய ரணிலை ஆதரிப்பதாகவே தமிழ்த் தலைமைகளின் அரசியல் அமைந்திருப்பது காலநியதியாகிவிட்டிருக்கிறது.

**கூட்டமைப்பு - ரணில் நிலைப்பாடு**

மகிந்தவை எதிர்ப்பதான நோக்கத்துக்காக ரணிலை ஆதரிப்பதாகக் கூட்டமைப்பின் நிலைப்பாடு இருப்பது உள்ளங்கை நெல்லிக்கனிதான். ஆனாலும், இந்த இரண்டு எதிரிகளையும் கையாளுகின்ற, திறனும், யுக்தியும் தமிழ்த் தலைமைகளிடத்தே இருந்திருக்கவில்லை என்பதையும் வரலாறு பதிவு செய்துகொண்டிருக்கிறது. புலிகள் கோரிய அரசியல் உரிமைகளைப் புலிகள் கோரிய விதத்திலன்றி வேறு எந்த விதத்திலும் பெரும்பான்மைத் தலைவர்களிடமிருந்து பெற்றுவிடமுடியாது என்பதையும் வரலாறு பதிவாக்கிக் கொண்டு வருகிறது.

ரணிலில் வாய் வார்த்தைகளோடும், எழுத்து மூல வாக்குறுதிகளுக்குப் பின்னாலும் இழுபட்டுக் கொண்டிருக்கிறது கூட்டமைப்பு. 'நல்லாட்சி' எனும் போர்வைக்குள்ளிருந்து தமிழருக்குத் தீர்வு பெற்றுக்கொடுத்ததாக ரணிலை மேற்கோள்காட்டி எந்தவொரு செயலையும் உறுதிப்படுத்த முடியாமலிருக்கின்றன உண்மை. தமிழர்களின் அரசியல் பலவீனத்தை முகத்தில் அறைந்து உணர்த்துவதன்றி வேறல்ல.

## ஆசிரியருக்கான கடிதம்

### நேரக் கணிப்பாளர் இன்றி கொடிகாமம் பஸ் நிலையம்

யாழ்.மாவட்டத்தில் தென்மராட்சிப் பிரதேசத்தில் கொடிகாமம் நகரம் மிகவும் பிரசித்தி பெற்றதாகும். இங்குள்ள பஸ் நிலையத்துக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையினரால் நேரக்கணிப்பாளர் நியமிக்கப்படவில்லை.

இதனால் பயணிகள் பஸ்புறப்படும் நேரம் தெரியாது அவதியுறுகின்றனர். எனவே இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் ஒரு நேரக் கணிப்பாளரை நியமித்து மக்களின் அசௌகரியத்தைப் போக்குவரத்து முன்வரவேண்டும்.

எஸ்.பத்மநாதன்

### பலி எடுக்கக் காத்திருக்கும் பாழாங் கிணறு

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 11ஆம் கிளை வாசலில் இருக்கும் பாவனையற்ற கிணறு ஒன்று (பொதுக்கிணறாக இருக்க வேண்டும்) கிணற்றின் ஒரு பகுதி வீதியிலும் ஒரு பகுதி சங்கத்தின் உட்புறத்திலும் காணப்படுகிறது.

இது ஒரு பாவனையற்ற கிணறு. திறந்தபடி உள்ளது.


இதனால் இரவு வேளையில், மழை காலங்களில் பயணிப்போர் கரைப் பக்கமாக வந்தால் கிணற்றுக்குள் தான் விழவேண்டும்.

எனவே தயவு செய்து கிணற்றை மூடிவிடவோ, அல்லது பாதுகாப்புடையதாக்குவதற்கோ உரியவர்கள் முன்வரவேண்டும். இல்லாவிடின் பலரை பலி எடுக்கும் நிலை வரலாம்.

த.யோகராசா,
சாவகச்சேரி

**வாசகர்களே!**

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! ஆனால், மேற்குறித்த விடயங்களைத் தவறாது இணைத்து அனுப்பவும். எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.



## மாலைதீவின் புதிய அரசதலைவர் இப்ராகிம் முகமது சோலி

மாலி.நவ.19
மாலைதீவின் புதிய அரசதலைவராகத் தேர்தல் மூலம் தெரிவாகியிருந்த இப்ராஹிம் முகமது சோலி மாலைதீவின் தலைநகர் மாலியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில்அதன்புதியஅதிபராகபொறுப்பேற்றிருக்கிறார். 2013ஆம் ஆண்டில் மாலைதீவின் அரச தலைவராக அப் துல்லா யாமீன்பொறுப்பேற்றார்.

பின்னர் முன்னாள் அதிபர் முகமது நஷீத் உட்பட 9அரசியல்தலைவர்களைச்சிறையில் அடைத்தார். அவர்களை விடுவிக்க உத்தரவிட்ட உயர் நீதிமன்ற நீதிபதிகளையும்பதவியில்இருந்துநீக்கினார். இதனால் அதிபர் யாமீனுக்குப் பன்னாட்டு அளவில் எதிர்ப்புகள் கிளம்பின.

அத்துடன் உள்நாட்டில் போராட்டங்கள் நடைபெற்றன.

இந்த அரசியல் குழப்பங்க ளுக்கு இடையில், கடந்தசெப்டம்பர்23ஆம்திகதிமாலைதீவில் அரச தலைவருக்கான தேர்தல் நடந்தது.

இதில்முன்னாள் அதிபர் முகமதுநஷீத்தின் மாலைதீவுஜனநாயகக்கட்சிசார்பில்போட்டியிட்ட இப்ராஹிம் முகமது சோலி வெற்றி பெற்றார். அதிபர் அப்துல்லா யாமீன் படுதோல்வி அடைந்தார்.

இந்த நிலையில், மாலைதீவின் புதிய அரச தலைவராகப் பதவியேற்றுள்ளார் இப்ராஹிம் முகமது சோலி. இந்தப்பதவியேற்பு நிகழ்வில் இந்தியத் தலைமை அமைச்சர் மோடி, இலங்கையின் முன்னாள் அரச தலைவர்சந்திரிகாகுமாரதுங்காஆகியோர் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கலிபோர்னியா காட்டுத்தீ

### *பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வைட்டு ட்ரம்ப் ஆறுதல்*



வோஷிங்டன்.நவ.19
அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் ஏற்பட்ட காட்டுத்தீயால் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 76 ஆக உயர்ந்துள்ள நிலையில் பாதிக்கப்பட்டவர்களை ட்ரம்ப் சந்தித்து ஆறுதல் கூறியுள்ளார்.


கலிபோர்னியா மாநிலத்தின்சியேர்ராநெவேடாமலையடிவாரத்தில் ஏற்பட்டகாட்டுத்தீ அந்த மாநிலத்தின்தெற்கு மற்றும்வடக்குபகுதிகளில்உள்ளவனப்பகுதிகளையும், அருகாமையில் உள்ள குடியிருப்புகளையும் அழித்துள்ளது.

கடந்த8ஆம்திகதிஎரியத்தொடங்கியஇந்தக் காட்டுத்தீயானது. சுமார்27ஆயிரம்மக்கள் வாழும் பாரடைஸ் நகரை முற்றி லுமாகப் பாதித்து விட்டது. அருகாமையில் உள்ள பகுதிகளையும்சேர்ந்த்து10ஆயிரம்வீடுகள் நாசமடைந்தன. 52 ஆயிரம் மக்கள் தங்களது வீடுகளில் இருந்து வெளியேறியுள்ளனர்.

கட்டுக்கடங்காமல்பரவியகாட்டுத்தீகாரணமாக அந்தப் பகுதி கடும் புகை மூட்டமாக உள்ளது. தீயில்வீடுகளைஇழந்தபலர்குடும்பம் குடும்பமாகக் மகிழுந்துகள் மூலம் தொலைவான இடத்துக்குச் சென்று மகிழுந்துக்குள் தூங்கியபடி வாழ்ந்து வருகின்றனர். இந்தக் காட்டுத் தீ அமெரிக்க மக்களைச் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. இந்த நிலையில், அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், பாதிக்கப்பட்ட பகுதிக்குச் சென்று பாதிக்கப்பட்டபகுதிகளைப்பார்வையிட்டுள்ளார். உடைமைகளை இழந்த மக்களுக்கு ஆறுதல் கூறிய டிரம்ப், தீயணைப்பு பணியில் ஈடுபட்டு வரும் வீரர்கள், பொலிசார், அரசியல் தலைவர்கள், காணாமல் போனவர்களை தேடும் குழுவில் இடம்பெற்றிருப்பவர்கள் ஆகியோரின் முயற்சிகளுக்குப் பாராட்டுக்களும் தெரிவித்திருக்கிறார்.

## பத்திரிகையாளர் ஜமால் கொலை

# “கொலைசெய்யுமாறு உத் இருநாள்களில் தெரியப்ப





வோஷிங்கடன், நவ.19
பத்திரிகையாளர் ஜமால் கஷோகியைக் கொலைசெய்யுமாறுசவூதிஇளவரசர்மொகமதுபின்சல்மான்உத்தரவிட்டிருக்கவாய்ப்புள்ளதாக அமெரிக்காவின் உளவு அமைப்பான சி.ஐ.ஏ. கருதுகிறது.

இந்த நிலையில் சவூதியைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஜமால் கஷோகியை கொன்றது யார்? என்று இன்னும் இரண்டுநாள்களில் அமெரிக்கா தெரியப்படுத்தும் என்று அமெரிக்கஅதிபர்டொனால்ட்ட்ரம்ப்தெரிவித்துள்ளார்.

ஜமாலின் கொலையுடன் சவூதியின் இளவரசர் தொடர்புற்றிருப்பதற்கான தனது கருத்தை அமெரிக்காவின் உளவு அமைப்பான சி.ஐ.ஏ. அமெரிக்க அரசின் பிற பிரிவுகளான காங்கிரஸ் உள்ளிட்ட பீடங்களுடன் பகிர்ந்திருப்பதாகத் தெரிவித்திருப்பதாகச் சி.ஐ.ஏ.வுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இளவரசர் சல்மானுக்கும் ஜமாலின் கொலைக்கும்எந்தஒருதொடர்பும்இல்லை என்று சவூதி மறுத்து வருகின்ற நிலையில் தற்போது வெளியாகியுள்ள சி.ஐ.ஏ.வின் இந்தக் கணிப்பு அதைப் பொய்யாக்கியுள்ளது. சி.ஐ.ஏ.வின் இந்த உளவுத்தகவலை முதன் முதலில் அமெரிக்கப் பத்திரிகையானவோஷிங்டன்போஸ்ட் வெளியிட்டுள்ளது. இதுதான் இன்று வரை அமெரிக்க அரசின் நிச்சயமான ஒரு மதிபீடாக இருந்து வருகிறது.

ஆனால் இது குறித்து வெள்ளை மாளிகையும், அமெரிக்க அரசதரப்பும் கருத்துக் கூறுவதற்கு மறுத்துவருகின்றன. வோஷிங்டனில் உள்ள சவூதி தூதரகத்தின் செய்தித் தொடர்பாளர், “இந்த மதிப்பீடுதவறானது” என்றுமறுத்துள்ளார்.

சவூதி இளவரசரின் உத்தரவின் பேரில் ஜமால் கொல்லப்பட்டிருக்க வாய்ப்புள்ளதாகத் தான் தெரிவித்திருப்பதற்கு ஆதாரமாக இளவரசரின் சகோதரரும், அமெரிக்காவுக்கான சவூதித் தூதருமான காலேத் பின் சல்மான், ஜமாலுடன் உரையாடிய தொலைபேசி உரையாடலை முன்வைக்கிறது சி.ஐ.ஏ. ஜமால், இஸ்தான்புல்லில் உள்ள சவூதித் தூதரகத்துக்குச் சென்று வேண்டிய ஆவணங்களைச் சேகரித்துக் கொள்ளுமாறு காலேத் பின் சல்மான் தொலைபேசி

யில் ஜமா
தனது ஆ
நிலமை
றதுயார்?
அமெரிக்
தெரிவித்
கலிபோர்
நகரில்
ளுக்கு
லைக் கெ
டார் என்
களை இ
படுத்து





ட்ரம்ப் – செய்தியாளர் வாக்குவாத விவகாரம்

# செய்தியாளருக்கு மீண்டும் அனுமதி; நீதிமன்றம் உத்தரவு

வோஷிங்டன்.நவ.19
அமெரிக்க அதிபர் ட்ரம்புடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட சி.என்.என். செய்தியாளருக்கு மீண்டும்வெள்ளைமாளிகைக்குள்அனுமதி அளிக்கவேண்டும்என்றுநீதிமன்றம்உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பொறுப்பேற்ற இரண்டுஆண்டுகளுக்குப்பிறகுஅமெரிக்காவில்இடைத்தேர்தல்நடந்துமுடிந்தது. இதில் பிரதிநிதிக்களுக்கான இடைத் தேர்தலில் ட்ரம்ப்பின் குடியரசுக் கட்சி சரிவைச் சந்தித்தது. இதன்பிறகு நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், ட்ரம்ப்கலந்து கொண்டார்.

அப்போது, சி.என்.என். செய்தியாளர் ஜிம் அகோஸ்டா, மத்தியஅமெரிக்காவில்இருந்து தெற்கு அமெரிக்க எல்லைக்குள் இடம்பெயரும் அகதிகள் குறித்துக் கேள்வி எழுப்பினார்.

அதைத்தொடர்ந்துமற்றொருகேள்வியைக் கேட்ட அகோஸ்டாவிடம், “போதும் அமருங்கள்” என ட்ரம்ப் கூறினார்.

இந்த விவகாரத்தால், ட்ரம்ப்- பத்திரிகையாளர் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அகோஸ்டா வெள்ளை மாளிகைக்குள் நுழைவதற்குத்தடைவிதிக்கப்பட்டது. இந்த நிலையில், வெள்ளை மாளிகையில் அனுமதி மறுக்கப்பட்டது தொடர்பான வழக்கு வோஷிங்டன்'பெடரல்'நீதிமன்றத்தில்நடைபெற்றது.

அப்போது, சி.என்.என். செய்தியாளரின் நுழைவுச்சீட்டை உடனடியாகத்திரும்பவும் வழங்குமாறு வெள்ளை மாளிகைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அத்துடன் வெள்ளைமாளிகைநிர்வாகம்பத்திரிகையாளர்களின் உரிமைகளை மீறி உள்ளதாகக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

“இந்தத் தீர்ப்புக்கு நாங்கள் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

எதிர்காலத்தில் இதற்கு முழுத் தீர்வு கிடைக்கும் என நம்புகிறோம். எங்களுக்கு ஆதரவு கொடுத்த அனைத்துப் பத்திரிகையாளர்களுக்கும் நன்றியைக் கூறிக் கொள்கிறோம்” எனச் சி.என்.என் தொலைக்காட்சி நிறுவனம் அறிவித்துள்ளது

லை விவகாரம்

# த்தரவிட்டது சவூதி இளவரசரா? ப்படுத்துவோம்" என்கிறார் ட்ரம்ப்



ல் ஜமாலுக்குத் தெரிவித்ததை சி.ஐ.ஏ. து ஆதாரமாகக் கருதுகிறது.
மை இப்படியிருக்க, ஜமாலைக் கொன் யார்? எனஇன்னும்இரண்டுநாள்களில் மெரிக்கா அம்பலப்படுத்தும் என ட்ரம்ப் ரிவித்துள்ளார்.
போர்னியா மாநிலத்தில் உள்ள மாலிபு ரில் நேற்றைய தினம் செய்தியாளர்க க்கு பேட்டியளித்திருந்த ட்ரம்ப், "ஜமா லைக் கொன்றது யார்? எப்படி கொல்லப்பட் ர் என்பது தொடர்பான முழு விவரங் ளை இன்னும்ஓரிருநாள்களில்பகிரங்கப் த்துவோம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

**பின்னணி**
அமெரிக்காவிலுள்ளவோஷிங்டன்போஸ்ட் பத்திரிகையில் சவூதி அரசை விமர்சித்தும், அதன் இளவரசர் முகமது பின் சல்மானை விமர்சித்தும்கட்டுரைகளைஎழுதிவந்தவர் ஜமால்.
துருக்கியைச் சேர்ந்த பெண்ணை ஜமால் திருமணம் செய்யவிருந்த நிலையில் துருக்கி இஸ்தான்புல் நகரிலுள்ள சவூதித் தூதரக அலுவலகத்துக்குச் சென்றபோது காணாமல் போயிருந்தார்.
இது தொடர்பாக, சவூதியைச் சேர்ந்த 15 பேரின் பெயரைத் துருக்கி வெளியிட்டது. ஜமாலைச்சவூதிதான்கொலைசெய்திருக்கி றதுஎன்றுதுருக்கிஉறுதியாகக்கூறியதுடன், அதற்கான ஆதாரத்தையும் வெளியிட்டது. துருக்கியில் உள்ள சவுதி அரேபியாவின் தூதரகத்தின் உள்ளே ஜமாலின் விரல்கள் துண்டிக்கப்பட்டுசித்திரவதைசெய்யப்பட்டு, பின்னர் அவரது தலை துண்டிக்கப்பட்டுக் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டதாக வும் துருக்கி குற்றம் சாட்டியது.
இதையடுத்து ஜமால் கொல்லப்பட்டதைச் சவூதி ஏற்றுக் கொண்டது. இந்த விவகாரம் பன்னாட்டு அளவில் சவூதிக்குப் பெரும் நெருக்கடி ஏற்படுத்தியிருந்தது.



## 'பிரெக்சிட்' அமைச்சராக ஸ்ரீபன் பார்க்லே

லண்டன்.நவ.19
பிரிட்டனின் அமைச்சரவையில் ஏற்பட்ட கருத்து வேற்றுமையால்'பிரெக்சிட்'வரைபுக்குப்பொறுப்பாகவிருந்த அமைச்சரான டோம்னிக் ராக் பதவி விலகியிருந்த நிலையில் அந்தப் பதவிக்கு ஸ்ரீபன் பார்க்லேவைப் பிரிட்டனின் தலைமை அமைச்சர் தெரசா மே தெரிவு செய்துள்ளார்.
ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலகும் விவகாரத்தில் தலைமை அமைச்சர் தெரசா மே சமர்ப்பித்த உடன்படிக்கைதொடர்பாகஏற்பட்டஅதிருப்தியால்அந்த நாட்டில்இரண்டுமூத்தஅமைச்சர்கள்உள்பட4அமைச்சர்கள் ஒரேநாளில் பதவி விலகியிருந்தனர். இவர்களில் பிரெக்சிட் துறை அமைச்சர் டோம்னிக் ராக் பதவி விலகியதால், தெரசா மே கடும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருந்தார்.
அவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரவும் ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருதரப்புஉறுப்பினர்கள்காய்நகர்த்திவருகின்றனர்.
இந்த நிலையில்தான் 'பிரெக்சிட்' அமைச்சராக ஸ்ரீபன் பார்க்லேவை தலைமை அமைச்சர் தெரசா மே தெரிவு செய்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினரான ஸ்ரீபன் பார்க்லே தற்போது சுகாதரத்துறை அமைச்சராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பயணித்துக் கொண்டிருந்த பஸ்சில் தீ சிம்பாவேயில் 42 பயணிகள் பரிதாபச் சாவு






ஹராரே.நவ.19
சிம்பாவே நாட்டின் மிட்லான்ட்ஸ் மாகாணத்தில் நிகழ்ந்த பேருந்து விபத்தில் 42 பேர் சாவடைந்துள்ளனர்.
மிட்லான்ட்ஸ் மாகாணத்துக்குட்பட்ட ஸ்விஷாவானே பகுதியில் இருந்து தென்னாபிரிக்காவில் உள்ள முசினா என்ற பகுதியைநோக்கிக்கிட்டத்தட்ட70பேரை உள்ளடக்கிய அந்தப் பேருந்து பயணமாகிக் கொண்டிருந்தது.
புலாவயோ பெய்ட்பிரிட்ஜ் வீதி வழியாக நேற்றிரவு சென்றபோது அந்தப் பேருந்து திடீரென்று தீப் பிடித்து எரியத் தொடங்கியது.
ஓடும் பேருந்தில் ஏற்பட்ட இந்தத் தீயால், அதில் இருந்த 42பேர் சாவடைந்தனர். 20இக்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் சாவடைபவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.
இதேமாகாணத்தில்உள்ளருசாப்பேஎன்னுமிடத்தில் கடந்த வாரம் இரண்டு பேருந்துகள்மோதிக்கொண்டவிபத்தில் 50 பேர் சாவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது

## 2018ஆம் ஆண்டின் சிறந்த சொல் 'டொக்சிக்' ஒக்ஸ்போர்ட் அகராதி அறிவிப்பு

லண்டன்.நவ.19
விஷம் எனப் பொருள்படும் 'டொக்சிக்' (toxic) என்ற சொல்லை இந்த ஆண்டுக்கான சிறந்த சொல்லாக 'ஒக்ஸ்போர்ட்' அகராதி தெரிவு செய்துள்ளது.
கடந்த 11வருடங்களாக அந்தந்த ஆண்டுகளின் சிறந்த சொல்லைஒக்ஸ்போர்ட்அகராதிவெளியிட்டுவருகிறது.
இந்த நிலையில், இந்த ஆண்டின் பன்னாட்டு வார்த்தையாக டொக்சிக் என்னும் வார்த்தையைத் தெரிவு செய்துள்ளதாகஒக்ஸ்போர்ட்அகராதிசெய்திவெளியிட்டுள்ளது. ஆங்கிலத்தில் டொக்சிக் என்பது தமிழில் விஷம் என்று பொருள் படுகிறது.
இது இலத்தீன் மொழியின் ரொக்ஸியஸ் என்ற சொல்லில் இருந்து உருவானது. 17ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில்இந்தச்சொல்பயன்பாட்டுக்குவந்துள்ளது. இந்த ஆண்டு இந்தச் சொல்லைப் பற்றி அதிகம் பேர் விவாதித்ததாக 'ஒக்ஸ்போர்ட்' கூறியுள்ளது.
அதனாலேயே இந்தச் சொல்லை இந்த ஆண்டின் சிறந்த சொல்லாகத் தெரிவு செய்ததாக அது விளக்கம் அளித்துள்ளது.












# 'இந்தியன் 2'வில் கமலுக்கு வில்லனாகச் சிம்பு?





ஷங்கரின் இயக்கத்தில் கமல் ஹாசன் இரட்டை வேடங்களில் நடித்து வெளியான படம் இந்தியன். சிறந்த வரவேற்பைபெற்ற இந்த படத்தில் கமல் இரு வேடங்களில் நடித்திருந்தார்.

1996ஆம் ஆண்டு வெளியான இந்தியன் படத்தின் அடுத்த பாகமாக 'இந்தியன் 2' உருவாக இருக்கிறது.

இந்தியன் 2 படத்தில் கமலுக்கு ஜோடியாக நயன்தாரா நடிக்கலாம் என்று செய்திகள் வெளியாகின. ஆனால் தற்போதைய தகவல்படிகமலுக்குஜோடியாகக்காஜல்அகர்வால் நடிக்கிறார் என்றும் மேலும் துல்கர் சல்மான். சிம்பு ஆகியோரும் நடிக்க உள்ளதாக தெரிகிறது.

சிம்பு இந்தப் படத்தில் பொலிஸ் அதிகாரியாக நடிக்கிறார் என்றும், கமலுக்கு வில்லனாக வருவார் என்றும் செய்தி வருகிறது. ஷங்கர் படங்களில் கதாநாயகர்களுக்குச் சமமாக வில்லன்களுக்கும் முக்கியத்துவம் தரப்படும். இந்தியன் முதல் பாகத்தில் தந்தை கமலுக்கு மகன் கமலே வில்லனாக அமைந்திருப்பார்.

கமல் தனது கட்சியின் கொள்கைகளில் முக்கியமாக ஊழல் ஒழிப்பையே முன் மொழிந்து வருகிறார். கமலின் தீவிர அரசியலுக்கும் அவரது கொள்கைகளுக்கும் உதவும் வகையிலேயே கதை. வசனம் அமைந்திருக்கும் என்கிறார்கள்.




## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 5 | 9 | 4 | | | | 7 |
| 2 | 9 | 3 | | 5 | | | | |
| 8 | | | | | 3 | | 5 | |
| | | | 3 | | | 8 | 9 | |
| | 6 | | | | | | 2 | |
| | 3 | 8 | | | 2 | | | |
| | 2 | | 5 | | | | | 8 |
| | | | | 6 | | 9 | 4 | 5 |
| 1 | | | | 9 | 4 | 3 | | |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 2 | 3 | 6 | 1 | 8 | 9 | 4 | 7 |
| 1 | 6 | 9 | 3 | 7 | 4 | 2 | 8 | 5 |
| 4 | 7 | 8 | 9 | 2 | 5 | 6 | 3 | 1 |
| 9 | 1 | 2 | 8 | 3 | 7 | 4 | 5 | 6 |
| 3 | 8 | 5 | 4 | 6 | 9 | 1 | 7 | 2 |
| 6 | 4 | 7 | 1 | 5 | 2 | 3 | 9 | 8 |
| 8 | 9 | 6 | 7 | 4 | 1 | 5 | 2 | 3 |
| 7 | 5 | 1 | 2 | 9 | 3 | 8 | 6 | 4 |
| 2 | 3 | 4 | 5 | 8 | 6 | 7 | 1 | 9 |




**மேடம்:** செயல்களில் குளறுபடி ஏற்படலாம். பணிகளில் முன்யோசனை பின்பற்றவும். தொழில் வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். செயல்களில் நிதானம் பின்பற்றவும்.

**இடபம்:** சுற்றுத்தார் அன்பு பாராட்டுவர். மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெற கிடைத்த வாய்ப்பை பயன்படுத்துங்கள்.

**மிதுனம்:** குடும்பத்தில் இருந்த குழப்பமான சூழ்நிலை சரியாகும். தொழில் வியாபாரத்தில் அபிவிருத்திப்பணி சிறந்து இனிய அனுபவம் தரும்.

**கடகம்:** சிலர் மாறுபட்ட குணத்துடன் பேசுவர். செயல்களில் நிதானம் பின்பற்ற வேண்டும். தொழில் வியாபார நடைமுறையில் சிறு அளவிலான சுணக்கம் உருவாகும்.

**சிங்கம்:** செயல்களில் கவனச்சிதறல் ஏற்படலாம். பொது இடங்களில், எவருடனும் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நிறைவேற்ற வேண்டிய பணிகள் அதிகரிக்கும்.

**கன்னி:** மனதில் நம்பிக்கை ஒளி பிரகாசிக்கும். முக்கிய செயல்கள் எளிதாக நிறைவேறும். தொழில் வியாபாரம் செழித்து புதிய சாதனை உருவாகும்.

**துலாம்:** த்தியத்தின் மீதான நம்பிக்கை வளரும். தொழில் வியாபார நடைமுறை சிறப்பாக முன்னேற்றம் பெறும். உபரி வருமானம் உண்டு.

**விருச்சிகம்:** சொந்த பிரச்னைகளை பிறரிடம் சொல்ல வேண்டாம். மனதை ஒருமுகப்படுத்துவதால் சில நன்மை கிடைக்கும். குடும்பச் செலவில் சிக்கனம் வேண்டும்.

**தனுசு:** செயல்களில் கவனச்சிதறல் ஏற்படலாம். நண்பரிடம் தகுந்த ஆலோசனை பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி பணி கொஞ்சம் கொஞ்சமாக நிறைவேறும்.

**மகரம்:** உறவினர் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். கூடுதல் வருமானம் கிடைக்கும்.

**கும்பம்:** பணி நிறைவேற தாமதமாகலாம். நம்பிக்கையுடன் புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை மந்தமாக இருக்கும்.

**மீனம்:** செயல் திறமையில் மேன்மை உண்டாகும். தொழில் வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். உற்பத்தி விற்பனை அதிகரித்து கூடுதல் இலாபம் கிடைக்கும்.

## எவர் மீதும் சினம் நீங்கு...

காணும் மனிதர்கள் மெய் அன்று
அதைக் கண்டால் வினை நீங்கும்..
நன்மை நிதம் சொல்லும்
எவர் மீதும் சினம் நீங்கு...
துயரங்கள் வெல்லும் நிலையில்
தூக்கத்தைக் தொலைத்த விழியில்
நம்பிக்கை ஓய்ந்து விடுமா?
கதிர் வரும் திசை
ஒளி தினம் எழுமே...

வேடம் தினம் போடும்
மனிதர் நலம் நிலையேது..
கா்யத்தில் படுகாயம்
சிறு காயம் எனப் பிரிவேது?
அவமானம் தாங்கும் நெஞ்சில்
உறைவாளை ஏந்தி நாளை
தன்மானம் பொங்கி எழுமே..
நிரந்தர நிலை என எதும்
இங்கு இல்லை...

காலம் விரைந்தோடும் எதைத்தேடி
மனம் ஒரு நாள் அதை சேரும்..
தோன்றும் துயர் எல்லாம்
ஓர் ஓரம் அது சேர்க்கும்..
கலையாதே மனமே
உடையாதே உறுதி
வெறியோடு எழுந்து ஓடு..
சுடர் மிகும் நிழல் தரும் அதுவே!!

'ஸ்ரீலங்கா' என்பது 'சிரி லங்கா' ஆனது.... யாவும் ஜனநாயகமே!

## twitter

பர்வீன் யூனுஸ்@parveenyunus




இலங்கை நாடாளுமன்றத்தில்
மிளகாய்ப் பொடித் தாக்குதல்
'சில்லி'தனமா இருக்கே..?


விடியலைதேடி@imparattai



**இலங்கை நாடாளுமன்றத்தில் கத்தியோடு வந்து ரகளை செய்த எம்பி. பதிலுக்கு மகிந்த ஆதரவாளர்கள் மிளகாய்ப் பொடி வீச்சு – செய்தி.**
அட நாதாரிகாளா அம்புட்டு
களவாணிகளும் நாட்டுல இல்ல,
நாடாளுமன்றத்துலதான்
இருக்கானுக போல?



## வர்ணம் தீட்டுவோம்



# சேவல் கூவி பொழுது விடியுமா?

ஒரு வீட்டில் சேவலும் வாத்தும் ஒன்றாக வளர்ந்து வந்தன. சேவல் மிகவும் கர்வம் பிடித்ததாக இருந்தது. "நான் அதிகாலையில் எழுந்து கூவு வதால் தான் கதிரவன் உதிக்கிறார். இந்த உலகத்துக்கு ஒளி கொடுக்கிறார்." என்று தன்னைப் பற்றி அது பெருமையாக எண்ணிக் கொண்டிருந்தது.

அதிகாலையில் எழுந்து கூவும் பழக்கம் அந்தச் சேவலுக்கு மட்டுமல்ல எல்லாச் சேவல் இனத்துக்குமே இயல்பான செயலாகும். ஆனால் இந்தச் சேவலோ தன் கூவல் கேட்டுதான் சூரியன் உதிப்பதாகவும் தன் குரல் கேட்டு எழுந்தே மற்றெல்லாச் சேவல்களும் கூவுவதாகவும் பெருமையடித்துத் திரிந்தது. இந்த எண்ணம் சேவலுக்கு இருப்பது வாத்துக்கும் தெரியும். சேவல் ஒரு நாள் வாத்தைப் பார்த்து "வாத்தே நான் கூவுவதால் தான் கதிரவன் உதிக்கின்றான். பிறகு மற்றச் சேவல்களும் கூவுகின்றன. ஏன் நீ கூட என் கூவல் கேட்ட பின்பேதான் கண் விழிக்கிறாய்" என்றது.

வாத்து "இது உனது இயல்பு. இந்த இயல்பு உனக்கு மட்டுமே சொந்தமில்லை. உன் இனத்தவர்கள் எல்லோருக்குமே சொந்தமானது" என்றது.

"இல்லை இல்லை இது எனது தனித்துவம் என் குரல் கேட்ட பின்பே என் இனத்தவரும் எழுந்து தம் பணிகளைச் செய்ய முயல்கின்றனர்" என்று மறுத்துப் பேசியது சேவல்.

வாத்தோ "நண்பா நீ ஒரு நாள் கூவாமல் இருந்து தான் பாரேன். கதிரவன் உன் குரல் கேட்கவில்லை என்று உதிக்காமல் இருந்து விடுகிறானா? என்று பார்ப்போம்" என்றது வாத்து. "ஏ... வாத்தே நான் அப்படிச் செய்யவே கூடாது. நான் கூவா விடில் உலகுக்கு விடியல் இல்லை. உலகை இருள் தொடர்ந்து மூடியிருக்கும். இரவு இன்னும் கழியவில்லை என நினைத்து ஜீவராசிகள் எல்லாம் உறக்கத்திலேயே இருக்கும். இத்தகைய ஓர் அசாதாரண நிலைமையை ஏற்படுத்த நான் ஒருபோதும் விரும்பமாட்டேன்" என்றது சேவல். "பிறிதொரு சேவல் கூவினால் கூடப் பொழுது புலராதா?" என்றது வாத்து. "அந்தச் சேவலும் என் சத்தம் கேட்ட பின்புதானே கூவும். நான்தான் கூவமாட்டேனே! பின்னர் எப்படி அது எப்படிக் கூவும். கூவினாலும் எப்படி பொழுது புலரும்?" என்றது செருக்குடன் சேவல்.

"சரி நீ இவ்வளவும் பேசுகிறாயே. உன் குரலை ஒரு தரம் அதிகாலையில் ஒலித்துக் காட்டு. அப்போதாவது சூரியன் உதிக்கிறானா என்று பார்ப்போம்" என்றது சேவல் ஏளனமாக. "என்ன நான் கத்துவதா?" என்று சிரித்தபடி நான் கத்தினாலும் கத்தாவிடினும் கதிரவன் தன் பணியைச் செய்துதான் தீருவான்" என்றது வாத்து.

"ஓ... அப்படியா?" என்றது சேவல் கேலியாக. வாத்து மிகவும் விசனப்பட்டது. "சரி இந்தச் சேவலுக்குப் பாடம் புகட்ட ஒரு சந்தர்ப்பம் வரும்தானே" என்று அதற்காக வாத்து காத்திருந்தது.

ஒரு நாள் சேவலுக்குத் திடீரென சுகவீனம் ஏற்பட்டுவிட்டது. இரண்டு மூன்று நாள்கள் நோய் தொடர்ந்தது. சேவலால் நோயின் மூன்றாம் நாள் முற்றாகக் கூவ முடியாமல் போயிற்று. தன்னால் அன்று கூவ முடியவில்லையே மனிதரெல்லாம் எழுந்திராமல் தூக்கத்திலேயே இருக்கப் போகிறார்களே. உலகமே தன் செயலிழக்கப் போகிறதே என மிக வருந்தியது. உடல் நோயும் ஒருபுறம் வாட்டியது. இப்போது சூரியன் கிழக்கே மெல்ல மெல்ல எழுந்து பூமிக்கு ஒளி பாய்ச்சிக் கொண்டிருந்தான். அப்போது சேவலுக்கு மிக அருகாகப் படுத்திருந்த வாத்து மெதுவாகச் சேவலை எழுப்பியது.

"சேவல் நண்பனே நீங்கள் இன்று கூவவில்லையல்லவா?"

"ஆமாம் கூவவில்லை" "ஆனாலும் அதோ பாருங்கள் சூரியன் கிழக்குத் திசையில் உதித்து வருகிறான் பாருங்கள்" என்றபடி கிழக்கைக் காட்டி மெல்லச் சிரித்தது. சேவல் நிமிர்ந்து பார்த்து "ஓ... ஓ.. சூரியன் உதித்துவிட்டான்" என்றது அடக்கமாக.

வாத்தோ "சேவலே நீ எவ்வளவு வலிமையுடையவனாக இருப்பினும் அடக்கமாக உனது இயல்பான தன்மையில் மாறுபடாது இந்தால் அதுவே உனக்குப் பெருமை தரும். ஆகவே அகந்தை என்ற ஆணவப் போக்கைக் கைவிட்டு அடக்கம் என்ற பண்புடன் வாழக் கற்றுக் கொள்" என்று அறிவுரை வழங்கியது. சேவல் வெட்கமடைந்து தலை குனிந்தது.



INTERPOL

# 'இன்டர் போல்' என்பது என்ன?

பன்னாட்டுக் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்காக உருவாக்கப்பட்ட பொலிஸ் அமைப்பே 'இன்டர் போல்'.

இதன் தலைமையகம் பிரான்ஸிலுள்ள பரிஸ் நகரில் இருக்கிறது. பன்னாட்டு கடத்தல், பன்னாட்டு ஆயுததாரிகள், நாடு விட்டு நாடு தாவித் தலை மறைவாகிவிடும் குற்றவாளிகள் ஆகியோரைக் கண்டு பிடிப்பது இதன் வேலை.

இந்த அமைப்பு 1923ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. நூறு நாடுகளுக்கு மேற்பட்ட பொலிஸ் அமைப்புக்கள் இந்த அமைப்பில் பங்கேற்று ஒத்துழைக்கின்றன.

# தாய்க்குத் தாயாகும் வரம் எனக்கு வேண்டும்

மழையில் நனையாதே
சளியோடு நோய் பிடிக்கும்
தான் முழுமையாய் நனைந்தும் தன்
முந்தானையால் என்
தலைதுடைத்த தாயிடம்
உனக்குப் பிடிக்காதா
இந்தச் சளியும் நோயும்
என்று கேட்கும் மனநிலை
அன்றெனக்கு இருக்கவில்லை

வலி துன்பம் எனக்கு வரவும்
விழி நீர் சிந்தி நான் அழவும்
விடியும் வரை விழித்திருந்து
தலைதடவி
மருந்துண்டு நானுறங்க
நீயுறங்காது விழித்திருப்பாய்
உனதன்பை இன்றெனக்கு
யார் தருவார்?
உன்னிலையில் நானிருந்து
உணர்கின்ற
உண்மைகளை உலகில் நீ
உள்ளபோதே
உனக்குத் தாயாகி
கடமை தீர்க்க ஏங்குகிறேன்.




# செவிலித்தாய் (வளர்ப்புத் தாய்)

அமெரிக்காவில் மான் ஒன்று ஒரே நேரத்தில் மூன்று குட்டிகளை ஈன்றது. இவற்றில் ஒரு குட்டி வளர்ச்சி குறைந்து குட்டையாக இருந்தது. அந்தக் குட்டியை ஐயோவா மாநிலத்தைச் சேர்ந்த கேல் பிரடகெக் என்பவர் தன்னுடைய வீட்டுக்கு எடுத்துச் சென்று வளர்க்கிறார். 'கெல்சி' என்று பெயரிட்ட அந்த மான் குட்டிக்கு அவர் வளர்க்கும் நாய் பால் கொடுத்து தனது குட்டியைப் போல பாசம் காட்டி பராமரிக்கிறது, கொஞ்சி விளையாடுகிறது.

இந்தியாவில் நாமக்கல் மீன்னாம் பள்ளியைச் சேர்ந்த கிங்கிளி கோவிந்தராஜ் ஆடு மாடுகளை வளர்த்து வருகிறார். அவரின் ஆடு ஒன்று மூன்று குட்டிகளை ஈன்றது. தாய் ஆட்டுக்கு என்ன கோபமோ இரண்டு குட்டிகளுக்கு மட்டும் பால் ஊட்டும். மூன்றா வது குட்டியைப் புறக்கணித்து விடும். வீட்டுக்காரர் வேறு வழியின்றி அந்தக் குட்டிக்குப் புட்டிப்பால் கொடுக்க ஆரம்பித்தார். அதேநேரம் அவர் வளர்த்த பசு ஒன்று கன்று ஈன்றது. இதையடுத்து அந்தப் பசு மாட்டிடம் தாயால் புறக்கணிக்கப்பட்ட அந்த மிருங்களிடத்தில் இப்படியாகச் செவிலித்தாய் பாசப் பிணைப்பு அதிகமாகத்தானிருக்கிறது. ஆட்டுக்குட்டி பால் குடிக்க முயன்றது. முதலில் அதற்கு மறுத்த பசு மாடு, பால் வடியும் முகம் கொண்ட ஆட்டுக்குட்டியைப் பார்த்ததும் மனம் இரங்கிப் போனது. கன்றுக்குட்டி பால் குடிக்கும்போது ஆட்டுக் குட்டியும் பசுவின் மடியில் பால் குடிக்கத் தொடங்கியது. ஆட்டுக்குட்டி பசுவால் தத்தெடுக்கப்பட்ட பிள்ளையானது.



# தேசிய கல்வி நிறுவகத்தின் வணிகக் கல்விப் பாடத்தின் தமிழ்மொழி மூலமான புதிய ஆசிரியர் வழிகாட்டி நூலில் காணப்படும் குழப்பங்கள், தவறுகள் மற்றும் பாதிப்புக்கள்

வடிவேல்முருகன் தர்மதாசன்

2017ஆம் ஆண்டில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய பாடத்திட்டத்தின் பிரகாரம் 2019ஆம் ஆண்டில் இருந்து நடைபெறவிருக்கும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான வணிகப் பிரிவில் வணிகக் கல்விப் பாடத்துக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களும் அவர்களுக்கு வணிகக் கல்விப் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களும் தேசிய கல்வி நிறுவகத்தால் வெளியிடப்பட்டுள்ள தமிழ்மொழி மூலமான வணிகக் கல்விக்கான புதிய ஆசிரியர் வழிகாட்டிக் கைநூலால் பல்வேறு குழப்பங்க ளுக்கும் பாதிப்புக்களுக்கும் உள்ளாகின்றனர். இந்த வகையில் அவர்கள்எதிர்நோக்கும்பல்வேறுபிரச்சினைகளைஎடுத்துக் கூறுவதும் இந்தக் கைநூலில் காணப்படும் வழமைக்கு மாறான. கருத்துப் பிழையான மற்றும் ஆங்கில மொழி மூலமான தவறுகளையும் பிழையான கலைச் சொற்களை (GlossaryTerms) அதற்குரியசரியானகலைச்சொற்களுடன் எடுத்துக் காட்டுவது காலத்தின் கட்டாயமானதாகவுள்ளது.

### இலங்கையின் பாடசாலைக் கல்வி முறைமையும் அக்கறையுடைய தரப்பினரும்

இலங்கையின் பாடசாலைக் கல்வி முறைமையானது முதலாம்வகுப்பில்இருந்துபதின்மூன்றாம்வகுப்புவரைக்குமான ஒரு கட்டாயக் கல்வி முறைமையாகும். அத்துடன் இது ஓர் இலவசக் கல்வி முறைமையுமாகும். அந்த வகையில் இலங்கையின்பாடசாலைக்கல்விமுறைமையின்அக்கறையுடைய தரப்பினராக (Stakeholders) அரசு மற்றும் அது சார்ந்த அமைப்புக்கள், பெற்றோர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள்மற்றும்சமூகஅமைப்புக்கள்எனப்பல்வேறுதரப்பினரையும்சுட்டிக்காட்டலாம். இதற்கமைவாகமாணவர்களுக்குச் சேவையாற்றுவதற்கானஆசிரியநியமனங்கள், கல்வியாளர்களின் நியமனங்கள், பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் நியமனங்கள், ஏனைய கல்விசாரா உத்தியோகத்தர்களின் நியமனங்கள்போன்றனவும்பாடசாலைமற்றும்அலுவலகக் கட்டடநிர்மாணங்கள், மாணவர்களுக்குத்தேவையானநூல்கள் மற்றும் சீருடைகள் போன்றனவும் அரசால் அதற்குப் பொறுப்பான அரச அமைப்புக்கள் மூலம் வருடா வருடம் வழங்கப்படுகின்றன.

இவற்றை இலவசமாகவழங்குவதன்மூலம்சகலமாணவர்களும்சமமாகமதிக்கப்படுவதுடன்வழங்கப்படும்நூல்களைத் துணையாகக் கொண்டு எதிர்கால மாணவ சந்ததியானது தமது அறிவுப் பசியைத் தீர்த்துக் கொள்வதுடன் நாட்டின் சிறந்தபுத்திஜீவிகளாகவும், தொழில்சார்வல்லுநர்களாகவும், நாட்டுக்குநல்லவற்றைச்செய்யக்கூடியநற்பிரஜைகளாகவும் உருவாக வேண்டுமென்பதே அரசின் எதிர்பார்ப்பாகும். பாடசாலைக் கல்வி முறைமையை எடுத்து நோக்கின் அதற்குப் பொறுப்பான அரச அமைப்புக்கள் என்ற வகையில் இலங்கைப்பரீட்சைத்திணைக்களம், தேசியகல்விநிறுவகம்மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் ஆகிய மூன்று அரச அமைப்புக்களும் காணப்படுகின்றன.

### இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

இலங்கையின் பாடசாலைக் கல்வி முறைமையில் முதலாம் வகுப்புமுதல்கல்விப்பொதுத்தராதரஉயர்தரம்வரைபாடசாலைகளில் காணப்படும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு ஏற்ப அவற்றை மதிப்பீடு செய்யும் நடைமுறைகள் இரண்டு விதமாக மேற்கொள்ளப்படுகின்றன.

அவையாவன: பாடசாலைமட்டத்தில் (மாவட்டமட்டம்மற்றும் ம்ாகாண மட்டம் உட்பட) மேற்கொள்ளப்படும் மதிப்பீடுகள் மற்றும் தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்படும் மதிப்பீடுகள் என்பவையாகும். இங்கு பாடசாலை மட்டத்தில் மேற்கொள்ளப்படும்மதிப்பீடுகள்என்பது முதலாம் வகுப்பு முதல்கல்விப் பொதுத்தராதரஉயர்தரம்வரையானசகல்வகுப்புக்களுக்கும் தவணை அடிப்படையில் (வருடாந்தம் மூன்று தவணைகள்) பரீட்சைகள்நடாத்தப்பட்டுமாணவர்களின்கற்றல்பெறுபேறுகள் அந்தந்தப் பாடசாலைகளின் ஆசிரியர்களால் மதிப்பீடு செய்யப்படுவதாகும். எனினும், ஐந்தாம் ஆண்டில் புலமைப் பரிசில் பரீட்சையானது மாணவர்கள் புலமைப் பரிசில் பணத் தொகையைப்பெறுவதற்கான அல்லது விருப்பமான பாடசாலைகளில் அனுமதியைப் பெறுவதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்காகவும், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையானது மாணவர்களுக்குக் கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தில் கற்பதற்கான வாய்ப்பை வழங்குவதற்காகவும்மற்றும்கல்விப்பொதுத்தராதரஉயர்தரப்பரீட்சையானது மாணவர்களுக்குப் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை வழங்குவதற்காகவும் தேசிய மட்டத்தில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் வருடந்தோறும்நடாத்தப்பட்டுவருகின்றன. அத்துடன், அவற்றுக்கானமதிப்பீடுகள்மற்றும்விடைத்தாள்திருத்தும்பணிகள் இலங்கைப் பல்கலைக்கழகங்களின் கல்விசார் புலமை யாளர்கள் (Intellectuals) மற்றும் தகுதியான ஆசிரியர்களைக் குழுக்களாகக் (Panel or Board) கொண்டு மகாநாட்டு ரீதியில் புள்ளிகள்வழங்கப்படும் (Conference Marking) நடைமுறைகள் காணப்படுகின்றன. இலங்கைப் பரீட்சைத் திணைக்களமானது இந்த அளப்பரிய பணியை மிகவும் சிறந்த முறையில், மிகவும்நேர்த்தியாகக்கடந்தபலதசாப்தங்களாகச்செவ்வனே நிறைவேற்றி வருகின்றது.

அதிலும்குறிப்பாகப்பலதசாப்தங்களாகப்பரீட்சைத்திணைக்களத்தின்பணிகளில்அனுபவங்களைக்கொண்டவரானதிரு. பீ. சனத் பூஜித பரீட்சை ஆணையாளர் நாயகமாகப் பதவியைப்பொறுப்பேற்றதன்பின்னர்புதியபரீட்சைநுட்பங்களைப் புகுத்துவதன் மூலம் (உதாரணமாக: 2018 ஆம் ஆண்டிலிருந்து கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான வினாத்தாளில் மேலதிக வாசிப்பு நேரம் ஒதுக்கப்பட்டதைக் குறிப்பிடலாம்.) மேலே குறிப்பிடப்பட்ட தேசியப் பரீட்சைகள் தொடர்பானநடவடிக்கைகளையும்மதிப்பீடுகளையும்மிகவும் பயனுறுதி வாய்ந்த வகையில் நிறைவேற்றி வருகின்றார்.

### தேசிய கல்வி நிறுவகமும் கல்வி வெளியீட்டுத் திணைக்களமும்:

தேசிய கல்வி நிறுவகச் சட்டம், 1985ஆம் ஆண்டின் இலங்கைப் பொதுக் கல்விக்கான புதிய கல்விச் சட்ட முன் மொழிவுகள் மற்றும் 2009ஆம் ஆண்டின் தேசியக் கல்வி ஆணைக் குழு அறிக்கை - 2016 என்பவற்றுக்கிணங்க இலங்கையின் கல்விமுறைமையில்பாடசாலைகளில்காணப்படும்முதலாம் வகுப்புத் தொடக்கம் பதின்மூன்றாம் வகுப்பு வரைக்குமான அனைத்துப் பாடங்களுக்குமான கலைத் திட்டங்களைக் காலத்துக்குக் காலம் அபிவிருத்தி செய்தல், ஆசிரியர்களது கற்பித்தலுக்கான வாண்மைத்திறனைக் (Teaching professional) காலத்துக்குக் காலம் இற்றைப்படுத்துதல் (update), ஏனைய கல்விசார் முகாமைத்துவ உத்தியோகத்தர்களைக் காலத்துக்கேற்ப விருத்தி செய்தல் மற்றும் கல்வி தொடர்பான ஆய்வு மற்றும் அபிவிருத்தி (Research &amp



Development) நடவடிக்கைகளைமேற்கொள்ளவேண்டியது தேசியகல்விநிறுவகத்தின்பொறுப்புக்களும்அதிகாரங்களும் ஆகும். அந்த வகையில் இலங்கைப் பொதுக் கல்விக்கான புதிய கல்விச் சட்ட முன்மொழிவுகள் 2009ஆம் ஆண்டுக்கு அமைவாகத் தேசிய கல்வி நிறுவகத்தால் உருவாக்கப்படும் கலைத் திட்டங்க ளின்படி ஒவ்வொரு பாடங்கள் தொடர்பிலும் தயாரிக்கப்படும் ஆசிரியர் வழிகாட்டிக் கைநூல்களும் பாடத் திட்டங்களும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் அச்சிடப்பட்டுப் பாடசாலைகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. அத்துடன், பாடசாலை மாணவர்களுக்கான பாடநூல்களும் தேசிய கல்வி நிறுவகத்தின் கலைத் திட்டங்களுக்கு அமைவாகக் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைந்து தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டுப் பாடசாலைகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. இங்கு குறிப்பிடப்படும் பாடங்கள் தொடர்பிலான ஆசிரியர் வழிகாட்டிக் கைநூல்களும் மாணவர்களுக்கான பாடநூல்களும் வகுப்பறைகளில் கற்பித்தல் மற்றும் கற்றல் தொடர்பில் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் பயன்படுத்தப்படும் முதன்மைத்துணைச்சாதனங்களாகப்பயன்படுத்தப்படுகின்றன. எனவே, வகுப்பறைக் கற்பித்தல் கற்றல் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும்வசதியளிக்கும் (Facilitate) முக்கியமானதொரு சாதனமாக இந்தப் பாடநூல்களும் ஆசிரியர் வழிகாட்டிக் கைநூல்களும் நோக்கப்படுகின்றன. அதிலும் குறிப்பாகப் பெரும்பாலும்சகலஆசிரியர்களும்இந்தஆசிரியர்வழிகாட்டிக் கைநூல்களை மையமாகக் கொண்டே தமது கற்பித்தல் செயற்பாடுகளைத் திட்ட மிடுவ துடன் அதைத் தமது வேதநூலாகவும் கருதுகின்றார்கள். எனவே, இந்தப் பாடநூல்களும் ஆசிரியர் வழிகாட்டிக் கைநூல்களும் எதுவித தவறுகளுமின்றித்தரமானவையாகவும், பூரணத்துவமானவையாகவும்வெளியிடுவதற்குத் தேசிய கல்வி நிறுவகமானது சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் பொறுப்பிலிருந்து சிறிதளவேனும் விலக முடியாது.

**ஆசிரியர்கள், மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிய ஒரு பார்வை**

### ஆசிரியர் வழிகாட்டிக் கைநூல்கள்

இலங்கைக்கல்வித்திட்டத்தின்படிசகலஆசிரியர்களும் தேசிய கல்வி நிறுவகத்தால் தயாரிக்கப்படும் ஆசிரியர் வழிகாட்டிக் கைநூலை மையமாகக் கொண்டே தமது கற்பித்தல் செயற்பாடுகளைத் திட்டமிட வேண்டியவர்களாகஉள்ளனர். கடந்தகாலஅனுபவங்களின்பிரகாரம்இந்த ஆசிரியர் வழிகாட்டிக் கைநூல்களானவை முதலில் சிங்கள மொழி மூலமே தயாரிக்கப்படுகின்றன என்பதை இங்கு கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். சிங்கள மொழி மூலமான பல்கலைக்கழகப் புலமைசார் வள்வாளர் குழு ஒன்றால் மிகவும் சிறந்த முறையில் தயாரிக்கப்படும் இந்த ஆசிரியர் வழிகாட்டிக் கைநூல்களானவை அதன் பின்னரே சிங்களம் மற்றும்தமிழ்தெரிந்தமொழிபெயர்ப்பாளர்களைப்பயன்படுத்திச் சிங்கள மொழியில் இருந்து தமிழுக்கு மொழிபெயர்ப்புச் செய்யப்படுகின்றன. இங்கு தான் தமிழ் மொழி மூலமான ஆசிரியர்வழிகாட்டிக்கைநூல்களில்பிரச்சினைகள்உருவாகின்றன. அதாவது சிங்கள மொழி மூலமான ஆசிரியர் வழிகாட்டிக் கைநூல்களைத் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்வதற்காகத் தேசிய கல்வி நிறுவகத்தால் நியமிக்கப்படும் மொழிபெயர்ப்பாளர்கள் (இவ்வாறு நியமிக்கப்படுபவர்கள் சிலவேளைகளில் குறித்த பாடம் தொடர்பிலான பரீட்சயம் உடையவர்களாகவோ, இல்லாதவர்களாகவோகூடக்காணப்படலாம்) சிங்களத்தில் இருந்து தமிழுக்குமொழிபெயர்ப்புச்செய்யும்பணியைத்தமது மொழித்திறனுக்கு ஏற்ற வகையில் நிறைவேற்று கின்றார்கள்.

இதற்காக அவர்களது பணியைப் பாராட்டுதல் வேண்டும். அதே சந்தர்ப்பத்தில் அவர்கள் மொழிபெயர்ப்பைச் செய்யும்போது குறித்த பாடம் சம்பந்தப்பட்ட வகையில் கையாளும் சில சொற் பிரயோகங்கள் மற்றும்கலைச்சொற்கள்போன்றவைசிலவேளைகளில் தவறாகவும்கருத்துப்பிழையாகவும்மொழிபெயர்ப்புச் செய்யப்படுவதையும் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. இவ்வாறுபிழையானமொழிபெயர்ப்புக்கள்செய்யப்படும்போது அந்த மொழிபெயர்ப்புக்கள் சரியானவை தானா என உறுதி செய்ய வேண்டியது தேசிய கல்வி நிறுவகத்தின் தமிழ்மொழி மூலமான அதிகாரிகளது கடமையும் பொறுப்புமாகும். தேசிய கல்வி நிறுவகத்தின் ஆசிரியர் வழிகாட்டிக் கைநூல்களைத் தயாரிப்பது தொடர்பில் பல்கலைக்கழக விரிவுரை யாளர்களைக் கொண்ட சிங்கள மொழி மூலமான குழாமொன்றேஅந்தமொழியில்சரியானசொற்பிரயோகங்களையும் கலைச் சொற்களையும் உட்படுத்துவது போன்றதான செயற்பாடுதமிழ்மொழிமூலமானமொழிபெயர்ப்புக்களின்போது தற்போது இல்லை என்பதே யதார்த்தமாகும்.

அத்துடன், விசேடமாகத் தேசிய கல்வி நிறுவகத்தில் சிங்கள மொழிமூலமான ஆசிரியர்வழிகாட்டிக்கைநூல்தொடர்பான பணிகளில் ஈடுபடும் அதே குழுவினரே பரீட்சைத் திணைக்களத்தின்பணிகளிலும்ஈடுபடுவதால்சிங்களமொழிமூலமான ஆசிரியர் வழிகாட்டி நூல்களிலோ அல்லது சிங்கள மொழி மூலமானதேசியப்பரீட்சைகளின்வினாத்தாள்களிலோ அல்லது மாதிரி வினாத்தாள்களிலோ (Prototype Question papers) கலைச்சொற்கள்சம்பந்தமானகோளாறுகள்பெருமளவில் இல்லையென்றே கூறலாம்.

**கட்டுரையாளர்**
**முதுநிலை விரிவுரையாளர், துறைத் தலைவர்**
**முகாமைத்துவக் கற்கைகள் துறை**
**முகாமைத்துவ பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்**

(தொடரும்)

PEOPLE'S BANK

## தங்கநகை ஏலவிற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் **31.10.2017** வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் **08.12.2018 (சனிக்கிழமை), 09.12.2018 (ஞாயிற்றுக்கிழமை)** ஆகிய திகதிகளில் **காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில்** வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் | நகை மீளெடுப்பதற்கான இறுதித் திகதி | ஏல விற்பனை நடைபெறும் இடமும் திகதியும் |
|---|---|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதி | கொக்குவில் (நாவலர் வீதி) | | |
| | மானிப்பாய் | | |
| தெல்லிப்பளை | மல்லாகம் | | |
| | காங்கேசன்துறை | | |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் | | |
| ஊர்காவற்றுறை | - | | 08.12.2018 (சனிக்கிழமை) |
| நெல்லியடி | - | | |
| அச்சுவேலி | புத்தூர் | | |
| சங்கானை | பண்டத்தரிப்பு | 07.12.2018 | 09.12.2018 (ஞாயிற்றுக்கிழமை) |
| சுன்னாகம் | கோப்பாய் | | |
| | அளவெட்டி | | |
| சாவகச்சேரி | கைதடி | | யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி | | |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி | | |
| | கல்வியங்காடு | | |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் | | |
| பருத்தித்துறை | புலோலி | | |
| கொடிகாமம் | - | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமையகம்,**
**கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

**தொ.பே.இல :- 021 222 2601 / 021 222 8602**
**தொலை நகல் :- 021 222 2602**
**ஈமெயில் :- jafrho@peoplesbank.lk**

(C/8268)(11,17)

---

## நீங்காத நினைவுகளுடன்

33 ஆம் ஆண்டு — 2 ஆம் ஆண்டு





மண்ணில் 16.12.1921
விண்ணில் 03.09.1985

மண்ணில் 15.07.1931
விண்ணில் 10.12.2016

நெடுந்தீவு மேற்கு

அமரர் **முருகப்பர் கந்தையா** — அமரர் **காமாட்சி கந்தையா**

திதி:- கார்த்திகை திங்கள் (வளர்பிறை) துவாதசி (19.11.2018)

அன்பால் அரவணைத்து, பாசத்துடன் வழிநடத்தி
நிழலாய் பாதுகாத்தீர் அன்னையே அன்புத் தந்தையே
உங்கள் வழித்தடம் பற்றி என்றும் வாழ்வோம்

என்றும் உங்கள்
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

இல.10, வெள்ளவாய்க்கால் வீதி,
உயரப்புலம், ஆனைக்கோட்டை

---

## 30 ஆவது பிறந்த தினமும் 88 ஆம் நாள் நினைவஞ்சலியும்

அமரர்
**கனகலிங்கம் கார்த்திகா**



மலர்வு **19.11.1988** — உதிர்வு **23.08.2018**

கார்த்திகைப் பூவாய்
கனகமணி முத்தாய்
காரிருள் நீக்கும்
கார்த்திகைத் தீபமாக
காலம் முழுவதும் எமது வாழ்வில்
நீயும் ஒரு சுடராக
ஒளிர்வாய் எம் இதயத்தில்

மீண்டும் மீண்டும்
கார்த்திகை வரும் எனில்
கார்த்திகாவும் வருவாள்
எம் நினைவுகளின் பிரகாசமாய்...

வீசும் காற்றில்
மழை நீர் மண்ணின் வாசனையாய்
வானில் மிளிரும் நட்சத்திரங்களாய்
நிலவின் குளிர்மையாய் இரவின்
அமைதியாய்
என்றும் உறவுகளின் உணர்வுகளாய்...
நீ வாழ்கிறாய்...

மண்ணுலகில்
அகவை முப்பதில்
அன்பான இதயங்கள்
வாழ்த்தும் உன்னை...
மௌன கீதமாய்....

**நீங்கா நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்.**
**மட்டுவில் தெற்கு,**
**சாவகச்சேரி.**


(ACH/509)(11,17)

---

கலாநிதி அருட்கவி

## சீ.விநாசித்தம்பிப்புலவரது MA,PHD

## 13 ஆவது குருபூசைத்தினம்



*திதி: கார்த்திகை : ரேவதி - ஏகாதசி*

ஈழமணித் திருநாட்டில் இணையற்ற புலவராய்
ஞாலத்தில் அருள்கொண்ட நடமாடிய தெய்வமே
கார்சூழ்ந்த மாதத்தில் காசிலிங்க சோதியாய்
கலந்து சாந்தி பெற்ற அருட்கவிப்புலவரே
**ஓம் காசிலிங்கேஸ்வராய நமஹ**

இன்று கார்த்திகை மூன்றாம் நாள் (19.11.2018) திங்கட்கிழமை அருட்கவி சீ.விநாசித்தம்பிப்புலவரது குருபூசைத்தினமானது அன்னாரது சமாதியில் மு.ப.11.00 மணியளவில் இடம்பெறும். அன்பர்கள் அனைவரும் இப் பூஜை நிகழ்வில் கலந்து தொடர்ந்து அன்னசுரபி மண்டபத்தில் இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

(cs.21291)


நாகேஸ்வரம்,
அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

**குடும்பத்தினர்.**

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**இரத்தினம் தில்லைநாதன்**
(வெற்றிலை வியாபாரி - சாவகச்சேரி)
திதி:- 08.12.2018



அன்னை மடியில்
05.03.1967

அம்மன் அடியில்
19.11.2017

எம்மைவிட்டுப் பிரிந்து ஓராண்டு ஆனதோ....
மாறுமோ உங்கள் நினைவலைகள்
ஓயுமோ உங்கள் அன்பலைகள்
நித்தமும் நினைப்போம் உம்மை
எங்கள் இதயத்தில் இருத்தி தொழுவோம் என்றும்
எம்மைவிட்டுப் பிரிந்து அம்மனடி சேர்ந்தீரோ...

சித்தன்மாவடி பிள்ளையார் கோயில் வீதி,
கல்வயல், சாவகச்சேரி.

**என்றும் உங்கள் நினைவுடன்**
**குடும்பத்தினர்.**

(C/8396)(11,17)

**வேலையாள்கள் தேவை**

கம்பிவேலை, சட்டறிங் வேலை தெரிந்தவர்கள். சமையல் வேலை - பெண்கள் (வயது 20 - 40)

- 077 355 1631, 077 354 9625

**ES Printers**

2019 இற்கான அனைத்து வகையான கலண்டர்களையும் குறைந்த விலையில் செய்து பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

மு /கலைமகள் வித்தியாலய பாடசாலை
மாணவனும் இராசமோகன் - பஞ்சகௌரி
தம்பதியரின் அன்புப் புதல்வருமான

Congratulations **இ.ரிஷோபன்** Congratulations



2018 ஆம் ஆண்டு தரம் - 5
புலமைப்பரிசில் பரீட்சையில்
189 புள்ளிகளை பெற்று
மாவட்ட நிலையில் 9 ஆம்
நிலையைபெற்று
சித்தியடைந்தமையிட்டு அவரை
மானமார பாராட்டி
வாழ்த்துகிறோம் மேலும் இவரை
ஊக்கமுடன் கல்வி புகட்டி
சித்தியடைய உதவிய
அதிபர், ஆசிரியர்கள்
அனைவருக்கும்
எமது பாராட்டுகளும்,
நன்றிகளும்.

வாழ்த்துவோர்:
அப்பப்பா, அப்பம்மா.

(IN60777)(13,17)

## பத்தாம் ஆண்டு நினைவு

## மகேந்திரம் கௌரி

அன்னைமடியில்
02.08.1989

ஆண்டவன் அடியில்
19.11.2008



இன்று நீ பிரிந்து
ஈரைந்தாண்டுகள் ஆனதம்மா
அன்புகொண்ட உன்வதனம்! உன் சிரிப்பு
உன் கதை எல்லாம்
அருகினில் இருப்பது போல் உணர்கின்றோம்
அன்பால் என்றும்!
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
நீங்காது உன் நினைவுகள் அம்மா!!
எம் நெஞ்சோடு

(AJAI 13738 13,17)

விடிவெள்ளி வீதி,
வேம்படி உடுத்துறை வடக்கு,
ஆழியவளை.
077 257 1495

குடும்பத்தினர்
தாய், தந்தை, சகோதரிகள்,
மைத்துனர், பெறாமகன்,
பெறாமகள்.

## நெஞ்சம் நெகிழ்ந்த நினைவஞ்சலிகள்

15 ஆம் ஆண்டு



தாயின் மடியில் 09.10.1971
தரனின்தாளில் 04.12.2003

**அமரர் தம்பிராஜா சுதர்சன் (சுதா)**

(முன்னாள் ஆசிரியர் - யா/புங்குடுதீவு மகாவித்தியாலயம்)

திதி: ஏகாதசி (19.11.2018)

9 ஆம் ஆண்டு



தாயின்மடியில் 15.02.1975
தரனின் தாளில் 12.11.2009

**அமரர் தம்பிராஜா சயந்தன்**

(முன்னாள் உத்தியோகத்தர் - வீதி அபிவிருத்தி அதிகாரசபை)

திதி: ஏகாதசி (03.11.2018)

பெற்றவர்க்கு நன் மக்களாய் உடன் பிறந்தவர்க்கு உயர்வான சகோதரராய்
வையகத்தில் வாழ வழிகாட்டிய உங்களை உயிர் உள்ளவரை வாழ்வில் ஒரு நாளும் மறவோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

முதலாம் வட்டாரம்,
நெடுந்தீவு.

உங்கள் பிரிவால் நித்தம் துயருறும்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி புஸ்பவதியம்மா சாந்தலிங்கம்



சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பவதியம்மா சாந்தலிங்கம் கடந்த (17.11.2018) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி - சின்னம்மா தம்பதிகளின் ஏக புத்திரியும் காலஞ்சென்ற சாந்தலிங்கத்தின் அன்பு மனைவியும் ஜெகதீஸ்வரி (ஆசிரியை - யா/ ஏழாலை சைவமகாஜனா வித்தியாலயம்), செல்வகுமார் (உதவி விவசாய பணிப்பாளர் - விதை அத்தாட்சிப் படுத்தல், பரந்தன்), செந்தில்குமார் (நியூசிலாந்து) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சற்குணநாதன், செந்தில்வாணி, துலாஞ்சலி ஆகியோரின் அன்பு மாமியாரும் மாதுளன், கர்னிகா, ஆதீஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2018) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாதேவி தியாகரராசா



பிறப்பு 03.07.1943 | இறப்பு 16.11.2018

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கமலாதேவி தியாகராசா கடந்த (16.11.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தெட்சணாமூர்த்தி - விசாலாட்சி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற சதாசிவம் தியாகராஜாவின் அன்புத் துணைவியும், காலஞ்சென்றவர்களான உருத்திரமூர்த்தி, சாரதாதேவி மற்றும் மனோகரமூர்த்தி, தமயந்திதேவி ஆகியோரின் சகோதரியும், சந்துளா, இராஜசுபேசன், பிறேமளா, இராஜ்குமார் ஆகியோரின் அன்புத்தாயும் சுந்தரமூர்த்தி, மாலினி, இராகவன், அனுஜா ஆகியோரின் அன்புமாமியும் சுதர்சன், கோபிக்கிருஷ்ணன், முகுந்தன், திலக், லக்ஷிகா, லாரா, பிரியங்கா, புருஷோத்மன், ஹர்ஷிகா, ஹம்ஷத்வனி, யுவஷங்கரி, மிதுசன், ஹரிசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2018) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொற்றியால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்ப்டும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பார் மணியம் வீதி,
தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை.

தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சத்தியபாமா இராமசாமிக்குருக்கள்



முள்ளிவாய்க்கால் முல்லைத்தீவினை பிறப்பிடமாகவும், சிவபுரம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சத்தியபாமா இராமசாமிக்குருக்கள் நேற்று (18.11.2018) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவானந்தசர்மா யோகாம்பாள் தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற வர்களான குமாரசாமிகுருக்கள் செல்லம்மா தம்பதியரின் மருமகளும் இராமசாமிக் குருக்களின் அன்புமனைவியும் கௌரிஅம்பாள், சுசீலாம்பாள், மங்களேஸ்வரி, கணேஸ்சர்மா, காலஞ்சென்ற நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரியும் செந்தமிழ் செல்வி (கொழும்பு), பஞ்சாட்சரசர்மா (வவுனியா), பிரகலாதசர்மா (கண்டி), சரவணபவானந்தசர்மா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத்தாயும் ரகுராம்குருக்கள், கேமாவதி, திரியம்பகி, கலைவாணி ஆகியோரின் மாமியும் இரத்தினசபாதிக்குருக்கள், ராஜலக்ஷ்மி, சரோஜினி தேவி, ராஜ சுலோசனா, வசந்தமலர், தனலக்ஷ்மி, ஜெகதாம்பாள் ஆகியோரின் மைத்துனியும் ராம்ஜி சர்மா, சாதுரி, கிரிஸ்ணவி, சாகித்யவதனசர்மா, கிருதயா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2018) திங்கட்கிழமை பாடசாலை வீதி, 4 ஆம் கட்டை வவுனியாவில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. ஒரு மணியளவில் நெளுக்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :இராமசாமிக்குருக்கள் பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்



### திருமதி யோகேஸ்வரி இராசையா


புத்தூர் மணற்பகுதியை பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கு சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி இராசையா நேற்று (18/11/2018) ஞாயிற்றுக்கிழமை பி.ப.12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - பவளம் தம்பதிகளின் மூத்த புதல்வியும், பொன்னு இராசையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னு - சின்னத்தங்கச்சி தம்பதிகளின் மூத்த மருமகளும் பார்த்தீபன் (பிரான்ஸ்), பவானி (ஜேர்மனி), ஜனதன் (ஆசிரியர் - யா / மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நிலாஜினி, தர்மராஜா, ஜெஸ்மின் ஆகியோரின் அன்பு மாமியாரும், இராஜேஸ்வரியின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற இராசேந்திரம், தவ மணி, பத்மநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சந்தோஷ், சகானா, கபிநயா, திஷான், அனந்திகா, தர்வின், தர்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மருதங்குளம் வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.**

**தகவல்: குடும்பத்தினர். 071 427 3035, 077 182 3896**



பிறப்பு 14 . 07 . 1955

இறப்பு 17 . 11 . 2018

### நல்லதம்பி ஏரம்பமூர்த்தி

புங்குடுதீவு 07 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் பழைய பொலிஸ் நிலையவீதி சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி ஏரம்பமூர்த்தி 17.11.2018 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - சிவக்கொழுந்து (ஆசிரியை) தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - அன்னப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மருமகனும், புஸ்பவதியின் அன்புக் கணவரும், ஜெயலெட்சுமி, காலஞ்சென்றவர்களான யோகலெட்சுமி, இராசதுரை (ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருச்செந்தீசன் (பிரான்ஸ்), நிஜேன் (சாவகச்சேரி), செந்தில்மாறன் (சாவகச்சேரி), சோபனா (லண்டன்), கோபிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், மயூரி (பிரான்ஸ்), சரிதா (செலிங்கோ லைப் - சாவகச்சேரி), சாளினி, ராஜ்குமார் (லண்டன்), திவாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சபாரெத்தினம் மற்றும் யோகாம்பிகை (கொழும்பு), தனலெட்சுமி (ஜேர்மனி), தெய்வேந்திரம் (ஜேர்மனி), சண்முகலிங்கம் (லண்டன்), திருச்செல்வம் (கொலண்ட்), கோபாலபிள்ளை, துரையப்பா, தர்மலோசினி, ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, சிதம்பரப்பிள்ளை, சுந்தரலிங்கம், வேதாரணியம்பிள்ளை, கனகாம்பிகை மற்றும் யோகாம்பிகை (அப்புத்தளை), தண்டாயுதபாணி (வட்டக்கச்சி), தர்மபாலசிங்கம் (கிளிநொச்சி), தர்மாம்பிகை (லண்டன்), அகிலேஸ்வரன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும் அஜெய், தனுஷ்கா, கஸ்வினி, திவ்வியா, அபிஷா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.11.2018) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**14/3 பழைய பொலிஸ் நிலைய வீதி, சாவகச்சேரி.**

**தகவல் குடும்பத்தினர்.**

**077 196 5026 ( மாறன் )** (in 339) (13.17)

## 12 ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 21.12.1952 இறப்பு 01.12.2006



அமரர்

### சின்னையா ஆச்சாரி சிவராஜா ஆச்சாரி (சிவா)


ஆண்டுகள் பன்னிரண்டு ஆனாலும் ஆறவில்லை எம் மனத்துயரம்
ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
உங்கள் நினைவு எம்மை விட்டு போகாது
நீங்கா நினைவுகளுடன் உங்கள் ஆத்ம சாந்திக்காய்
இறைவனிடம் இறைஞ்சுகின்றோம்.

குடும்பத்தினர்.
(பாபு - மகன் - 077 0691 797)

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு advt@uthayan.com, 021 493 1111

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 24 . 02 . 1957



மறைவு 01 . 12 . 2017

### அமரர் சிங்காரவேலு யோகநாதன்
(உரிமையாளர் Ogesta)

ஆண்டொன்று மறைந்துவிட்டது அப்பா!
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
மறையுமா உங்கள் நினைவின் பாசம்
எங்களை நிர்க்கதியாய் அநாதையாய்ப் பரிதவிக்க
விட்டுவிட்டு எங்கு சென்றீர்கள் மறக்க முடியுமா உங்கள் நினைவுகளை
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகள் தொடரும்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரர்த்திக்கின்றோம்.

**185/1, கில்னர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 021 221 6742**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி கந்தையா



நாவற்குழியைப்பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி கந்தையா கடந்த (16.11.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுதீஸ்குமார் மற்றும் தினேஸ்குமார் (பிரித்தானியா), கிருபாலினி (கனடா) ஆகி யோரின் அன்புத்தாயும் நிதர்சினி, சந்திரன் ஆகியோரின் அன்புமாமியும் கிருத்விக், கபிசன் ஆகியோரின் அன்புப்பாட்டியும் காலஞ்சென்ற பஞ்சாட்சரம் மற்றும் பரஞ்சோதி காலஞ்சென்ற பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற வர்களான முருகேசு, கனகம்மா மற்றும் இராசமணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2018) திங்கட் கிழமை நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகநாவற்குழிபிணமுருங்கைஇந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கேரதீவு வீதி, நாவற்குழி கைதடி. 076 619 3100**

**தகவல் : குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### கந்தசாமி பரராஜசேகரம்



ஒட்டறுத்தகுளம் மல்லாவியைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி வடக்கு, கிராம்புவிலை வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி பரராஜசேகரம் கடந்த (16.11.2018) வெள்ளிக்கிழமை காலமானார்

அன்னார் கந்தசாமி - தவமணி தம்பதியினரின் அன்பு மகனும் சுந்தரம் சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் அமிர்தலதாவின் அன்புக் கணவரும் கஜானி, கஜானன், கஜான் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காந்திமதி, தயாமதி, தயாபரன், பிரதீபன், இந்திரநேசன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் சிவஞானசுந்தரம், அமிர்தானந்தசிவம், முருகானந்தன், அமிர்தநாயகி, சதானந்தன் ஆகியோரின் அன்புமைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2018) திங்கட்கிழமை பி.ப.3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கிராம்புவில், சாவகச்சேரி வடக்கு.**

**தகவல் : குடும்பத்தினர்.**

### திருமதி கனகாம்பிகை பேரம்பலம்



தோற்றம் 28.05.1936 மறைவு 17.11.2018

காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியா பண்டாரிக் குளம் அம்மன் கோயில் வீதி, 54/1 ஆம் இலக்கத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகாம்பிகை பேரம்பலம் 17.11.2018 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-வள்ளியம்மைதம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் பேரம்பலத்தின் அன்பு மனைவியும், தங்கரட்ணம் (ஓய்வுநிலை சிரேஷ்ட உதவி நிதியாளர், வவுனியா வளாகம், யாழ். பல்கலைக்கழகம்), வசந்தாதேவி ஆகியோரின் பாசமிகு தாயும், சிவசோதி தங்கரட்ணம் (ஆசிரியை- வவுனியா இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயம்) அமிர்த்லிங்கம் ஆகியோரின் அன்பு மாமியும், பிரகலாதன் (மாணவன்- SLIIT, கொழும்பு), விசாகன் (மாணவன் - வவுனியா தமிழ் மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2018) திங்கட்கிழமை காலை 8.00மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வவுனியா, தெட்சணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**54/1, அம்மன் கோயில் வீதி, பண்டாரிக்குளம், வவுனியா.**

**தகவல்: குடும்பத்தினர்.** (c7956)

**024 222 1024**

### பிரச்சினைக்கு...

வதால் குழப்பம் வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீண்டும் கொண்டு வரப்பட்டு, உரிய ஒழுங்கு முறைக்கு அமைவாக நிறைவேற்றப்படவேண்டும். நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீது பெயர் கூறிய குரல் வாக்கெடுப்பு அல்லது இலத்திரனியல் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற கட்சித் தலைவர்கள் கூட்டம் இன்று காலை 11 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதன் பின்னர் சபை நடவடிக்கைகள் பி.ப. 1 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே அடிதடி, மிளகாய்த் தூள் கரைசல் வீச்சு என்று மிகமோசமான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன. பெரும் கூச்சல் குழப்பத்துக்கு மத்தியில், மகிந்தவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டு சபை நடவடிக்கைகள் கடந்த வெள்ளிக்கிழமை ஒத்திவைக்கப்பட்டன. அன்றைய தினம் சபாநாயகர் ஆசனம் மகிந்த அணியினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. பொலிஸ் பாதுகாப்புடன் சபாநாயகர் சபைக்குள் நுழைந்திருந்தார்.

இந்த நிலையில் இன்றைய அமர்விலும், இதே நிலமை தொடரக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அரச தலைவர் நேற்று நடத்திய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், நாடாளுமன்றத்தில் வன்முறைகள் இடம்பெறக் கூடாது என்று தெரிவித்திருந்தார். ஆனால் கூட்டத்தின் முடிவில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த விமல் வீரவன்ச, சபாநாயகர் நடைமுறைக்கு முரணாகச் செயற்பட்டால் நாடாளுமன்றத்தில் ஆர்ப்பாட்டம் நடத்துவோம் என்று பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

இதனால் இன்றைய நாடாளுமன்ற அமர்வும் களேபரமாக அமையும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. (ற-5)


ராசி அதிர்ஷ்டம்

திகதி 18.11.2018 | வெற்றி வாரம் 2402 | வர்ணம் ஊதா

மகரம் வெற்றி இலக்கங்கள் 23 30 35 44

செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3, 572, 372/=

2018.11.20ம் திகதி செவ்வாய்க் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 883

சீட்டிழுப்பு திகதி 2018.11.17 சனிக்கிழமை

C 05 10 55 69

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,557,472/-

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

ஊதா நிற டிக்கட்டுகள் 2018.11.19ம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


## மரண அறிவித்தல்

பிறப்பு 11 . 07 . 1945



இறப்பு 17 . 11 . 2018

### சிவரட்ணம் சிவராஜீஸ்வரன்

(முன்னாள் ஒப்பந்தகாரர் – வீதி அபிவிருத்தித் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, முன்னாள் தலைவர் – லயன் கழகம், மானிப்பாய் – பீஸ்)

யாழ்ப்பாணம் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், நவாலி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட சிவரட்ணம் சிவராஜீஸ்வரன் 17.11.2018 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவரட்ணம் - ராஜலக்சுமி தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சோதிரட்ணம் - ராஜேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், தமயந்தியின் அன்புக் கணவரும், நிரோஷனின் பாசமிகு தந்தையும், ஜனனியின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற இரத்தினசிங்கம் மற்றும் சிவராஜதேவி, சிவராஜினி, காலஞ்சென்ற சிவதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், வசந்தரா, வசுமதி, சர்வானந்தன், அனுஷியா, நந்தினி, கிருபானந்தன், மஞ்சுளா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் காலை 9 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அரசடி, நவாலி வடக்கு, மானிப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர்.** (CS/21290)(11.17)

### நாடாளுமன்ற...

மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலர் மகிந்த அமர வீர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் இன்று கூடவுள்ள நிலையில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் தற்போதுள்ள அரசியல் நெருக்கடியை சபாநாயகரே உருவாக்கியுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டதால் அதற்கான பொறுப்பை சபாநாயகரே ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசமைப்பின்கீழ் தலைமை அமைச்சரை அல்லது அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம் சபாநாயகருக்கு இல்லை. இதற்கான அதிகாரங்கள் அரச தலைவரிடமே உள்ளன. சபாநாயகர் கரு ஜயசூரிய தனது அதிகார வரம்புகளை மீறிச் செயற்படுகின்றார் - என்றார். (5)

## முப்பதாம் ஆண்டு நினைவஞ்சலி | பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி | பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 20.11.1930 மறைவு 19.11.1988



அமரர்

**சின்னையா தியாகராசா**

(ஆசிரியர் - பண்ணாகம்)

மூப்பது வருமுன் எம்மைத் தவிக்கவிட்டுப் போய்
முப்பது வருடங்கள் வந்தோடிப் போய் விட்டனவே
எப்போதும் எம் நெஞ்சில் உங்கள் நினைவுகளோ
தப்பாது வந்தெம்மைத் தவிக்க வைக்கின்றனவே

தோற்றம் 05.04.1945 மறைவு 08.01.2008



**அமரர் தியாகராசா தவமணி**

பத்தாவுக்கேற்ற பதிவிரதையாக வாழ்ந்த எங்கள்
புத்தகமே நீங்கள் எமைவிட்டுப் போயிப்போ
பத்தாண்டு பார்த்திருக்கப் பறந்தோடிப்போயிற்றே
எப்போதும் உம் நினைவே எமை வாட்டி நிற்குதுவே

தோற்றம் 10.07.1960 மறைவு 13.12.2008



அமரர்

**தியாகராசா கணேசலிங்கம் (ஆசிரியர்)**

ஐங்கரனின் பேர் சுமந்த எங்கள் -
சங்கரனார் மகனே
ஐயிரண்டு ஆண்டுகள் நீர் மறைந்து போனாலும்
சின்னையா தியாகராசாவின் குடும்பமதில்
வந்தடைந்த வெற்றிடம் தான் நிறைவடைய
வழிதான் பிறப்பதெப்போ.

**குமரேசன் சுதாநிதி பண்ணாகம், சுழிபுரம்.**

**குடும்பத்தினர் 077 844 5286**

# சூரியஒளி உடலுக்கு அவசியம்

இப்போது அனைவரும் குளிர்சாதன வசதியை எதிர்பார்க்கிறார்கள். வீட்டில் தூங்கும் போது குளிர்சாதன வசதியைப் பெறுகிறார்கள். காரில் செல்லும் போதும் அலுவலகத்தில் இருக்கும் போதும் ஏ.சி.யை அனுபவிக்கிறார்கள். மேலும் உணவகங்களுக்குச்சென்றாலும்ஏ.சி.அறையைத் தேடி செல்கிறார்கள். இப்படி சொகுசு வாழ்க்கைக்கு அடிமையாகி குளிர்சாதன வசதியை நோக்கிச் செல்பவர்கள்பல்வேறு நோய்களுக்கு ஆட்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்குச் சூரியனின் ஒளிக்கதிர் அவர்கள் மேல் விழாத நிலை உள்ளது. இப்படிப்பட்டவர்களுக்குத்தான் விற்றமின் டி குறைபாடு ஏற்படுகிறது.

தாவரங்களுக்கு எவ்வாறு சூரிய ஒளிக்கதிர் தேவைப்படுகிறதோ அதே போன்றுதான் மனிதர்களுக்கும் சூரிய ஒளிக்கதிர் தேவையாகிறது. மனிதன் உயிர்வாழவும், உடல் உறுப்புகள் பலமிக்கதாக இருக்கவும் பல்வேறு சத்துக்கள் தேவைப்படுகின்றன. உணவு மூலம் பல்வேறு சத்துக்கள் கிடைத்தாலும் விற்றமின் டி சத்து என்பது சூரிய ஒளிக்கதிரில் இருந்து கிடைக்கக் கூடியது. விற்றமின் டி குறைபாடு ஏற்பட்டவர்களுக்கு உடல் உபாதைகள் ஏற்படுவது இயற்கை. சூரிய ஒளி உடலில் படவில்லை என்றால் விற்றமின் டி சத்து குறைபாடு ஏற்படும்.

இதனால் உடலில் எலும்பு, தசை சம்பந்தமான நோய்கள் தாக்கும். இன்று பலர் இந்த நோய்களால் தாக்கப்பட்டு மருத்துவமனைகளுக்கு படையெடுத்த வண்ணம் உள்ளனர். அப்போது தான் அவர்களுக்கு சூரிய ஒளி உடலுக்குத் தேவை என்பதும் அது கிடைக்காததால் இப்படி நோய் தாக்குகிறது என்பதும் தெரிகிறது. காலை வெயிலும் மாலை வெயிலும் உடலுக்கு நல்லது. மதியம் உச்சி வெயில் என்பது உடலுக்குக் கெடுதலைத் தரும். பல்வேறு நோய்களையும் ஏற்படுத்தும். சூரியஒளிபட வேண்டும்என்பதற்காக மதியம் உச்சி வெயிலில் நடமாடக் கூடாது. காலை வெயில் தான் விற்றமின் டி சத்துக் கிடைக்க ஏதுவானதாகும். எனவே விற்றமின் டி சத்து குறைபாடு உடையவர்கள் காலை வெயிலில் காலார நடந்து வர உடலுக்கு தேவையான சத்து கிடைத்து விடும். சில ஆலயங்களில் சூரிய வழிபாடு கூட நடைபெறுவது உண்டு. யோகாசனத்தில் சூரிய நமஸ்காரம் என்ற உடற்பயிற்சியும் சூரியனை மையப்படுத்தியே உருவாக்கப்பட்டு உள்ளது. இந்தச் சூரிய நமஸ்காரம் காலை நேரத்தில் சூரிய உதயத்தில் செய்யும் போது உடல் உறுப்புகள் நன்கு வேலை செய்யும்.



## காலை....

மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் பேச்சு நடத்தியுள்ளனர்.

இந்த அவசர சந்திப்புக்கள் நேற்றுக் காலையிலும், இரவும் நடந்துள்ளன.

அரச தலைவர் மைத்திரிபாலவை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுக் காலை சந்தித்த வெளிநாட்டு இராஜதந்திரிகள், நாட்டில் எழுந்துள்ள பிரச்சினைக்கு ஜனநாய ரீதியில் உடனடியாகத் தீர்வு காணவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

அரச தலைவர் மைத்திரிபால தலைமையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நேற்று மாலை நடைபெற்றது. கூட்டம் முடிவடைந்த பின்னர், ரணில் விக்கிரமசிங்கவை வெளிநாட்டு இராஜதந்திரிகள் அலரி மாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

நாடாளுமன்றம் இன்று கூடவுள்ள நிலையில் வெளிநாட்டு இராஜதந்திரிகளின் அவசர சந்திப்பு நடைபெற்றுள்ளது.

(ற-5)

## இரண்டு...

புறக்கணித்திருந்தார். மக்கள் விடுதலை முன்னணியும் கூட்டத்தைப் புறக்கணித்திருந்தது.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சிக் குழு தமக்கு நாடாளுமன்றில் 113 பெரும்பான்மைப் பலம் உள்ளது. இரு தடவைகள் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச தமையிலான அரசை நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலம் தோற்கடித்துள்ளோம். நாளை (இன்று) காலை மீண்டும் இங்கு வந்து 113 பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கத் தயாராக இருக்கின்றோம் என்று கூறியது.

மகிந்த ராஜபக்ச தலைமையிலான சுதந்திரக் கட்சிக் குழு, தமது அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டு விவாதத்துக்கு முறையாக உட்படுத்தப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டும். அவ்வாறு அல்லாது கொண்டுவரப்படும் எந்தத் தீர்மானத்தையும் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று திட்டவட்டமாகத் தெரிவித்தது.

இந்தச் சந்திப்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய தேசியக் கட்சி கூறும் கருத்துக்களைச் செவிசாய்க்கத் தயராக இருக்கவில்லை. அதனால் கூட்டம் காரசாரமாக சுமார் 2.30 மணித்தியாலம் நடைபெற்றது. இறுதியில் எந்த முடிவும் எடுக்கப்படாது முடிந்தது. (ற-10)

## நிதியுதவிகளை...

ளது என்று பன்னாட்டு நாணய நிதியம் அறிவித்துள்ளது.

பன்னாட்டு நாணய நிதியம், இலங்கையுடன் மேற்கொண்டு வரும் திட்டங்களை நிறுத்தி வைத்துள்ளது என்று நிதியத்தின் பேச்சாளர் கெரி ரைஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியான நிலைமை முடிவடைந்து விட்டது என்பது தெளிவாகும் வரை திட்டங்கள் நிறுத்தி வைக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் அதிகரித்து வரும் நிலைமைகள் கண்காணிக்கப்படுகின்றது என்று பன்னாட்டு நாணய நிதியம் தெரிவித்திருந்தது. பன்னாட்டு நாணய நிதியம் 2015ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3ஆம் திகதி இலங்கைக்கு 1.5 பில்லியன் டொலரை வழங்குவதற்காக அனுமதியை வழங்கியதுடன், அதில் தவணைக் கொடுப்பனவை வழங்க ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

முக்கியமான பொருளாதார சீர்த்திருத்தங்களைச் செய்ய வேண்டும் என நிபந்தனைகளின் அடிப்படையில், இந்த நிதியை வழங்க பன்னாட்டு நாணய நிதியம் இணங்கியிருந்தது. எரிபொருள் விலைச் சூத்திரம் மற்றும் வரி சீர்த்திருத்தங்கள் அந்த நிபந்தனைகளில் அடங்கியிருந்தன. (ற)

## முக்கிய...

விக்கிரமதுங்க படுகொலை, மாணவி வித்தியா படுகொலை வழக்கு என்பவற்றைத் துணிச்சலுடனும், துரிதமாகவும் மேற்கொண்டுவந்த குற்றப் புலனாய்வுத் திணைக்களப் பொறுப்பதிகாரியான தலைமைப் பொலிஸ் பரிசோதகர் நிசாந்த டி சில்வாவை அந்தப் பதவியில் இருந்து நீக்கும் உத்தரவை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பிறப்பித்துள்ளார் என்று தெரியவருகின்றது.

கடற்படைத் தளபதிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, பொலிஸ் திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் மைத்திரிபால சிறிசேன இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார் என்றும் தெரியவருகின்றது.

புங்குடுதீவு மாணவி வித்தியா கூட்டு வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணைகளை முன்னெடுத்த நிசாந்த டி சில்வா, மூன்று மேல் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய சிறப்பு நீதாய விளக்கத்தின் முன்பாக சாட்சிகளை முன்வைத்திருந்தார். அவரது விசாரணைகளின் அடிப்படையில் 7 குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது.

அந்த வழக்கை துரிதமாக முன்னெடுத்து குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக்கொடுத்தமைக்காகப் பொலிஸ் திணைக்களத்தால் அவரும், அவரது பிரிவினரும் மதிப்பளிக்கப்பட்டனர்.

2008 - 2009 காலப்பகுதியில் 11 தமிழ் இளைஞர்கள் கொழும்பு மற்றும் அண்மைய பகுதிகளில் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கடற்படையின் உயர்மட்ட அதிகாரிகளைக் கைது செய்த பிரதான பொலிஸ் பரிசோதகர் நிசாந்த டி சில்வா விசார்ணைகளைத் துரிதமாக முன்னெடுத்திருந்தார்.

கடற்படையின் முன்னாள் பேச்சாளரான கொமடோர் டி.கே.பி.தசநாயக்க இந்த வழக்கில் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் முக்கிய சந்தேகநபரான நேவி சம்பத் என அழைக்கப்படும் முன்னாள் கடற்படை அதிகாரியான லெப்.கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி கைது செய்யப்பட்டார். கொழும்பு லோட்டஸ் வீதியில் போலி அடையாள அட்டையுடன் மாறுவேடத்தில் நடமாடிய நேவி சம்பத்தை நிசாந்த டி சில்வா நேரடியாகச் சென்று கைது செய்திருந்தார்.

நேவி சம்பத் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் அவர் நாட்டை விட்டுத் தப்பிச் செல்வதற்கு, கூட்டுப்படைகளின் தளபதி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன உடந்தையாக இருந்தார் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி நிசாந்த டி சில்வா நீதிமன்றில் தெரிவித்தார். அதையடுத்து கூட்டுப்படைகளின் தளபதி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவைக் கைது செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் கூட்டுப்படைகளின் தளபதி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன இதுவரை கைது செய்யப்படவில்லை. அதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தடையாக உள்ளார் என்று கூறப்படுகின்றது.

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை, ஊடகவியலாளர் கீத் நோயர், உபாலி தென்னக்கோன் மற்றும் நாமல் பெரேரா ஆகியோர் மீதான தாக்குதல்கள் ஆகிய வழக்குகளையும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி நிசாந்த டி சில்வாவே முன்னெடுத்திருந்தார்.

கொழும்பில் இடம்பெற்ற இந்தக் கொலைகள், கடத்தல்கள் மற்றும் தாக்குதல்களில் கடற்படை மற்றும் இராணுவ அதிகாரிகள் சம்பந்தப்பட்டுள்ளனர் என்ற தகவலை நிசாந்த டி சில்வாவே வெளிப்படுத்தியிருந்தார். அத்துடன் சந்தேகநபர்களான படை அதிகாரிகளையும் அவர் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியிருந்தார்.

இந்தவழக்குவிசாரணைகள் முன்னெடுக்கப்படுவதால் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவும் சந்தேகநபராக இணைக்கப்படுவார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. தற்போது பொலிஸ் திணைக்களத்தையும் தனது பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவந்துள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, வழக்கு விசாரணைகளை துணிச்சலுடனும் துரிதமாகவும் முன்னெடுத்த குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நிசாந்த டி சில்வாவை அந்தப் பதவியிலிருந்து நீக்குவதற்கு உத்தரவிட்டுள்ளார் என்று தெரியவருகின்றது. (ற)

## ஈ.பி.ஆர்.எல்.எவ்வை...

பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பு இருக்கும் கூட்டணிக்கு வர மாட்டோம் என்றும் என்றும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் விவாதிக்கப்பட்டுள்ளது. ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் கூட்டத்தில் பங்குபற்றிய ச.சர்வேஸ்வரன் இவை தொடர்பில் பதிலளிக்க முடியாது தடுமாறினார். இது தொடர்பில் தன்னிலை விளக்கமளிக்க சுரேஷ் பிரேமச்சந்திரனுக்குக் கால அவகாசம் வழங்கப்பட்டது. அதன்பின்னர் மேலதிக நடவடிக்கைகள் தொடர்பாக முடிவெடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

எனினும், சுரேஷ் பிரேமச்சந்திரனுடன் மீள இணைவது சாத்தியமற்றது என்றும், கட்சி எடுக்கும் முடிவே இறுதியானது என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-105)

### மரண அறிவித்தல்

**செல்வி வைரமுத்து கனகம்மா**

*(முத்துத்தம்பி மகாவித்தியாலயம் மற்றும் கொக்குவில் நாமகள் மகா வித்தியாலய முன்னாள் ஆசிரியர்.)*



4 ஆம் ஒழுங்கை கலாசாலை வீதி, திருநெல்வேலியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி வைரமுத்து கனகம்மா நேற்று (18.11.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து தங்கம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து சங்கரப்பிள்ளை, இராசையா மகேஸ்வரி ஆகியோரின் தங்கையும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை அமிர்தவல்லி, இராசையா ஆகியோரின் மைத்துனியும் கௌரி, சிவசங்கர், காயத்திரி, சிவசங்கர், சிந்து, திவாகர் ஆகியோரின் மாமியும் சிரோன், ஏரோன், அகன்வி, ஹரினி, அனீஷ், அஷ்வின் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப.2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**4 ஆம் ஒழுங்கை, கலாசாலை வீதி, திருநெல்வேலி. 077 9936 083**


**தகவல் : காயத்திரி (மருமகன்)**

## காணி விற்பனைக்கு

வடமராட்சி பகுதி, உடுப்பிட்டி கோயில்பற்று கரணவாய் குறிச்சியிறை (கரணவாய் மேற்கு அந்திரான்) இந்தனைகலட்டி என்னும் காணி நி.பரப்பு 24. 21 பரப்பு தென்னந்தோட்டமும், 30 பரப்பு தோட்டக்காணியும் விற்பனைக்கு உண்டு. நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு - தம்பிப்பிள்ளை ரமணன்**
**"சிறிபதி இல்லம்"**
**இலகடி அல்வாய் கிழக்கு, அல்வாய்.**

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
**ஆசீர்வாதம் அமலதாஸ்**

மலர்வு 06.03.1945
உதிர்வு 19.11.2017

ஓராண்டென்ன
ஓராயிரம் ஆண்டுகள் ஆனாலும்
உங்களின் பசுமையான நினைவுகள்
எங்கள் மனங்களைவிட்டு மறையாது

பிடாரி கோயிலடி,
ஆனைக்கோட்டை.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(cs.21251) (13.17)

## பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் அறிவித்தல்

**1. விஸ்வலிங்கம் தர்மசேனாபதி**
**2. பெண் மதுமிதா,**
உப்புத்தண்ணி பிள்ளையார் கோயிலடி,
பொலிகண்டி மேற்கு, வல்வெட்டித்துறை.
தற்காலம்:
4455, Avenue Bourret
Montreal Quebec, Canada,
H3S 1X1
இருவரும் தமது அற்றோணித்
தத்துவக்காரர்
**திரு. பாலசுப்பிரமணியம்**
**கிருஷ்ணசாமி,**
A.G.A ஒழுங்கை,நெடியகாடு,
வல்வெட்டித்துறை. மூலம் தோற்றம்
**வழக்காளிகள்**

**வழ.இல.: காணி/19452/2018**

எதிர்

**1. திரு. செல்லன் ஆனந்தராசா**
தலைவர்,
இளங்கதிர் விளையாட்டுக் கழகம்.

**2. திரு. கோபாலகிருஷ்ணன்**
**பிரேம்குமார்**
செயலாளர்,
இளங்கதிர் விளையாட்டுக் கழகம்.

**3. சின்னவி ஆறுமுகம்**
பொருளாளர்,
இளங்கதிர் விளையாட்டுக் கழகம்,
மூவரும் மாணாங்கானை,
வல்வெட்டித்துறை.
**எதிராளிகள்**

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளிகளால் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் 19452 / L 2018 என்ற இலக்க வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்டுள்ள எதிராளிகளுக்கு எதிராக அவ் வழக்கின் பிராதில் கோரியுள்ள நிவாரணங்களைக் கோரி கோப்பிடப்பட்டுள்ளது. அவ் வழக்கில் குடியியல் நடவடிக்கை கோவையின் பிரிவு 16 இன் கீழான பகிரங்க அறிவித்தலினை பத்திரிகையில் பிரசுரம் செய்யுமாறு மன்று பிறப்பித்த கட்டளைக்கு இணங்க இவ்வழக்கில் அக்கறையுள்ள இளங்கதிர் விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் எவரேனும் இருப்பின் அவர்கள் இவ்வழக்கில் தோன்றி தமது உரிமையை நிலைநாட்டுவதற்கு ஏதுவாக இவ் அறிவித்தல் விடுவிக்கப்படுகிறது.

இவ் வழக்கின் அடுத்த தவணையாக 07.01.2019 ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளது.

09 ஆம் திகதி நவம்பர் மாதம் 2018

நீதிமன்றின் கட்டளைப்படி

**பதிவாளர்**
**பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்**

**வரைபு**
**திருமதி மரியா ரங்கன்.**

(cs.21226) (13.17)

## சரியானவற்றை...

வேற்றப்பட்டால் மறுகணமே பதவிகளைத் தூக்கியெறிவோம் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்தது.

நேற்று அரச தலைவர் செயலகத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்கள்



**திருமதி செல்வராணி சுப்பிரமணியம்**
**(பாக்கியம்)**

தொம்பை வீதி, உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி சுப்பிரமணியம் 17.11.2018 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூதப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திருப்பதிஅம்மா, இராஜகோபால், நவரட்ணம், தெய்வேந்திரநாதன் மற்றும் மகேந்திரநாதன், சண்முகநாதன் ஆகியோரின் சகோதரியும், கௌசலா (லண்டன்), சகுந்தலா, சுசீலா (லண்டன்), சியாமளா இந்திரகுமார் (குவைத்), சந்திரகுமார் (ஜசுபி), சுரேஸ்குமார் (குரு பிறிண்டேர்ஸ் - திருநெல்வேலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற தயாபரன் (லண்டன்) மற்றும் குணசேகரம், திவ்யநாதன் (நாதன் வோச வேக்ஸ் இணுவில்), சுமதினி, சர்மிலா, தவச்செல்வி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஹனுசியா ( Xpert Medic ) டிலக்ஷிகா, அரவிந்தன், கிஷோக்குமார் (லண்டன்), திலீப்குமார் (லண்டன்), ஒபேத், மில்றோய் (தொழில்நுட்பக் கல்லூரி - கொக்குவில்), எபிறோன், ஜெசூரன் , அனோஜன், வினோஜன், கஜேந்திரன் (அமெரிக்கன் மினரல் வோட்டர்), லக்ஸ்மியா, துஷானி, டனிஸ்ரா.சுஜானா (யாழ்.பல்கலைக்கழகம்), சுகிர்தன் (தொழில்நுட்பக் கல்லூரி - கொக்குவில்), கேதர்னா, ரக்ஷனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.11.2018 புதன்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொம்பை வீதி,**
**உடுவில் கிழக்கு, சுன்னாகம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

**077 191 0609**

(CS/288370)(11,17)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14 | 17 |
| 02 | 11 |
| 1951 | 2018 |

**சந்தியாப்பிள்ளை அல்போன்ஸ் ஜெயரெட்ணம்**

*(மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை மேற்பார்வையாளர்)*

கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அல்போன்ஸ் ஜெயரெட்ணம் கடந்த (17.11.2018) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை - திரேசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் மலர், ஜீவரெட்ணம் (சுவிஸ்), விஜயரெட்ணம், கமலினி, சாந்தி, சாள்ஸ் (இந்தியா), றொபின்சன், சிறி (கனடா), மீனா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் நாளை (20.11.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00மணியளவில் கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**01, புதுவீதி, கொய்யாதோட்டம்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**சகோதரர்கள்.**

அவர் தெரிவித்தாவது

நாடாளுமன்றத்தைச் சுமூகமான முறையில் நடத்த வேண்டும் என்று அரச தலைவர் கூறினார். நிலையியல் கட்டளைகளின்படி பிரச்சினையை முடித்துக் கொள்ளுங்கள் என்றார். ஆனால் எதிர்க்கட்சியினர் அதற்குரிய பதிலைக் கூறவில்லை. என்றார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தாவது சபாநாயகர், சபை முதல்வர் உட்பட அனைத்துக் கட்சிகளுடனும் கலந்துரையாடியே ஒழுங்குப் பத்திரம் அமைக்கப்பட வேண்டும். நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு ஒழுக்க முறையையொன்று உள்ளது. நிலையியல் கட்டளைகளின்படி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படும் பட்சத்தில் அதற்கு முகம் கொடும்போம். சபாநாயகரின் முயற்சிகளை விரைவில் தோற்கடிப்போம் - என்றார். (ற)

## பெரும்பான்மையைக்...

தலைவரிடம் நாளை சத்தியக் கடதாசி கையளிக்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தது.

அரச தலைவர் செயலகத்தில் நேற்று நடந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சத்தியக் கடதாசியைக் கையளிப்பதற்காக 113க்கும் அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று முற்பகல் 10 மணிக்கு அரச தலைவர் செயலகத்துக்குச் செல்வார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, தற்போது நாட்டில் தலைமை அமைச்சரோ அல்லது அமைச்சரவையோ இல்லை என்பதை இன்றைய (நேற்றைய) கூட்டத்தில் நாம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளோம் என்று தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான லக்ஸ்மன் கிரியெல்ல.

புதிதாகத் தலைமை அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். மகிந்த ராஜபக்ச தனது பெரும்பான்மையை நாடாளுமன்றில் நிரூபிக்க வேண்டும் என்றும் அரச தலைவரிடம் வலியுறுத்தியுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் கோரிக்கைகள் தொடர்பாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பதிலேதும் கூறவில்லை என்று தெரியவருகின்றது. (ற)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி.
**மகேஸ்வரி பாலகிருஷ்ணன்**

பிறப்பு-25.06.1945 இறப்பு-19.11.2017

**ஆசையாய் தூளி கட்டி**
**அழகாய் பாட்டிசைத்து**
**நேசமாய் மார்பணைத்து**
**பாசத்துடன் சீராட்டிய**
**எம் தெய்வமே!**
**ஆண்டு ஒன்று சென்றதம்மா**
**எம்மை விட்டு பிரிந்து**
**என்றும் காத்திருக்கின்றோம்**
**உங்கள் வரவுக்காய்!**

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்
உங்கள் அன்பின் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
**44-2/2, Vanderwert Place, Dehiwala**

## கலை விழா

யாழ்ப்பாணம்,நவ. 20

மல்லாகம் மாஸ்டர் மொண்டேசரியின் கலைவிழாவும் மாணவர் மதிப்பளிப்பு நிகழ்வும் நாளை செவ்வாய்க்கிழமை மருதனார்மடம் வட இலங்கை சங்கீத சபை மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. நிகழ்வின் முதன்மை விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் சி.ஜெயகாந்த் கலந்து சிறப்பிக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (7)

## மூடிய...

மைத்திரிபால சிறிசேன, மகிந்த ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் மூடிய அறைக்குள் பேச்சு நடத்தினர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அதில் பேசப்பட்ட விடயங்கள் எதுவும் வெளியாகவில்லை.

அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் எந்த இணக்கப்பாடுகளும் இன்றி முடிவடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படும் நிலையில் மூடிய அறைக்குள் பேச்சு நடைபெற்றன என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை, மகிந்த ராஜபக்சவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது மீளவும் உறுப்பினர்களின் பெயர் குறிப்பிட்டு வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று அரச தலைவர் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் கோரியுள்ளார் என்று அரச தலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது உறுப்பினர்களின் பெயர்களை அழைத்து அல்லது பொருத்தமான இலத்திரனியல் பொறிமுறையில் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று அரச தலைவர் கேட்டுக் கொண்டார் என்று அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

## மைத்திரி...

என்று நேற்றுக் காலை அரச தலைவருக்கு அறிவித்தார்.

அதேபோன்று மக்கள் விடுதலை முன்னணியும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு நேற்றுக் காலை அறிவித்தது. இது தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபாலவுக்கு கடிதமும் அனுப்பி வைத்தது.

'நாடாளுமன்றத்தின் தற்போதைய நிலமை தொடர்பாக கலந்துரையாடுவதே இந்தப் பேச்சுக்களின் நோக்கமாக உள்ளதாக அறிவித்துள்ளீர்கள். நாடாளுமன்றத்தில் தற்போது ஏற்பட்டுள்ள நிலமைகள் அனைத்துமே உங்களின் சூழ்ச்சிகரமான அரசியல் நோக்கத்துக்காக ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகவும், இந்தக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு நாட்டில் ஏற்பட்டுள்ள உறுதிப்பாடற்ற தன்மையின் பிரதிபலிப்பாகவே நாம் பார்க்கின்றோம். தற்போது நாட்டில் பாரதூரமான வகையில் அரசியல் உறுதிப்பாடற்ற நிலமை உருவாகியுள்ளது. 7 தாசாப்தங்களுக்கும் அதிகமான இலங்கை அரசியலில் இது போன்றதொரு நிலைமை முதற் தடவையாகவே உருவாகியுள்ளது' என்று மக்கள் விடுதலை முன்னணி தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது. (5,10)

## பேரவைக்...

நேற்று மாலை 3 மணிக்கு நடைபெற்றது. புளொட் அமைப்பின் தலைவர் சித்தர்த்தன் கொழும்பில் உள்ளமையால் அந்த அமைப்பின் செயலர் மற்றும் வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் சிவநேசன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். அவர்கள் கூட்டம் ஆரம்பிப்பதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னதாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் இது தொடர்பில் தெரிவித்ததாவது பேரவையின் ஆரம்ப நிகழ்வில் எமது அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் என்னையும் அமைப்பின் செயலரையும் அங்கத்துவ உறுப்பினர்களாக எழுத்து மூலமாக இணைத்தலைவர்களுக்கு அறிவித்து இருந்தார். பேரவையின் கடந்த கால கூட்டங்களில் கூட நாம் கலந்து கொண்டிருந்தோம். எமது அமைப்பின் தலைவர் வரமுடியாத சந்தர்ப்பங்களில் நாம் கலந்து கொள்வது வழமையாகும். அவ்வாறே நேற்றைய கூட்டத்துக்கும் நாம் சென்றிருந்தோம். நாம் உள்ளே அமர்ந்திருந்தோம். அங்கு வந்த ஒருவர் பேரவையின் இணைத்தலைவர்களில் ஒருவரான வைத்தியர் லக்ஸ்மன் எம்மை அழைக்கின்றார் என்று கூறி அவரிடம் கூட்டிச் சென்றார். உங்களுக்கு இந்த கூட்டத்தில் அனுமதி இல்லை நீங்கள் வெளியேறுங்கள் என மருத்துவர் லக்ஸ்மன் தெரிவித்தார். நாம் வழமையாகக் கூட்டங்களில் கலந்து கொள்கின்றோம். திடீரென ஏன் எம்மை வெளியேறச் சொல்கின்றீர்கள் என்று கேட்டோம். இது நாம் எடுத்த முடிவு நீங்கள் இதில் கலந்து கொள்ள முடியாது என்றார். நாம் அங்கிருந்து வெளியேறி விட்டோம். என்றார்.

இது தொடர்பில் தமிழ் மக்கள் பேரவையின் ஊடகப் பேச்சாளர்களான கலாநிதி சரவணபவன் மற்றும் புவிதரன் ஆகியோரிடம் கேட்டபோது

புளொட் அமைப்பைச் சார்ந்தவர்கள் உரிய முறையில் அனுமதி பெறவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பு சார்பில் அதன் தலைவர் க.சுரேஸ்பிரேமச்சந்திரன் தனது சகோதரனே கலந்துகொள்வார் என முற்கூட்டியே அறிவித்தபடியால் அனுமதிக்கப்பட்டார் என்றனர்.

அதேவேளை புளொட் அமைப்பைச் சேர்ந்தவர்கள் திருப்பி அனுப்பப்பட்டமை தவறு என்று பேரவையின் 'இணைத் தலைவர்களில் ஒருவரும், வடக்கு மாகாண முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகின்றது. பேரவையின் கூட்டத்துக்கு வந்திருந்தவர்களும் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-8,105)

## பேரவையில்...

காணப்படுகின்றது. அவற்றைத் தீர்ப்பது அந்தந்தக் கட்சிகளுக்குரிய சவாலும், பொறுப்புமே. அந்த முரண்பாடுகளுக்கான காரணம் பொதுநலம் என்று எடுத்துக் காட்டப்பட்டாலும், கட்சி நலன் கலந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

தமிழ் மக்கள் பேரவையின் கூட்டம் நேற்று பலாலி வீதியில் உள்ள பேரவை அலுவலகத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இதுவரை நடந்த தவறுகளை மறப்போம். நாம் அனைவரும் ஒன்றாகக் கைகோர்த்துப் பயணிப்போம். ஆனால் இனிமேல் தவறுகள் இடம்பெறாது இலட்சியத்தை மனதில் நிறுத்திச் செயற்படுவோம். புதிய பொதுச் சின்னத்தின் கீழ் எம்மை ஒன்றிணைக்கும் பணியைத் தமிழ் மக்கள் பேரவையினர் மேற்கொள்வர் என்று நம்புகின்றேன். என்னைப் பொறுத்தவரை மிளகாய்த் தூள் கரைசலை யார் மீதும் தெளிக்காது உங்கள் முடிவை மனமுவந்து ஏற்றுக் கொள்வேன்.

### பொதுச் சின்னம்

கட்சிகளின் சின்னங்கள் பல காலம் உபயோகிக்கப்படும்போது அவற்றுடன் அந்தந்தக் கட்சிகளின் மீதுள்ள மதிப்பு, வெறுப்பு, எதிர்பார்ப்பு போன்றவை அடையாளப்படுத்தப்படுகின்றன. புதிதாகக் கொள்கை அடிப்படையில் அரசியலில் உள்நுழைவோர் அந்தந்தக் கட்சிகளின் சின்னங்களுடன் சேர்ந்து தேர்தலில் ஈடுபட்டால் அல்லது அவற்றிக் கீழ் அடையாளப்படுத்தப்பட்டால் கட்சிச் சின்னங்கள் மீதுள்ள மக்களின் நம்பிக்கைகளும், அவநம்பிக்கைகளும் புதிய கட்சியின் மீதும் பதியும். சின்னத்தைத் தரும் கட்சியின் பொறுப்புக்களையும், இறந்தகால நிகழ்வுகளையும் புதிய கட்சி சுமை தாங்கிப் பயணிக்க வேண்டி வரும். கொள்ளைகளைப் பரப்ப வந்த நாம் கடந்தகால கோபதாபங்களுக்கு ஆளாக நேரிடும். அதனாலேயே நாம் ஒரு பொதுவான சின்னத்துடன் அல்லது புதிய சின்னத்துடன் கொள்கைகள் சார்ந்து பயணிக்க வேண்டும் என்று எமது கட்சி தொடர்பாக அபிப்பிராயம் தெரிவித்துள்ளேன்.

### உங்களின் முடிவு

தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவரான எனது பொறுப்புக்கள் மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும். நான் தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவராக உள்ளபோதே தமிழ் மக்கள் கூட்டணி என்ற அரசியல் கட்சியை ஆரம்பித்துள்ளேன். அதன் செயலாளர் நாயகமாகவும் மாறியுள்ளேன். நான் தொடர்ந்து தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவராகக் கடமையாற்றலாமா என்பதை உங்கள் பரிசீலனைக்கு விடுகின்றேன்.

எமது கட்சியின் அரசியல் குறிக்கோள்கள் பேரவையின் அரசியல் குறிக்கோள்களுடன் மாறுபட்டவை அல்ல. எமக்குள் முரண்பாடுகள் எழ வேண்டிய அவசியமில்லை. ஆனால் பேரவையில் ஏற்கனவே இடம்பெற்றுள்ள கட்சி களுக்கும் எமக்கும் கொள்கையளவில் மாறுபாடுகள் இருக்கலாம். உதாரணத்துக்கு சித்தார்த்தனின் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்தே செயலாற்றுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகளை ஏற்க முடியாததாலேயே நான் அதிலிருந்து வெளியேறினேன். சித்தார்த்தனுடன் எமக்குக் கொள்கையளவில் முரண்பாடுகள் இருக்கலாம். அதைப் போன்று தமிழ்க் கூட்டமைப்பில் இணைந்துள்ள ஏனைய கட்சிகளுடன் எமக்கு முரண்பாடுகள் எழக் கூடும். ஆனால் தமிழ் மக்கள் பேரவையுடன் முரண்பாடுகளை எதிர்நோக்கக் காரணங்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உதவியுடன் முதலமைச்சராக ஏற்றுக்கொள்ளப்பட்ட நான் அந்தப் பதவி முடியும்வரை தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவராகவும் கடமையாற்றியுள்ளேன். முரண்பாடுகள் எழவில்லை. எது எவ்வாறு இருப்பினும் நான் தொடர்ந்து தமிழ் மக்கள் பேரவையில் இணைத்தலைவராகக் கடமையாற்றலாமா? இல்லையா என்பது பற்றி உங்களாலேயே தீர்மானிக்கப்பட வேண்டும்.

### கட்சிகளின் நலனே

பேரவையில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் கடந்தகாலத் தேர்தல் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய வேண்டியுள்ளது என்று நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் பேரவையுடன் ஒருமித்த கொள்கைகள் கொண்ட கட்சிகள் சில தமக்குள் முரண்பட்டுள்ள நிலைமை காணப்படுகின்றது. அவற்றைத் தீர்ப்பது அந்தந்தக் கட்சிகளுக்குரிய சவாலும், பொறுப்புமே. அந்த முரண்பாடுகளுக்கான காரணம் பொதுநலம் என்று எடுத்துக் காட்டப்பட்டாலும், கட்சி நலன் கலந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. அதனால் தமிழ் மக்கள் பேரவையோ தமிழ் மக்கள் கூட்டணியோ அந்தக் கட்சிகளின் முரண்பாடுகளைத் தமக்குள் ஈர்க்க வேண்டுமா என்ற கேள்வி எழுகின்றது. அவர்களின் முரண்பாடுகளை மனதில் வைத்தே எமது கூட்டணி சுதந்திரமாகப் பொதுச் சின்னம் ஒன்றில் கட்சி அரசியலில் நுழையத் தீர்மானம் எடுத்தது. ஏனைய கட்சிகள் மற்றும் இயக்கங்கள் கொள்கை அடிப்படையில் எம்முடன் தேர்தல் உடன்பாடுகளை வைத்துக் கொள்ளலாம்.

அங்கத்துவக் கட்சிகளின் முரண்பாடுகள் கொள்கை ரீதியானவையா, கட்சி நலன்கள் சம்பந்தப்பட்டவையா என்று நாம் பார்க்க வேண்டும். சில வேளைகளில் கொள்கைகள் ஒன்றாக இருக்க நடைமுறைச் செயற்பாடுகள் முரண்பாடுடையன என்று ஒரு கட்சி மற்றைய கட்சி பற்றி விமர்சிக்கக்கூடும். அவற்றைத் தீர்த்து வைக்கத் தமிழ் மக்கள் பேரவை முரண்பாடுகளிடையே உள்நுழைய வேண்டும் என்பதில்லை. தனிப்பட்ட ரீதியில் பேரவையின் இணைத்தலைவர்களோ அங்கத்தவர்களோ அவற்றை நீக்க இரு சாராராலும் கோரப்பட்டார்கள் என்றால் அவற்றைத் தீர்க்க அவர்கள் முன்வரலாம். உதாரணத்துக்கு கஜேந்திரகுமாரின் கட்சிக்கும் சுரேஷ் பிரேமச்சந்திரனின் கட்சிக்கும் இடையில் எழுந்துள்ள முரண்பாடுகளை நீக்க எமது இணைத்தலைவர் ஒருவர் முன்வரலாம். ஆனால் அது அந்த இணைத்தலைவரின் தனித்துவமான அவரின் ஏற்புடைத் தன்மையைப் பொறுத்து ஏற்கப்பட்ட கடமையாகவே இருக்கும்.

### கூட்டணியின் மீது பக்கச்சார்ப்பு கூடாது

இன்று நாம் பரிசீலிக்கப்போவது அங்கத்துவக் கட்சிகளின் தேர்தல் செயற்பாடுகள் பற்றிய பேரவையின் கொள்கைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதாகும். அதனை நீங்களே தீர்மானிக்க வேண்டும். தமிழ் மக்கள் கூட்டணி தமிழ் மக்கள் பேரவையில் இருந்து வெளிவந்த ஒரு கட்சி. பேரவை உருவாக்கும்போது அன்று நடைமுறையில் இல்லாத கட்சி. மற்றைய கட்சிகள் பேரவையை உருவாக்க உதவி புரிந்த கட்சிகள். இவற்றுள் வேறுபாடு காட்ட வேண்டுமா என்பது உங்களைச் சார்ந்தது. இப்பொழுது கூடப் பேரவையில் அங்கம் வகிக்கும் பலரே கூட்டணியின் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக இருக்கின்றார்கள். உதாரணத்துக்குப் பேராசிரியர் சிவநாதனைக் குறிப்பிடலாம்.

நாம் ஒற்றுமையுடனும் பரஸ்பர நம்பிக்கையுடனும் கட்சி பேதங்களைக் கடந்து இதுவரை காலமும் செயற்பட்டதன் விளைவாகவே தமிழ் மக்கள் பேரவையை எமது மக்கள் நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் பார்த்து வந்துள்ளார்கள். கடந்த காலங்களில் எமக்கிடையே சில கசப்பான சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம். அவற்றில் இருந்து பாடம் கற்றுக்கொண்டு மீண்டும் அதே தவறுகள் இடம்பெறாமல் நாம் எவ்வாறு எமது மக்களுக்கு சேவை செய்யப்போகிறோம், எவ்வாறு எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை அடையப்போகிறோம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு கடமையாற்ற வேண்டிய காலகட்டத்தில் நாம் நிற்கின்றோம்.

### கூட்டமைப்புடன் உடன்பாடு இல்லை

தமிழ் தேசிய கூட்டமைப்பு எமது மக்களின் பிரச்சினையைக் கையாண்ட விதத்தில் எனக்கு எள்ளளவும் உடன்பாடு இருக்கவில்லை. அவர்கள் கொள்கை பிறழ்ந்தார்கள் என்று நான் நம்பியதால் அவர்களுடன் முரண்பட்டு வெளியேறினேன். அதற்காக இன்றுவரை தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் புளொட் அமைப்பின் மீதோ அதன் தலைவர் சித்தார்த்தன் மீதோ எனக்கு தனிப்பட்ட முறையில் எந்த வித கோப தாபங்களும் இல்லை. அரசியலில் நண்பர் சித்தார்த்தனின் அணுகுமுறை வேறாக இருக்கலாம். ஆனால் அவர் எனது நண்பர். என் மதிப்புக்குரிய ஒருவரின் மகன். அவருடன் இணைந்து பல வேலைகளை தமிழ் மக்கள் பேரவையில் நாம் எல்லோரும் முன்னெடுத்திருக்கின்றோம். அவரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கட்சி ரீதியாக கூறு போடும் வேலையை நான் செய்யமாட்டேன். அதேவேளை, கொள்கை ரீதியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் முரண்பட்டு வெளியேறிய கட்சிகள் இங்கு இருக்கின்றன. அவர்களுடன் கொள்கை அடிப்படையில் ஒற்றுமையாக இணைந்து அரசியலில் செயற்படுவதே எனது விருப்பம்.

### அனைவரும் இணையுங்கள்

மாற்றுத் தலைமைத்துவத்தை உருவாக்கக் காலம் கனிந்துள்ளது. தமிழ் தேசியத்தை வலியுறுத்தும் கட்சிகளுடன் நாம் ஒன்றுபட்டு பயணிக்க வேண்டிய கடப்பாடு எமக்குண்டு. நான் எந்தக் கட்சிக்கும் பக்க சார்பாக நின்று அவர்களின் சின்னத்தில் தேர்தல்களில் போட்டியிட முடியாது. ஒரு புதிய பொதுச் சின்னத்தின் கீழ் தமிழ்த் தேசியத்தின்பால் பற்றுதி உள்ள எல்லோரையும் ஒன்றிணைக்கும் வகையில் தமிழ் மக்கள் கூட்டணியின் கீழ் போட்டியிட தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வெளியே நிற்கும் ஈ.பி.டி.பி. தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகளை அழைக்கிறேன். ஒற்றுமை என்ற காரணத்துக்காக தவறுகளைக் கண்டும் காணாது இருந்துவிட முடியாது. எமது பயணத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் தவறுகளுக்கு நாம் இடம் கொடுக்க முடியாது. நான் தவறு விட்டால் அதனைச் சுட்டிக்காட்டி தக்க நடவடிக்கை எடுக்கும் கடமை உங்கள் ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது. (ற)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், நவ. 19

**பாரதி வி.கழக**
**கால்பந்தாட்டம்**

பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் பொலிகை பாரதி பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் பொலிகை பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொலிகை கெல்த் ஸ்ரார் அணியை எதிர்த்து பொலிகை பையர் ஹய்ஸ் அணி மோதவுள்ளது. இரவு 7.40 மணிக்கு இடம்பெறும் ஆட்டத் தில் பொலிகை அற்ராக் போய்ஸ் அணியை எதிர்த்து பொலிகை நோத் யுனைற்ரெட் அணி மோதவுள்ளது. இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொலிகை சீஸ் ராஸ் அணியை எதிர்த்து பொலிகை பிளக் புல்ஸ் அணி மோதவுள்ளது.

**யாழ். லீக்கின்**
**கால்பந்தாட்டம்**

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மகாத்மாஜீ விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை ஐக்கியம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்ப் பாணப் பல்கலைக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)



# ஆனைக்கோட்டை யூனியன் அன்ரனிசை தோற்கடித்தது

யாழ்ப்பாணம், நவ. 19

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் அணி வெற்றிபெற்றது.

அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை 4.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளை யாட்டுக் கழக அணி மோதியது.

6:3 என்ற கோல் கணக்கில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

# இமையாணன் மத்தி இலகுவான வெற்றி!

யாழ்ப்பாணம், நவ. 19

கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 20 வயதுப் பரிவினருக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வெற்றிபெற்று இமையாணன் மத்தி விளையாட்டுக் கழக அணி அரையி றுதிக்குத் தகுதி பெற்றது.

கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக மைதா னத்தில் இடம்பெற்ற இந்தக் காலிறுதி ஆட்டத்தில் பொலிகை பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இமையா ணன் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதியது. 4:1 என்ற கோல் கணக்கில் இமையாணன் மத்திய விளையாட் டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)



# ஸ்கை றோஸ் வென்றது

யாழ்ப்பாணம், நவ. 19

செட்டிக்குளம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஸ்கை றோஸ் அணி வெற்றிபெற் றது.

லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் ஸ்கை றோஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளம் பறவைகள் விளையாட்டுக் கழக அணி மோதியது.

4:0 என்ற கோல் கணக்கில் ஸ்கை றோஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

# சமநிலை

யாழ்ப்பாணம், நவ. 19

செட்டிக்குளம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்யப் பட்ட கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொட ரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்று சமநிலை யில் முடிந்தது. லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதா னத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் சக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணி களும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்தமையால் ஆட்டம் சமநிலையானது. (ம-23)



# நியூட்டன் அணி அசத்தல் ஆட்டம்


யாழ்ப்பாணம், நவ. 19

கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட் டுக் கழகம் நடத்தும் 20 வயதுப் பிரிவின ருக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நியூட் டன் அணி வெற்றிபெற்று அரையிறுதிக் குத் தகுதி பெற்றது.

கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட் டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நியூட்டன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் நியூட்டன் அணி வெற்றிபெற்றது. (ம-23)

### இலங்கைக்கு எதிரான டெஸ்ட்டில்

# கிண்ணம் வெல்வதை உறுதிசெய்தது இங்கி.




இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் 57 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றுவதை உறுதிசெய்தது இங்கிலாந்து அணி.
கண்டியில் கடந்த 14ஆம் திகதி இந்த ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 285 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக கரன் 64 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் டில்ருவான் பெரேரா 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.
பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி 336 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக றோசன் சில்வா 85 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் லீச், ரசிட் இருவரும் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.
46 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி 346 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ரூட் 124 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் தனஞ்சய 6 இலக்குகளைக் கைப்பற்றினார்.
இலங்கை அணிக்கு 301 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப் பட்டது. நேற்றுமுன்தின நான்காம் நாள் முடிவில் அந்த அணி 7 இலக்குகளை இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இலங்கை அணி வெற்றிபெற வேண்டுமாயின் மேலதிகமாக 75 ஓட்டங்களையும், இங்கிலாந்து அணி வெற்றிபெறுவதற்கு மேலதிகமாக 3 இலக்குகளையும் பெற வேண்டிய நிலையில் நேற்றைய ஆட்டம் ஆரம்பமானது.
சில நிமிடங்களிலேயே 35 ஓட்டங்களுடன் டிக்வெல்ல வீழ்த்தப்பட்டார். டிக்வெல்லவை வீழ்த்திய மொயின் அலி அதே பந்துப்பரிமாற்றத்தில் லக்மலையும் பவிலியனுக்குத் திருப்பினார்.
புஸ்ப குமார ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். 243 ஓட்டங்களில் இலங்கை அணி சகல இலக்குகளையும் இழந்ததை அடுத்து 57 ஓட்டங்களால் வெற்றிபெற்றது இங்கிலாந்து அணி.
மூன்று ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதலிரு ஆட்டங்களிலும் வெற்றிபெற்ற காரணத்தால் இங்கிலாந்து அணி கிண்ணம் வெல்வதை உறுதி செய்துள்ளது. (ம)

## தெ.ஆபிரிக்கா அபார ஆட்டம்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ரி-20 ஆட்டத்தில் 21 ஓட்டங்களால் வெற்றிபெற்றது தென்னாபிரிக்க அணி.
ஆஸ்திரேலியாவில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் நடைபெற்றது. மழை காரணமாக ஆட்டம் 10 பந்துப்பரிமாற்றங்கள் கொண்டதாகக் குறைக்கப்பட்டது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 6 இலக்குகளை இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றது.
பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றது. இதையடுத்து தென்னாபிரிக்க அணி 21 ஓட்டங்களால் வென்றது. (ம)



# ஐ.பி.எல்லில் எந்த அணியில் எவரெவர்?



ஒவ்வொரு அணியும் அடுத்த வருட ஐ.பி.எல். தொடருக்காக துரித கதியில் தயாராகி வருகின்றன. அடுத்த வருட ஐ.பி.எல். தொடரின்போது எந்த அணியில் எந்தெந்த வீரர்கள் தக்க வைக்கப்பட்டுள்ளனர். எவரெவர் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்ற தகவல்கள் முழுமையாக வெளிவந்துள்ளன. அந்தத் தகவல்கள் இதோ...

**பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்**
**விடுவிக்கப்பட்ட வீரர்கள்:** குயின்டன் டி ஹொக், மன்தீப் சிங், மக்கலம், கிறிஸ் வோக்ஸ், அன்டர்சன், சர்பிராஸ் கான்.
**தக்கவைக்கப்பட்ட வீரர்கள்:** விராட் கோக்லி, வில்லியர்ஸ், பார்தீவ் பட்டேல், வொஷிங்டன் சுந்தர், பவன் நெகி, மொயின் அலி, கோலின் டி கிராண்ட்ஹோம், சாகல், சிராஜ், சவுத்தி, யாதவ், நவ்தீப் சைனி, குல்வந்த் கெஜ்ரோலியா, நாதன் கட்டர் நீல்.

**மும்பை இந்தியன்ஸ்**
**விடுவிக்கப்பட்டவர்கள்:** முஸ்தபிஜுர் ரகுமான், கம்மின்ஸ், அகில தனஞ்சய, டுமினி, சவுரப் திவாரி, தஜிந்தர் சிங், மோசின் கான், பிரதீப் சங்வான், எம்.டி நிதிஷ், சரத் லம்பா
**தக்கவைக்கப்பட்டவர்கள்:** ரோகித் சர்மா, ஹார்திக் பாண்டியா, ஜஸ்பிரித் பும்ரா, குர்னல் பாண்டியா, இஷான் கிஷான், சூரிய குமார் யாதவ், மயங்க் மார்கண்டே, ராகுல் சாகர், அங்குல் ராய், சிதேஷ் லாட், ஆதித்ய தாரே, எவின் லூவிஸ், பொலார்ட், பென் கட்டிங், மெக்லாரன், அடம் மில்னே, பான் குரொப்ட்.

**டெல்லி டேர்டெவில்ஸ்**
**விடுவிக்கப்பட்டவர்கள்:** கவுதம் கம்பீர், ஜேசன் றோய், குருகீரத் மான், கிளென் மக்ஸ்வெல், முகமது ஷமி, கிறிஸ்டியன், விஜய் சங்கர், அபிஷேக் சர்மா, ஷாபாஸ் நதீம், ஷியான் கோஸ், லியாம் பிளங்கெட், ஜூனியர் டாலா, நமன் ஓஜா
**தக்கவைக்கப்பட்டவர்கள்:** ஸ்ரேயாஸ் அய்யர், பிரித்வி ஷா, ரிஷப் பன்ட், மன்ஜோத் கல்ரா, கோலின் முன்ரோ, கிறிஸ் மோரிஸ், ஜெயந்த் யாதவ், ராகுல் திவேஷியா, ஹர்சல் படேல், அமித் மிஸ்ரா, ரபாடா, போல்ட், சந்தீப் லாமிசானே, ஆவேஷ் கான்.

**சன்ரைசர்ஸ் ஹைதராபாத்**
**விடுவிக்கப்பட்டவர்கள்:** தவான், சச்சின் பேபி, டான்மே அகர்வால், சகா, கிறிஸ் ஜோர்டன், கார்லோஸ் பிரீத்வைட், பிபுல் சர்மா, மெகடி ஹசன்.
**தக்கவைக்கப்பட்டவர்கள்:** டேவிட் வோர்னர், யூசுப் பதான், ரசிட் கான், சகிப் அல் ஹசன், ஸ்டான்லேக், வில்லியம்ஸன், முகமது நபி, புவனேஷ்வர் குமார், மணிஷ் பாண்டே, டி.நடராஜன், ரிக்கி புகி, சந்தீப் சர்மா, கோசாமி, சித்தார்த் கவுல், கலீல் அகமது, பாசில் தம்பி, தீபக் ஹூடா

**சென்னை சூப்பர் கிங்ஸ்**
**தக்கவைக்கப்பட்டவர்கள்:** டோனி (தலைவர்), ஜடேயா, ரெய்னா, யாதவ், டிவைன் பிராவோ, கரண் சர்மா, வற்சன், சர்துல் தாக்கூர், ராயிடு, முரளி விஜய், ஹர்பஜன் சிங், பிளாசிஸ், பில்லிங்ஸ், தாகிர், தீபக் சாகர், லுங்கி நெக்டி, ஆசிப், ஜெகதீசன், மோனு சிங், துருப் ஷோரே, சைதன்யா பிஷ்னோய், டேவிட் வில்லி.

**கொல்கத்தா நைட் ரைடர்ஸ்**
**விடுவிக்கப்பட்டவர்கள்:** மிச்செல் ஸ்ராக், ஜோன்சன், கரன், டெல்போர்ட், சீர்லஸ், இஷாங் ஜக்கி, அபூர்வ் வான்கடே, வினய் குமார்.
**தக்கவைக்கப்பட்டவர்கள்:** டினேஷ் கார்த்திக், ரொபின் உத்தப்பா, கிறிஸ்லின், சுப்மான் கில், நிதின் ராணா, ரிங்கு சிங், ஆன்ட்ரூ ரசல், சுனில் நரேன், ஷிவம் மவி, குல்தீப் யாதவ், பியூஷ் சாவ்லா, நாகர்கோட்டி, பிரஷித் கிருஷ்ணா

**கிங்ஸ் லெவன் பஞ்சாப்**
**விடுவிக்கப்பட்டவர்கள்:** ஸ்ரொய்னிஸ், அக்சர் பட்டெல், ஆரோன் பின்ஞ், மோகித் சர்மா, பரிந்தர் சரண், யுவராஜ் சிங், துவார்சிஸ், மனோஜ் திவார், அக்ஸ்தீப் சிங், பிரதீப் சாஹூ, மயங்க் தாகர், மன்சூர் தார்
**தக்கவைக்கப்பட்டவர்கள்:** கிறிஸ் கெய்ல், டேவிட் மில்லர், கருண் நாயர், மயங்க் அகர்வால், கே.எல். ராகுல், ஆர்.அஸ்வின், அங்கித் ராஜ்புத், ஆன்ட்ரூ டை, முஜிப் உர் ரஹ்மான்.

**ராஜஸ்தான் ரோயல்ஸ்**
**விடுவிக்கப்பட்டவர்கள்:** ஜெயதேவ் உனட்கட், அனுரீட் சிங், அங்கித் சர்மா, ஜதின் சக்சேனா, டிஆர்கி, பென் லாலின்
**தக்கவைக்கப்பட்டவர்கள்:** ஸ்டீவன் சிமித், பென் ஸ்டோக்ஸ், ஜோஸ் பட்லர், ஜோப்ரா ஆர்ச்சர், இஷ் சோதி, அஜின்கிய ரஹானே, கே. கவுதம், சஞ்சு சாம்சன், ஸ்ரேயாஸ் கோபால், ஆர்யமான் பிர்லா, மிதுன், பிரசாந்த் சோப்ரா, ஸ்டுவர்ட் பின்னி, ராகுல் திரிபாதி, தவல் குல்கர்னி, மகிபால் லாம்ரார். (ம)

# பிரேசிலிடம் உருகுவே அணி தோல்வி


## வீடு வாடகைக்கு தேவை

விருந்தினர் விடுதிக்கு ஏற்ற வீடு
யாழ். நகர் பகுதியில்
வாடகைக்கு தேவை.
(வாகன தரிப்பிட வசதியுடன்)
T.P: 077 95 92 628




பன்னாட்டு நட்புறவு கால்பந்துத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பிரேசில் அணி வெற்றிபெற்றது.

லண்டனில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பிரேசிலை எதிர்த்து உருகுவே மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் இரண்டு அணிகளும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிந்தது முதல் பாதி.

இரண்டாவது பாதியின் 76ஆவது நிமிடத்தில் பிரேசிலின் சார்பாக கோலொன்றைப் பதிவுசெய்தார் நெய்மர். அதன் பின்னர் இரண்டு அணிகளும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தின. உருகுவே பதிலடி கொடுப்பதற்காக பலமுறை முயற்சித்தது. கவானி, சுவாரஸ் கூட்டணி மேற்கொண்ட அனைத்து முயற்சிகளையும் நெய்மர், மார்செலோ கூட்டணி தகர்த்தது. இதையடுத்து முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பிரேசில். (ம)


ஸாம்சன் மொழியாய்வு மையத்தின 3 மாத
## சிங்களம்
10 சிங்கள புத்தகங்கள் இலவசம்

அரச, தனியார் ஊழியர்கள், தொழில்தேடுவோர், இளைஞர் யுவதிகள், ஆசிரியர்கள், வயதுவந்தோர் இணையமுடியும்!


சிங்களம் எழுதுதல், வாசித்தல் பயிற்சிகளுடன் நேரடியான உரையாடற்பயிற்சியின் மூலம் எவராலுமே 3 மாதங்களில் சரளமாக சிங்களத்தில் உரையாடமுடியும்.

| சனி,ஞாயிறு பிரிவுகள் | | திங்கள்,புதன் பிரிவுகள் | |
|---|---|---|---|
| பிரிவு 1 : | 04-05 | பிரிவு 1 : பி.ப | 03-04 |
| பிரிவு 2 : | 05-06 | பிரிவு 2: மாலை | 04-05 |

ஒவ்வொரு பிரிவுகளிலும் 20 பேருக்குமட்டுமே அனுமதி!
25.11.2018 வரை பதிவுசெய்வோருக்கு பயிற்சிக்கட்டணம் ரூபா 3000 மட்டுமே.

SAAMSON Experts in Language Training
279, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர். 077 621 4567 021 320 3313


## மரண அறிவித்தல்



### தம்பையா கனகரெத்தினம்

அனலைதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் றோட் ஆறுகால்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா கனகரெத்தினம் 16.11.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், பத்தினிப்பிள்ளையின் அன்புக் கணவரும், மாணிக்கவாசகம் (கனடா), காலஞ்சென்ற பாலசிங்கம் (கனடா) மற்றும் புண்ணியசிங்கம் (கனடா), நமசிவாயம் (இந்தியா), சபாரெத்தினம் (ஜேர்மனி), காலஞ்சென்ற பரமலிங்கம் (அனலைதீவு) மற்றும் பேரானந்ததவமணி (இந்தியா), செல்வரட்ணம் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சரோஜினிதேவி (கனடா), கோகிலாம்பாள் (கனடா), இராஜேஸ்வரி (கனடா), யோகராணி (இந்தியா), வாணி ( ஜேர்மனி), திருஞானசம்பந்தன் (நெதர்லாந்து), விக்னேஸ்வரி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும், விக்னேஸ்வரன் (ஜேர்மனி), சந்திரபாலன் (சுவிஸ்), ஞானாம்பாள் (கனடா), கருணாகரன் (யாழ்ப்பாணம்), சதீஸ்வரி (கனடா), லலிதா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆனந்தி (ஜேர்மனி), வாசுகி (சுவிஸ்), ரதிக்குமாரி (பிரான்ஸ்), கருணாகரன் (கனடா), ஜெகதீஸ்வரன் ( கனடா), புஸ்பராணி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும், சிவரூசன் (ஜேர்மனி), நிகிதா, காலஞ்சென்ற ஜோகிதா மற்றும் விதுசா (சுவிஸ்), மிதுசன், நிதுசன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.11.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் றோட்,
ஆறுகால்மடம்.

(CS/21166)(11,17)

தகவல்:- குடும்பத்தினர்,
செல்வரத்தினம் (சகோதரன்),
கருணாகரன் (மகன்)

077 563 2053, 077 138 6682
(Viber) - 077 864 4004

# கோக்லியுடன் மோதாதீர்கள்

## ஆஸ்திரேலிய வீரர்களை எச்சரிக்கிறார் பிளாசிஸ்




விசேட கருத்தரங்கு
24ஆம் திகதி நடைபெறவுள்ள
சுங்கத்திணைக்கள உதவி அத்தியட்சகர் II போட்டிப் பரீட்சை
காலம்
20.11.2018
செவ்வாய் 9.00 - 2.00 pm
விரிவுரையாளர்.
நுண்ணறிவு P. கமல்தாசன்
கணிதம் அன்ரன்
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ். நகர்.
T.P. 077 469 6695

போட்டிப்பரீட்சை விசேட கருத்தரங்குகள்
செவ்வாய் (20/ 11)
9.00 - 4.00
*சுங்கப்பரிசோதகர்
*ஆசிரியர்தெரிவு
சகல வினாத்தாள்களுக்கும்
அதிபர் சேவை தரம் - 3
செவ், வியாழன்
பி.ப. 4.30 - 7.30
076 688 3394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கி அருகில்)


"வியூகங்ளை வகுக்கிறோம் என்றுவிட்டு கோக்லியுடன் வார்த்தை மோதல்களோ அல்லது அவரை வம்புக்கு இழுப்பதையோ ஆஸ்திரேலிய வீரர்கள் செய்யக்கூடாது. அது ஆஸ்திரேலிய வீரர்களுக்கு பேராபத்தில் முடியும்'' என்று தெரிவித்தார் தென்னாபிரிக்க அணியின் தலைவர் பிளாசிஸ்.

இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடவுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ரி20 ஆட்டம் நாளைமறுதினம் ஆரம்பமாகிறது. இந்த நிலையில் தொடர் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே பிளாசிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

"கோக்லி ஒரு சண்டைக் கோழி. அவர் அனைத்துக்கும் தயாராகவே இருப்பார். ஒவ்வொரு அணியிலும் ஓரிரு வீரர்கள் இப்படியிருப்பார்கள். நாங்கள் அவர்களைப் பற்றி அணிக்கூட்டத்தில் விவாதிப்போம். அதாவது இப்படிப்பட்ட வீரர்களுடன் மோதல் போக்கு வேண்டாம், ஏனெனில் அது அவர்களுக்கு உத்வேகம் அளிப்பதில்தான் போய் முடியும் என்று ஒருவருக்கு ஒருவர் தெரிவித்துக் கொள்வோம். ஆஸ்திரேலியர்களும் இந்த விடயத்தில் கோக்லியைக் கவனமாகக் கையாள வேண்டும்'' என்று பிளாசிஸ் மேலும் தெரிவித்தார். (ம)


## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.